

தமிழரசு
16-2-1989 ரூ. 1



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 9-2-1989 அன்று டில்லியில் மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பின்போது முரசொலி மாறன், எம்.பி.யும் உடனிருந்தார்.



தமிழக சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியர் திரு தமிழ்க்குடிமகன் அவர்களை, பேரவை முன்னவரும் மாண்புமிகு கல்வி அமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் எதிர்க்கட்சித்தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்களும் பேரவைத் தலைவருக்கான இருக்கைக்கு அழைத்துச் சென்றனர். (8-2-89)


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

விபவ - மாசி 5

மலர்: 19 இதழ்: 16

16 - 2 - 1989



# மாநில வளர்ச்சிக்கு மகத்தான திட்டங்கள்

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,

மகேசன் குரலுக்கு இணையானது மக்களின் குரல் என்ற குடியாட்சித் தத்துவத்திற்கு ஏற்ப மக்களின் பேராதரவு பெற்று இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். இப்பேரவையில் முன்பு உறுப்பினர்களாக இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளவர்களையும் —புதிதாக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளவர்களையும் பாராட்டி மகிழ்வதோடு அனைவரும் இம்மாநில மக்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட இப்பேரவையைப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

**2.** இடையில் ஓராண்டு காலக் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு,

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு அமைவதற்காக நடைபெற்ற தேர்தல், வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இத்தேர்தல் வன்முறை தவிர்த்து, அமைதியான முறையில் நடைபெற்றது என்பது அரசியல் கட்சிகளின் பொறுப்பு உணர்ச்சியையும், அரசு அலுவலர்களின் கடமை உணர்ச்சியையும், வாக்காளப் பெருமக்களின் தெளிவு பெற்ற அரசியல் முதிர்ச்சியையும் ஒருங்கே உணர்த்துவதாகும். மக்களாட்சியின் மாண்புக்கு எள்முனையளவு ஊனமும் நேரா வண்ணம் தமிழ்ப் பெருமக்கள் இந்த அரசுக்குத் தங்களின் அன்பான ஆதரவை அளிப்பார்கள் என்பதற்குச் சான்றாக இந்தத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

3. பல்வேறு இனம், மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட இந்நாட்டின் ஒற்றுமையை மாநில சுயாட்சியோடு கூடிய முழுமையான கூட்டாட்சி முறையில்தான் கட்டிக்காக்க முடியும் என்பது இவ்வரசின் நம்பிக்கை. இதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது நமது விருப்பம். இவ்விருப்பம் நிறைவேறிட இது போன்ற ஒத்த கருத்துள்ள அனைத்து அமைப்புகளின் உறுதுணையோடு இவ்வரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. அதே போன்று அரசியல் சட்டத்தின் 8—வது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட பதினைந்து தேசிய மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசின் நிலை. இச்சட்டத் திருத்தம் நிறைவேறும் வரை, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்பதை இவ்வரசு பல்வேறு மட்டங்களில் வலியுறுத்தும். அதே நேரத்தில் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக இந்தி மொழியைத் திணிப்பதற்காக எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் இவ்வரசு தடுத்து நிறுத்தத் தயங்காது.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் டாக்டர்.பி.சி.அலெக்சாண்டர் உரை

5. கடும் பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்த்துச் சமாளிக்க வேண்டியதொரு காலக்கட்டத்தில் இவ்வரசு பொறுப்பை ஏற்றுள்ளது. எல்லாத் துறைகளிலும் —மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய அமைப்பு ரீதியான பல மாற்றங்களை உடனடியாகச் செய்வது இவ்வரசின் நோக்கமாக இருக்கும்.

6. தமிழகச் சட்டமன்ற மேலவை என்பது 65 ஆண்டுக்கால வரலாறு படைத்த ஒன்று. மேதைகள் பலரின் மேலான கருத்துக்கள் இடம் பெற்று அறிவு, அனுபவம், ஆகியவற்றின் எண்ணக் கருவூலமாக ஒளி விட்டதாகும். முதிர்ந்த ஞானம் படைத்த பெருமக்களின் அரிய ஆலோசனைகள் — அரசின் கொள்கைகளையும், அதன் திட்டங்களையும், சட்டங்களையும் செம்மையாக வடிவமைப்பதற்குப் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கின்றன. அத்தகு சீர்மிகு அவை 1986ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதை அறிவீர்கள். மிகத் தொன்மை வாய்ந்ததும் கீர்த்தி மிக்கதுமான அந்த அவையை மீண்டும் அமைத்திடுவதற்கு ஏற்றதொரு சட்டம் இம்மன்றத்தில் உங்களின் ஒப்புதலுக்காக உடனடியாக வைக்கப்படும்.


7. உள்ளாட்சி மன்றங்கள் மிகவும் நலிவுற்று இருப்பதால் அவை வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாத நிலையில் உள்ளன. உள்ளாட்சி மன்றங்கள், வளர்ச்சி அடைந்து விரைந்து செயல்படுவதற்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கத் தேவையான பல சீர்திருத்தங்களைச் செய்ய இவ்வரசு விழைகிறது.

நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலத்தை, மூன்று ஆண்டுகளிலிருந்து மீண்டும் ஐந்து ஆண்டுகளாக உயர்த்துவதற்கான சட்டம் இயற்றப்படும்.

8. சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் இல்லாமலேயே இயங்கி வருகின்றன. மாநகராட்சிகளின் சட்டங்களிலே வாக்குரிமை வயதைப் பதினெட்டு என்று 1980ஆம் ஆண்டிலேயே நிர்ணயித்திருந்தபோதிலும், அந்த அடிப்படையில் வாக்காளர் பட்டியல்கள் இதுவரை தயார் செய்யப்படவில்லை. அந்த மாநகரங்களில் வாழும் மக்களின் முறையீடு கேட்டு குறைபாடு களைய—மிக விரைவாக—அதாவது ஏப்ரல் மாதம் இத்தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதால், 1989ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளின்படி உள்ள வாக்காளர் பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு, விரைவிலேயே இத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏதுவாக, தற்போது மாநகராட்சிகளுக்கு மட்டும், வாக்குரிமை வயது இருபத்தோரு ஆண்டுகளாக தற்காலிகமாக இருந்திட வகை செய்யும் சட்டம் கொண்டு வரப்படும்.

9. உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து பறிக்கப் பட்டுள்ள அதிகாரங்களை மீண்டும் வழங்கிடவும்—மேலும் உரிய அதிகாரங்களைத் தந்திடவும்—அதன் வாயிலாக அந்த மன்றங்கள் வளர்ச்சிப் பணிகளில் முழு அளவில் ஈடுபடவும் வேண்டுமென இந்த அரசு கருதுகிறது. அதற்கேற்ப விரிவான மாற்றங்களைச் செய்திட விரைந்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

10. கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்கள் பல ஆண்டுகளாக நடக்காமலேயே இருந்திருக்கின்றன. கடந்த ஆண்டு, தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. எல்லா நிலைகளிலுள்ள




கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விரைவில் தேர்தல்கள் நடத்தப்பட்டு கூட்டுறவு இயக்கம் தமிழகத்தில் ஒரு வலுவான இயக்கமாக விளங்க வழிவகை செய்யப்படும்.


11. கடந்த சில ஆண்டுகளாக கிராம நிர்வாகத்தில் ஏற்பட்ட நிர்வாக மாறுதல்களால் பல நடைமுறைச் சிக்கல்களும் மக்களுக்குப் பெரும் சங்கடங்களும் பல்வேறு அத்யாவசியப் பிரச்சினைகளில் தேக்க நிலையும் உருவாகியுள்ளன. எனவே முன்பு இருந்த நிர்வாக முறை, இப்போதுள்ள முறை இரண்டையும் ஆராய்ந்து மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையில் கிராம நிர்வாக முறைகள் யாருக்கும் பாதகம் விளையாத அளவில் செம்மையாக்கப்படும்.

12. பெரும் செலவில் அரசு நடத்தி வரும் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்று வதில் பல குறைபாடுகள் மக்களால் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. அக்குறைகள் களையப்பட்டு சத்துணவுத் திட்டம் சத்துள்ள திட்டமாக திருத்தியமைக்கப்படும்.

இத் திட்டத்தைக் கண்காணிக்கவும் அருகாமையிலிருந்து பராமரிக்கவும் இதன் பயன் உரியவர்களுக்குப் போய்ச் சேரவும் ஏற்ற வண்ணம் பொறுப்பேற்று நடத்திடும் அதிகாரமும் நிதியாதாரமும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும்.


**13.** இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் இப்பொழுது தற்காலிகப் பகுதி நேரப் பணியாளர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் பணி, பகுதி நேரப் பணியாக இருந்தாலும், நிரந்தரமான பகுதி நேர உள்ளாட்சிப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்களின் பணி நிரந்தரமாக்கப்படும்.

**14.** நீதிமன்றங்களில் மதுவிலக்குச் சம்பந்தமாகத் தேங்கிக் கிடக்கும் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகளில் விரைவில் தீர்வுகாண மதுவிலக்குச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தற்போதுள்ள சட்டத்தை அமுலாக்குவதிலுள்ள குறைபாடுகள் களையப்படும்.




**15.** கடந்த காலத்தில் மதுவிலக்குச் சட்டத்தின் தொடர்பாக அரசால் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்து மது உற்பத்தியாளர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப் பட்டுள்ளன. அதனால் மாநில அரசுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பெரும் வருவாய் இழப்பு கோடிக்கணக்கில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றிடவும் மாநில அரசு தொடர்ந்து இழந்து வரும் நிதியாதாரத்தை மீட்டிடவும், பெருக்கிடவும் உரிய சட்டத் திருத்தமும், விதிகளில் மாற்றமும் உடனடியாக இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதை இந்த அரசு மகிழ்வுடன் அறிவிக்கிறது.

**16.** தென்மேற்குப் பருவ மழை நல்ல முறையில் இருந்தபோதிலும், மாநிலத்தின் பயிர் வளத்திற்கு மிகவும் முக்கியமான வடகிழக்குப் பருவ மழை எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. குறுகிய காலப் பயிராகிய குறுவை பாதிக்கப்பட்டது நம் அனைவருக்கும் தெரிந்ததே. சம்பாப் பயிரும் பல மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை உற்பத்தியில் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல் அல்லாமல், தமிழ்நாடு, வறட்சி ஆண்டான 1987–88ஆம் ஆண்டு உற்பத்தியைவிட தற்போது ஓரளவிற்குத்தான் அதிக உற்பத்தியைப் பெறக்கூடும் என்பது தெளிவான உண்மை. கர்நாடக அரசு காவிரியில் ஓரளவு நீரைத் திறந்து விட்ட நற்செயலினால் தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள பயிர்கள் பெரும்பாலும் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு, நாட்டின் பிற மாநிலங்களில் வேளாண்மை உற்பத்தி நல்ல முறையில் இருப்பதனால் நமது மாநிலத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் கொடுத்துக் கொண்டிருந்த 80,000 டன் அரிசியைக் குறைக்காமல் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தத் தேவையை உடனடியாக உணர்ந்து, பொது




விநியோக முறையைச் சிறந்த முறையில் செயல்படுத்த, இந்த ஆண்டில் நம் மாநிலத்திற்குத் தேவையான அரிசியைக் குறைத்திடாமல் மத்திய அரசு வழங்கக் கடமைப்பட்டுள்ளது.

**17.** மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத் திற்கு, விரைவான தொழில் வளர்ச்சி மிக முக்கிய மானதாகும். தொழில் வளர்ச்சிக்கான முதலீட்டிற்குப் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தி மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிரளிப்பது உடனடித் தேவை யாகும். மின் வழங்கல் உறுதியாகக் கிடைப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் இதில் அடங்கும். இதற்குரிய விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்கப் படும். நலிவடைந்த தொழிற்சாலைகளின் பிரச்சினையை உடனடியாகச் சமாளிக்க வேண்டி யுள்ளது. இந்த ஆலைகளுக்குச் சாத்தியமான அளவு புத்துயிரளிக்கின்ற வகையில் மிக விரிவாக ஆய்வு நடத்தி ஆவன செய்யப்படும்.

**18.** மாநிலங்களில் மைய அரசு ஏற்படுத்தும் தொழில் முதலீட்டில் 1975–76ஆம் ஆண்டு ஐந்தாவது இடம் வகித்த தமிழகம் 1986–87ஆம் ஆண்டில் பத்தாவது இடம் வகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில், இம் மாநிலத்திற்கு மத்திய அரசின் முதலீட்டுப் பங்கு அதிக அளவு கிடைக்கச் செய்ய இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

**19.** கடந்த நாற்பதாண்டுகளாக மத்திய அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகளினால் மாநில அரசின் நிதி ஆதாரங்கள் குறைந்துகொண்டு வந்துள்ளன. மக்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய நினைக்கின்ற எந்த மாநில அரசும் நிதிப் பற்றாக் குறை காரணமாகத் தன்னுடைய முயற்சிகள் வீணாகின்றன என்பதை அறியும்போது ஏமாற்றத் துக்கு உள்ளாவது இயல்பேயாகும். தொடர்ந்து பல நிதிக் குழுக்களில் தமிழக அரசும் ஏனைய மாநில அரசுகளும் நிதிப் பங்கீட்டில் தங்களுக்கு நியாயம் வழங்கப்படாததையும் ஏனைய முரண்பாடு களையும் சுட்டிக்காட்டி வந்துள்ளன. இம் மாதம் நிதிக் குழுவினர் இங்கு வரும்போது அவற்றை நினைவுபடுத்துவதோடு மாநிலத்தின் பல தேவை களையும் இந்த அரசு வலியுறுத்தும்.

**20.** மாநிலத்தின் நிதி நிலையைப் பொறுத்த மட்டில், அரசு மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. தமிழகம் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பளிக்கப் பட்ட திட்ட அளவிற்கும் மேலாகச் செயல்படும் என்ற நிலை முன்னர் இருந்ததால் பெருமிதம் அடைந்து வந்தோம். ஆனால் நிதி நிலவரம் பெரும் சீர்கேடு அடைந்திருந்த நேரத்தில் நிதி ஆதாரங் களுக்கு எட்டாத அளவில் நடப்பாண்டுக்காக அறிவிக்கப்பட்ட ரூ. 1,457 கோடி அளவிற்கான திட்டத்தைக் குறைக்கக் கூடிய நிலை இப்போது தவிர்க்க இயலாததாகி விட்டது.

**21.** தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதன் மூலம், மாநிலத்தின் நிதி நிலையைச் சீரமைப்பதோடு, பொருளாதார நிலையை வலுவான தாக மாற்றியமைக்கவும் வேண்டும். மேலும், இந்த அரசை மலைபோல் நம்பியுள்ள பொதுமக்களின் எதிர்பார்ப்புகளையும் பேராவலையும் நிறைவேற்றும் வகையில், வரும் ஆண்டுத் திட்டத்தை வரையறுக்க வேண்டியது அரசின் ஒரு பெருங்கடமையாகும். அந்தத் திட்டம் மக்களின் முன்னுரிமைகளைப் பிரதிபலிப்பதாக அமைவதோடு, நிறைவேற்றி முடிக்கக் கூடிய ஒன்றாகவும் திகழும்.


**22.** அத்திட்டங்களின் மூலம் வேளாண்மை உற்பத்தியும் தொழில் வளர்ச்சியும் பெருகி, நிறைந்த வேலை வாய்ப்புகளும் உருவாகும் என்பது இவ்வரசின் நம்பிக்கை.

**23.** ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று பேரறிஞர் அண்ணா கூறியதற்கு இணங்க பல்வேறு நலத் திட்டங்கள் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சியைப் பெருக்கத் தக்க வகையில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**24.** இந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் — என உறுதியளிக்கப்பட்டுள்ள — மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மற்றும் பொது மக்களுக்குமான பல்வேறு திட்டங்கள், மற்றும் சட்டங்களின் முழு விவரங்கள் இந்த அவையில் அவ்வப்போதும், மற்றும் வரவு—செலவுத் திட்ட அறிக்கையின் வாயிலாகவும் இந்தக் கூட்டத் தொடரில் உங்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படும்.

**25.** சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்துவது என்ற கொள்கையை நிறைவேற்றுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுப்பணி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய வேலை வாய்ப்பில் முப்பது விழுக்காடு, வழக்கமாகப் பின்பற்றப்படுகிற வகுப்புவாரி இட ஒதுக்கீடு அடிப்படையில் மகளிருக்கு ஒதுக்கப்படுமென அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர, தொடக்கப் பள்ளிகளில் முதல் இரண்டு வகுப்புகளில் ஆசிரியைகள் பணி செய்வது சாலச் சிறந்தது என்ற காரணத்தினால், எதிர்காலத்தில் எழும் காலியிடங்களைப் பெண் ஆசிரியர்களைக் கொண்டுதான் நிரப்பப்படும் எனவும் அரசு முடிவெடுத்துள்ளது. மகளிரின் சமுதாய நிலையை எல்லா வகைகளிலும் மேம்படுத்துவதற்கான வேறுபல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்த இந்த அரசு முனைந்திடும்.

**26.** எளிய மக்களைப் பாதிக்காத வகையில் வருவாய் வசதிகளைப் பெருக்காததாலும், ஏற்கனவே உள்ள நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்படாததாலும் தமிழக அரசின் நிதிநிலை மிகவும் மெலிந்து தளர்ந்துள்ளது. எனவே அரசின் வருவாயைப்



பெருக்க அனைத்து முயற்சிகளும் வேகமாக எடுக்கப்படும். ஏழை எளியோர்களின் இளைத்த தோள்களில் அந்தச் சுமை ஏற்றப்படாத வகையில் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதேநேரத்தில் பொதுப் பணம் விரயம் ஆவதைத் தடுத்து, தேவையற்ற திட்டங்கள் கைவிடப்பட்டு, பயன் உள்ள திட்டங்கள் சீரமைக்கப்பட்டு, புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு, பொது நிதியின் ஒவ்வொரு காசும் பொது மக்களின் நலத்திற்காகச் செலவிடப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இவ்வரசு இயங்கும்.

**27.** அரசு வகுத்திடுகின்ற திட்டங்களையும், நீங்கள் நிறைவேற்றுகின்ற சட்டங்களையும் செம்மையாகச் செயலாக்குவதற்கு ஏற்ற வகையில் நிர்வாக இயந்திரம் முடுக்கப்படும். மேல்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையில் அனைத்துத் துறைகளிலும் நிர்வாக முறைகள் புதுக்கோலம் பூண்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, எடுக்கப்படுகிற ஏற்றமிகு முடிவுகளும் இனிய நல்வாழ்வுத் திட்டப் பணிகளும் உடனடியாக நடைமுறைப் படுத்தப்படுகின்ற உயர்ந்த நோக்கம் மிக விரைவில் செயலாக்கம் பெறும்.

**28.** அரசின் திட்டங்கள் தொய்வின்றிச் செயல்படவும், திட்டங்களின் பயன்கள், உரிய இடத்திற்கு உரிய காலத்தில் சென்று, உரியவர்களை அடையவும்—அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு என்றென்றும் தேவையானது. அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக ஒரு ஊதியக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்ற பின்னர், அவற்றைக் கவனமாகப் பரிசீலித்து உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**29.** மக்களுக்கும், நாட்டுக்கும் பணிபுரிய இந்தப் பேரவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புப் பெற்ற நீங்கள், கருத்துக்களைக் கருத்துக்களோடு மோத விடும் ஜனநாயக மரபைக் கடைப்பிடிக்கும் போது கூட, விவாதங்களில் வெம்மைக்கு இடம் தராமல் ஒளிக்கு மட்டுமே முதலிடம் தந்து இந்த அவையை நாடு போற்றவும் நானிலம் போற்றவும் நடத்திச் செல்ல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திடுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மேதகு தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 11.2.1989ல் ஆற்றிய உரை.**



## மக்களின் அரசு இது

**"ஆயிரமாயிரம் திறமைமிகு அலுவலாளர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது; ஆட்சி உண்மையிலேயே செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றால் வயலில்-தொழிற்சாலையில், அங்காடியில் பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் 'ஆட்சி நடத்திடுவோர் நாமே' என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்ய வேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடந்திடச் செய்ய வேண்டும். இதழ் நடத்துவோர் உடனிருந்து முறை கூறிட வேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள். "நாமாகத் தேடிப் பெற்றுக் கொண்ட அரசு இது; நம்முடைய துணையை நம்பியே இயங்கும் அரசு இது. எனவே இது செம்மையாக நடந்திட, நாம்தான் துணையிருக்க வேண்டும்" என்று ஒத்துழைத்திட மக்கள் முனைந்து நின்றிட வேண்டும்.**

—பேரறிஞர் அண்ணா

**[ முதல்வர் பொறுப்பேற்றவுடன் 15-3-67 அன்று வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து ]**



# ஆடு மயிலே!

ஆடு மயிலே — மகிழ்ந்து — ஆடுமயிலே (ஆடு)
ஆண்டதமிழ் வாழ்கவென ஆடுமயிலே

கூடுபகை நம்தமிழ்க்குக் கேடுதர வந்தாலும்
கொண்டஎழில் மாறாமல் கோலேந்தி வந்ததென (ஆடு)

வந்தமொழி அத்தனைக்கும் வாழ்வு கொடுத்தோம்
வாதுகெட்ட மாந்தரெனப் பேரும் எடுத்தோம்
இந்தநிலை நீங்கிடவே போரும் தொடுத்தோம் (ஆடு)
எதிர்த்தபகை ஏங்கிடவே வென்று முடித்தோம்

பொங்குபுகழ் கொண்டதுதான் சங்கத் தமிழாம்
போற்றுகுறள் ஒவியமோ வாழ்க்கைத் துணையாம் (ஆடு)
இங்கதனை ஏற்றமுறக் காத்து மகிழ்வோம்
எங்கள்தமிழ் எங்கள்தமிழ் என்று புகழ்வோம்

கவியரசு
முடியரசன்

# ஒளிமயமான எதிர்காலம் உருவாக...

## புதுடில்லி முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் கருத்துரை

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர்களே, மாண்புமிகு மத்திய அமைச்சர்களே, நண்பர்களே, தோழர்களே!

முன்பெல்லாம் பல தடவை முதலமைச்சர்கள் மாநாட்டில் பங்குகொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இருந்தாலும், இந்த மாநாட்டிற்கு வருகை தரும் புதிய முதல்வர்களுள் நானும் ஒருவன். பாரதப் பிரதமர் அவர்களுக்கும் பிற மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கும், ஏனைய மத்திய அமைச்சர்களுக்கும் முதற்கண் என்னுடைய உளமார்ந்த வாழ்த்தையும் வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன்.

இந்த மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் 11 இனங்கள் இடம்பெற்றிருக்கின்றன. என்னுடைய தொடக்க உரையில் என்னுடைய அரசின் நிலைமையை உங்கள் அனைவருக்கும் சுருக்கமாக எடுத்துக்கூற விழைகிறேன். தேவையான அளவுக்கு நம்முடைய அரசு அலுவலர்கள் இந்த மாநாட்டில் எங்கள் அரசின் நிலையை விரிவாக எடுத்துக்கூறுவர். மைய-மாநில நிதிஉறவு தொடர்பாகச் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளவாறு இந்த் நிதி உறவுத் தொடர்பான குறிப்பிட்ட சில பிரச்சனைகளை இம் மாநாட்டில் ஆராயவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

சரக்கு அனுப்புதல்மீதான வரி தொடர்பான பொருள் முதலாவது இனமாகும். பன் மாநிலங்களுக்கிடையே சரக்குகள் அனுப்பப்படுவதன்மீது வரிவிதிக்க இயலும்பொருட்டு, அரசியலமைப்பின் 46ஆம் திருத்தச் சட்டம் 1982ஆம் ஆண்டுக்கு முன்பே இயற்றப்பட்டது. இவ்வாறு சரக்கு அனுப்பப்படுவதன்மீது வரி விதிப்பது நீண்டகாலமாகச் செயற்படுத்தப்படாமல் உள்ளது. இதற்கு விரைவில் ஆவன செய்யவேண்டுமென்று வலியுறுத்துகிறோம். பன் மாநிலங்களுக்கிடையே சரக்குகள் பரிமாற்றம் செய்துகொள்வதன்மீது திணிக்கப்படுகிற மத்திய விற்பனை வரி, பெருமளவில் தவிர்க்கப்படுவதைத் தடுக்க அனுப்புகை வரி அவசியமாகும். இந்த அனுப்புகைவரி, மத்திய் விற்பனை வரிக்குத் துணையாக இருக்கின்றவகையில் மத்திய விற்பனை வரியைப் பொறுத்தமட்டில் நமக்கு என்ன கிடைக்கின்றதோ, அதேபோன்று அனுப்புகை வரி வீதமும் அந்த வரித் தொகையைப் பங்கிட்டுக் கொள்வதும், வரிவிலக்கு அளிப்பதற்கான ஏற்பாடுகளும் அமைய வேண்டும். இந்த நியாயமான கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டால், இப்பிரச்சனைகள் ஒவ்வொன்றையும் மீண்டும் பரிசீலிக்கவும் அனுப்புகை வரியை நடைமுறைப்படுத்துவது குறித்து முடிவைத் தாமதப்படுத்தவும் தேவை இருக்காது.

நிகழ்ச்சி நிரலில் உள்ள இரண்டாவது இனம் பற்றி நான் இப்போது குறிப்பிட விழைகிறேன். இந்த



இரண்டாவது இனம், வனஸ்பதி, மருந்துப் பொருள்கள்,
மருந்துகள், சிமெண்ட், காகிதம், காகித அட்டை,
பெட்ரோலியப் பொருள்கள் போன்றவற்றின்மீது கூடு
தல் ஆயத்தீர்வை விதிப்பது தொடர்பானதாகும்.
இதனை வன்மையாக எதிர்க்கும் நிலையில் இருக்கி
றோம்.

புகையிலை, சர்க்கரை, துணி ஆகியவற்றின்
மீது கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் திட்டத்தைக்
கொண்டுவந்தபோதும்கூட, சிறப்புத் தீர்வைகள் உட்பட
அடிப்படைத்தீர்வை வகையிலும், கூடுதல் ஆயத்தீர்வை
வகையிலும் கிடைக்கின்ற வருமானத்தை 2:1 என்ற
விகிதாசாரத்தில் மத்திய அரசு பேணிவர வேண்டு
மென்று தேசிய வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறை
வேற்றியதை நாம் அனைவரும் அறிவோம். எடுக்கப்
படும் சரக்குகளின் மதிப்பில் 10.8 சதவீதத்திற்குக் கூடு
தல் ஆயத்தீர்வை விதிக்கவேண்டுமென்று தேசிய
வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.
கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் இத்திட்டம் 30 ஆண்டு
களுக்கும் மேலாகச் செயலில் இருந்து வந்துள்ளபோதி
லும், இந்த விகிதாச்சார அளவு இன்னும் எய்தவில்லை.
பல ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய, மாநில அரசு
களின் உயர்நிலை அமைப்புகளால் ஏற்றுக்கொள்ளப்
பட்ட மாநில அரசுகளின் நியாயமான கோரிக்கைகளை
நிறைவேற்றுவதில் மத்திய அரசுக்குள்ள ஆர்வமின்
மையை இது பிரதிபலிக்கிறது.

அதற்கிணங்க, விற்பனை வரிக்குப் பதிலாக
மேலும் பல பொருள்கள்மீது கூடுதல் ஆயத்தீர்வை
விதிப்பதை இந்த அரசு, கொள்கையின் அடிப்படை
யிலும், கடந்த கால அனுபவத்தின் அடிப்படையிலும்
உறுதியாக எதிர்க்கிறது என்பதனை நான் வலியுறுத்
திக் கூற விழைகிறேன். இத்திட்டம் முதன்முதலில்
1957-58ஆம் ஆண்டில் செயற்படுத்தக் கருதப்பட்ட
போதே தமிழ்நாட்டில் அப்போதைய அரசு இதனை
எதிர்த்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன்.
அப்போதைய அந்த அரசு, காங்கிரசுக் கட்சியைச்
சேராத அரசு அல்ல ஏன்பது இங்கே குறிப்பிடத்தக்க
தாகும். அப்போதிருந்த முதலமைச்சர் திரு. காமராசர்
அவர்கள் ஆவார்.

மாநிலங்களுக்கிடையேயான பல்வேறு கூட்டங்
களில் விவாதிக்கப்பட்டவாறு மாநிலங்களுக்கிடையே
விற்பனை வரிவிதிப்பில் காணப்பெறும் வேறுபாடுகளால்
விளைந்த பிரச்சினையின் தொடர்பாக விற்பனை வரி
வீதங்களை நேர்ப்படுத்துவதில் முன்னேற்றமான முயற்சி
கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பிரச்சினை, குறிப்
பாக அண்டையிலுள்ள பெரும் மாநிலங்களிலிருந்து
வர்த்தக நடவடிக்கைகளைத் தங்கள் பகுதிகளுக்குக்
கொண்டுசெல்ல விழையும் மத்திய அரசின் நேரடி
ஆட்சிப் பகுதிகளில் எழுகிறது. மத்திய அரசின் நேரடி
ஆட்சிப்பகுதிகள் போட்டியிட்டுக்கொண்டு வரிவீதங்
களைக் குறைப்பதைத் தவிர்க்குமாறு மத்திய அரசு
அந்த ஆட்சிப் பகுதிகளுக்கு எடுத்துரைக்க வேண்டு
மென்று நாங்கள் வலியுறுத்திக்கூற விழைகிறோம். இவ்
வாறு மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகள் வரி வீதங்
களைக் குறைப்பது ஒட்டுமொத்தமாக நாட்டிற்குக்
கிடைக்கப்பெறும் வருவாய் ஆதாரங்களைக் குறைக்கும்.
அண்டை மாநிலங்களில் நிலவும் வரி வீதங்களுக்கிசைய
மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் வரி வீதங்
கள் வைத்து வரப்படவேண்டும் என்று அவற்றிடம்
மத்திய அரசு வற்புறுத்தும்போது, அவற்றின் நிதி
வாயில்களைத் தக்கவாறு மத்திய அரசு பெருக்குவதன்
மூலம் இதனை எய்தலாம். பல்வேறு மாநிலங்கள்
வரையறுக்கும் வரி வீதங்களில் தலையிடும் நிலையில்
அமையும் மத்திய விற்பனைவரி நடுவர் மன்றம் அமைப்
பதற்குத் தேவையுள்ளதாக எங்களுக்குத் தோன்ற
வில்லை. அந்த வகையில் மாநில அரசுகளின் அதிகாரங்
களைப் பறிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவியலாது.

நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ள ஏனைய
இனங்கள், கொள்கைப் பிரச்சனை எதையும் பெரிய
அளவுக்குத் தோற்றுவிக்கவில்லை.

இரயில்வேத் துறை பொருள்களை ஒப்படைப்
பதற்கு முன்னர் விற்பனைவரி அதிகாரிகளிடமிருந்து
இசைவினைப் பெறவேண்டும் என்னும் கருத்தை நாங்கள்
ஆதரிக்கிறோம். இதுதொடர்பாக, எளிய, அதேநேரத்
தில் விரைவான நடைமுறைகளை வகுக்க நாங்கள்
ஒத்துழைக்க இசைகிறோம்.

வெளிநாட்டு உதவிபெறும் திட்டங்களைச்
செயற்படுத்துவதில் மத்திய அரசு எந்த அளவிற்கு
ஆர்வங்கொண்டுள்ளதோ அதே அளவிற்கு நாங்களும்
ஆர்வங்காட்டுகிறோம். ஆனால் இத்திட்டங்களால்
பொதுவாக மாநில அரசுகளுக்கு அதிக நிதிச் சுமை ஏற்
படுகிறது. வெளிநாட்டு உதவியை மத்திய அரசு எந்த
வரையறை-நிபந்தனை ஆகியவற்றின்படி பெறுகிறதோ
அதே வரையறை -நிபந்தனையின் அடிப்படையில்
அந்தத் திட்டங்களுக்குரிய கடனுதவித்தொகை முழு
வதையும் மாநில அரசுகளுக்கு வழங்கவேண்டுமென்று
இதுதொடர்பாக மத்திய அரசிடம் நாங்கள் வலியுறுத்
திக் கூற விழைகிறோம்.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிக் குறிப்பு
களின்படி வங்கிக் கிளைகளைத் திறக்க உரிய வசதி
களைச் செய்து கொடுப்பதில் நாங்கள் ஒத்துழைப்பு
நல்குவோம். வழங்கப்பட்ட கடன் தொகைகளை வசூ
லிப்பதில் வங்கிகளுக்கு மாநில அரசு எந்த அளவிற்கு
உதவிபுரிவது சாத்தியம் என்பதுபற்றி நாங்கள் ஆய்வு
செய்வோம். மாநில நிதியுதவி நிறுவனங்கள், மாநிலத்
தொழில் வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குப்
போதிய அளவிற்கு நிதியாதாரம் வழங்கப்படவேண்டும்
என்பதையும், அவை தொழில் அடிப்படையில் நன்
னிலையில் இயக்கப்படவேண்டும் என்பதையும் நாங்கள்
ஏற்றுக்கொள்கிறோம். இத்தகைய நிறுவனங்களுக்கு
அரசியல்வாதிகள் தலைவர்களாக நியமிக்கப்படமாட்
டார்கள் என்று எங்களுடைய புதிய அரசின் செயல்
நடவடிக்கைகளில் ஒன்றாக நான் அறிவித்துள்ளேன்.

கிராமப் பகுதிகளிலுள்ள நிலமற்ற தொழி
லாளர்களுக்குத் தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தையும்,
வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்குக் குடிசைக்கான
ஈட்டுறுதித் திட்டத்தையும் கொண்டுவர மத்திய அரசு
முயற்சி மேற்கொண்டுள்ளது குறித்து நாங்கள் வரவேற்
கிறோம். இத்திட்டங்களைச் செயற்படுத்த எங்கள் ஒத்
துழைப்பை வழங்கும்போது, நிலமற்ற வேளாண் தொழி
லாளர்களுக்குத் தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தில் வழங்
கப்படும் 1000 ரூபாய் மிகவும் குறைவாக உள்ளது
என்பதையும் நான் இங்குச் சுட்டிக்காட்ட விழை
கிறேன். இத்தொகை ஒருவரின் இறுதிச்சடங்குச் செல
வுக்குக்கூட போதியதாக இல்லை. இவ்வாறிருக்கையில்

தமிழன் தமிழைப் படிக்கத்
தொடங்கி விட்டான்; தமிழைப்
போற்றத் தலைப்பட்டுவிட்டான்-
தமிழருக்குத் தனிப் பெருமை,
தனது மொழிக்கு, தன் தாய்
மொழிக்குத் தனது பணியைச்
செய்திட முன் வந்துவிட்டான்.
நாடெங்கும் தமிழ்த் திருநாட்கள்,
முத்தமிழ் முழக்கங்கள் நடை
பெறும் நன்னாளைக் காண்கி
றோம் இன்று!

—பேரறிஞர் அண்ணா



## முதல்வரின் பாராளுமன்றச் செயலாளர்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பாராளுமன்றச் செயலாளராக (Parliamentary Secretary) சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 11.2.89 அன்று அவர் பதவி ஏற்பு உறுதி மொழி எடுத்துக்கொண்டார்.

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு எல். கணேசன் அவர்கள்.

குடும்பத்தலைவர் இறந்தபின், அவருடைய குடும்பத்தினர் குடும்பத்தை நடத்துவதற்குத் தேவைப்படும் அளவு தொகை வழங்குவது இன்றியமையாததாகும். எனவே, 3000- ரூபாய்க்குக் குறையாமல் வழங்குமாறு நான் மத்திய அரசை வேண்டுகிறேன்.

கோல் இந்தியா, என்.டி.பி.சி. (NTPC) நிறுவனம், பெல் (BHEL) நிறுவனம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களுக்கு, மாநில மின்வாரியம் செலுத்த வேண்டிய காலங்கடந்த நிலுவைத் தொகையை வசூலிப்பது இந்நிகழ்ச்சி நிரலின் கடைசி பொருண்மையாகும். பல மின்வாரியங்களில், பெருமளவு தொகை நிலுவையாய் இருப்பதற்கு, அந்நிலையங்களின் கடுமையான நிதிப்பற்றாக்குறையே முக்கிய காரணமாகும். மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்கும் நிதியுதவி போதிய அளவிற்கு இன்மையும், மாநிலங்களும், மின்வாரியங்களும் வெளி அங்காடியில் கடன் திரட்ட விதிக்கப்பட்ட வரம்பின் அளவும் இந்நிலைக்கு முதற் காரணமாகும். அண்மையில் கல்கத்தாவில் நடைபெற்ற ஆறு முதலமைச்சர்கள் அடங்கிய மாநாட்டில், தேசியக் கடனுதவிக் குழு அமைப்பது பற்றியும், அக்குழு கடனுதவித் தொகையைத் திரட்டுவதில் மாநிலங்களுக்குச் சமபங்கு அளிப்பது குறித்து முடிவுசெய்வதுபற்றியும் பரிந்துரைக்கப்பட்டது. அப்பரிந்துரைகளை நாங்கள் முற்றிலும் ஒப்புக்கொள்கிறோம். மின்வாரியங்களின் மோசமான நிதிநிலைக்கு மற்றொரு காரணமாக, மத்திய அரசு நிலக்கரி, எண்ணெய் ஆகிய இடுபொருட்கள், இரயில்வே சரக்குக்கட்டணம், மின்உற்பத்தி-அனுப்புகைச் சாதனம் முதலியவற்றின் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் மேலும் மேலும் அதிகரிப்பது அமைகிறது. இப்பிரச்சினைகள் பற்றி நாம் ஆராயவில்லையென்றால், மின்வாரியங்களின் நிதிநிலைமையைச் சீராக்க இயலாது.

மாநில மின்வாரியம் செலுத்தாமலுள்ள காலங்கடந்த நிலுவைத்தொகையை மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் மத்திய உதவித் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம் என்று நிகழ்ச்சி நிரலில் ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தினை அறவே ஏற்கவியலாது. இத்தகைய கருத்தேதும் இருந்தால் அதனை உடனடியாகக் கைவிடவேண்டும். தேசிய நிதி ஆதாரங்களிலிருந்து, மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிப்பதென்பது நம்முடைய சட்டப்படியான உரிமையாகும். இதனை, ஒரு வணிக நிறுவனம் மற்றொரு வணிக நிறுவனத்திற்குச் செலுத்தவேண்டிய ஒப்பந்த அடிப்படையிலான தொகையுடன் இணைப்பது, எவ்விதத்திலும், சட்டஞ்சார்ந்ததோ, நேர்மையானதோ, நியாயமானதோ அல்ல.

இம்மாநாட்டில் விவாதத்திற்கு உரிய பிரச்சினைகள் தொடர்புடைய பொதுவான சில கருத்துக்களைக் குறிப்பிட விழைகிறேன். மத்திய மாநில நிதித் தொடர்பு பற்றிய பிரச்சினைகள்-வரி விதிப்பது தொடர்பானதாக இருந்தாலும் அல்லது வங்கிக் கிளைகளை ஏற்படுத்தி விரிவாக்குவது தொடர்பானதாகவோ அல்லது சமூகப் பாதுகாப்புத் தொடர்பானதாகவோ வணிகம் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பானதாகவோ இருந்தாலும் - இவை அனைத்தும் தொடர்ந்து தீவிரமாகக் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படவேண்டியவையாகும். முக்கியக்கொள்கைப் பிரச்சினைகளை வழக்கமர்க நிருவாகப் பிரச்சினைகளுள் சேர்க்க இயலாது. மேலும் இதனை நீண்டகால இடைவெளியிலும், துண்டு துண்டாகவும் முதலமைச்சர் மாநாட்டிற்கு விவாதத்திற்குக் கொண்டுவரலாகாது. இதற்கு மத்திய - மாநிலங்களுக்கிடையேயும் மாநிலங்களுக்கிடையேயும் கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்கான அமைப்பை உருவாக்குவது அவசியமாகும். இது தொடர்பாக மத்திய அரசும் மாநில அரசுகள் தங்களுக்கிடையே கலந்தாலோசிப்பது அவசியமாகும்.

இதன் அவசியத்தை உணர்ந்து, நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள், மத்திய மாநிலங்களும், மாநிலங்கள் ஒன்றோடொன்றும், கலந்தாலோசிப்பதற்கு, அரசியலமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவில் வகை செய்துள்ளனர். மத்திய மாநில உறவுகள் குறித்த குழுவும், அண்மையில் இதைப்பற்றி ஆராய்ந்து 263ஆம் பிரிவின்படி, மாநிலங்களிடையே குழுவை ஏற்படுத்துவதற்கு வலுவாகப் பரிந்துரைத்துள்ளது. குழுவின் ஆய்வு வரம்பு அல்லது அதன் நடைமுறைகள், அமைப்புத் தொடர்பாக குழுவின் பரிந்துரைகள் பற்றிய விவரங்களை ஆராய்வதற்கு இது தக்க தருணமல்ல. இத்தகைய அமைப்பை ஏற்படுத்துவதை மேலும் தள்ளிப்போடலாகாது என்பதை உறுதி செய்யவேண்டியது அவசியமாகும். பன்மாநில அரசுக் குழு ஏற்படுத்துவது ஏன் அவசியமானது என்ற அடிப்படைக் காரணத்தைக் கமிஷன் வலியுறுத்தியுள்ளது. அறிக்கையின் பத்தி 9.1.07இல் பின்வருமாறு குறிப்பிடப் பட்டது;

அனைத்தையும் உள்ளடக்கிய பன்மாநிலக் குழுவை ஏற்படுத்துவதன் அவசரத்தேவையில் ஒரு வரலாற்றுக் குறிப்பும் அடங்கியுள்ளது. 1967க்கு முன்னர் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி பதவியில் இருந்ததால், மத்திய மாநில அரசுகளுக்கிடையே எழும் வேறுபாடுகளையோ பிரச்சினைகளையோ கட்சி அளவிலேயே தீர்ப்பது எளிதாக இருந்தது. 1967லிருந்து மத்திய அரசில் இருக்கும் கட்சியைத்தவிர வேறு கட்சிகளோ கூட்டணிகளோ பல மாநிலங்களில் ஆட்சியில் இருந்துள்ளன. இந்நிலையில் வட்டார, பன்மாநிலப் பிரச்சினைகள் குறித்து வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், 263ஆம் பிரிவின்கீழ் விரிவான ஏற்பாடுகளுடன் நிலையான பன்மாநிலக் குழுவை ஏற்படுத்துவது அவசியமாகும்.

263ஆம் பிரிவின்கீழ் பன்மாநில அரசுக் குழுவை ஏற்படுத்தவேண்டும் என்றும், அதன் ஆய்வு வரம்பு, நடைமுறை, அமைப்புத்தொடர்பான விவரங்களைமாநில முதலமைச்சர்கள், பாரதப் பிரதமரைச் சந்தித்து விவாதிக்கவேண்டும் என்ற இந்த நியாயமான கோரிக்கையை இம்மாநாடு ஏற்றுக்கொள்ளவேண்டும்

# செய்திகள் செய்திகள்

**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் 20-வது நினைவு நாளையொட்டி 3.2.89 அன்று தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 1500 முக்கிய திருக்கோயில்களில் ஏழைகளுககுச் சமபந்தி மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சற்றொப்ப 5 இலட்சம் பேர் பங்கு கொண்டனர். இதில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டனர்.

**ம**துரை கிழக்கு மற்றும் மருங்காபுரி ஆகிய தொகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் மார்ச் திங்கள் 11ஆம் நாளன்று நடைபெறும் எனத் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

**ச**வுதி அரேபியாவில் உள்ள இஸ்லாமியரின் புனித நகரமான மெக்காவின் 'கஅபா' பள்ளிவாசல் மதகுரு (இமாம்) அல்சபைல் 11.2.89 அன்று சென்னை வருகை தந்தார். திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள வாலஜா பெரிய மசூதியில் நடந்த ஜும்மா தொழுகையை நடத்திவைத்தார். மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சாதிக்பாட்சா அவர்களும், சென்னைநகர ஷெரீப் திரு அப்துல்அலி மற்றும் ஏராளமான இஸ்லாமியர் பெருமக்களும்தொழுகையில்கலந்து கொண்டனர்.

**த**மிழ்நாட்டின் கிராமப்புற சுகாதாரத்திற்காக டென்மார்க் அரசு ரூ. 16கோடி நிதி உதவி அளித்திட முன்வந்து இருப்பதாக, 7.2.89 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தூதுவர் திரு ஜென்ஸ் ஓர்ல்டன் பெல்ட் அவர்கள் தெரிவித்தார்.

**க**ல்வி, திரைப்படத்துறைகளுக்கு வழங்குவதுபோல் மாவட்டந்தோறும் சிறந்தமுறையில் நேர்மையாக வரிகட்டிய வியாபாரிகளுக்கு மாவட்ட அளவில் பரிசு வழங்கவேண்டும் என்ற வியாபாரிகளின் கோரிக்கை ஏற்கப்படும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஆர்க்காடு வீராசாமி அவர்கள் ஆர்க்காட்டில் தெரிவித்தார்.

**த**ஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூ ஒன்றை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோ. சி. மணி அவர்கள் தெரிவித்தார்.

---

என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய-மாநிலங்கள் கருத்துத் தெரிவித்ததன் அடிப்படையில், தேவைப்பட்ட மாற்றங்களுடன், மத்திய மாநில உறவுகள் குறித்த குழுவின் ஏனைய முக்கியப் பரிந்துரைகளை எவ்வாறு செயற்படுத்தவியலும் என்பதையும் இம் மாநாட்டில் பயனுள்ளவகையில் விவாதிக்கலாம்.

மொழி, பண்பாடு, நிதியாதாரங்களின் வாய்ப்பு, வளர்ச்சி நிலைகள் ஆகியவற்றில் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டுள்ள இந்தப் பெருந்துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து நாம் வந்துள்ளோம். வேறுபாடுகள் இருந்தபோதிலும், நமது தாய் நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் நம்மை நாம் ஆட்படுத்திக்கொண்டிருக்கிறோம். புகழ் ஈர்ந்த நமது கடந்தகால வரலாறு குறித்து நாம் பெருமிதம் அடைகிறோம். அதே நேரத்தில் நமது மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி வழங்குவதற்கு நாம் பெரும் பொறுப்பேற்றிருக்கிறோம். மத்திய அரசும் 25 மாநில அரசுகளும் ஒன்றாக இணைந்து செயற்பட்டால்தான் ஏற்றமாக இந்த எண்ணம் ஈடேறும்.

மாநிலங்களிடையே நிலவுவதாகச் சொல்லக்கூடிய பிரிவினைப் போக்கு பற்றி அடிக்கடி பேசப்படுகிறது; தன்னுடைய சிந்தனையாலும் செயலாலும் மாநிலங்கள் பிரிந்து விடாவண்ணம் பார்த்துக் கொள்வது மத்திய அரசின் பொறுப்பாகும். 'அச்சாணியிலிருந்து சக்கரம் விலகப் பார்க்கும் நிலையிலன்று; —உருளும் சக்கரத்திலிருந்து அச்சாணி விலகப் பார்க்கும் நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம். இத்தகைய நிலை தவிர்க்கப்பட்டாக வேண்டும். சட்ட நிர்வாகப் பொருளாதார அம்சங்களில், மத்திய-மாநில அரசு உறவுகள் குறித்து ஒட்டுமொத்தமானதொரு அவசரமான, தீவிரமான, பயனுள்ள ஆலோசனைகள் அமைந்தால்தான் இந்த எண்ணம் ஈடேறும். அடுத்து நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாட்டில், இந்த நோக்கத்துக்கு முதன்மை வழங்கப்படும் என்று நம்புவோமாக!

நன்றி.

**—மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 9-2-89ல் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.**

# இந்திய ராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு

**ENROLMENT IN THE ARMY : ZRO MADRAS**

**APPLICATION**

**FOR**

**GEN DUTIES (NER)/TECHNICAL ENTRIES (MER)/CLK/SKT**

(Candidates eligible to apply to the above ZRO should be Permanent Residents of Tamil Nadu, Andhra Pradesh or Union Territories of Pondicherry/Andaman and Nicobar Islands)

**PART I : CHOICE OF ENTRY**

1. Tick off (√) only one Category (each category requires separate application form)

| | | |
|---|---|---|
| Gen Duties Matric (NER) | — | ( ) |
| Tech Entry (MER) | — | ( ) |
| MER (CLK/SKT) Entry | — | ( ) |

**PART II : PERSONAL DATA**
**(FILL IN BLOCK LETTERS)**

2. Name in Full ____________________

3. Father's Name ____________________ (Give rank and unit of father if son of Service/Ex-Serviceman)

4. Permanent Home Address ; Village ____________________

PO ____________ Tehsil/Taluk ____________

Dist ____________ State ____________ Pin ____________

5. Caste/Tribe ____________

6. Date of Birth ____________

7. Height in Cms/Inches ____________

**PART III : QUALIFICATION**

8. @Education

| Exams Passed | Marks Obtained | Overall Percentage |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

@ Note :- [1] CTC/ Xerox copy of the Certificates/Marksheet must be enclosed.
[2] Also attach CTC or Xerox copy of the following, if applicable.-

[a] Certificate Polytechnic/ ITI
[b] NCC Certificate obtained [A/B/C].

**PART IV**

9. I certify that :-

(a) The above information is true to the best of my knowledge and belief. I am liable to be disqualified if any information given above is found to be incorrect/incomplete/false.
(b) I am fully aware that recruitment is a FREE service and no money is required to be paid to any agency. [If at any stage it is discovered that I have paid any money to get recruited, I am liable to be disqualified/discharged from service].
[c] I will not claim any compensation for any injury sustained by me during screening and selection process.

Signature ____________

**FOR OFFICIAL USE ONLY**

Called for Screening on date ____________ Location ____________

[Signature Recruiting Officer]

Issued Free of Cost by HQ Recruiting Zone, 306 Mount Road, Teynampet, Madras-600018

## விதி முறைகள்

1. விண்ணப்பங்கள் ''விண்ணப்பங்கள் பிரிவு'' என்ற முகவரிக்கு தபாலில் பின் வருமாறு அனுப்பபடவேண்டும், ''விண்ணப்பங்கள் பிரிவு, தலைமை ஆட்சேர்ப்பு மண்டலம், 306, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-600018.''
2. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்கள், தட்டச்சு செய்தவைகளை அல்லது கையால் எழுதியதான குறிப்பிட்டவரான படிவங்களும் அனுமதிக்கப்படும். இருப்பினும் விண்ணப்பப் படிவங்கள் சொந்தக் கையெழுத்தால் பூர்த்தி செய்திட வேண்டும்.
4. தங்களது முழுப் பெயரை எழுத வேண்டும், முன் எழுத்தை (Initial) உபயோகிக்கக் கூடாது.
5. பணிபுரியும் படை வீரர் அல்லது முன்னாள் படை வீரரின் மகனாக இருப்பின், பணிபுரியும் அல்லது முன்னால் பணிபுரிந்த வீரரின் தகுதி, படை, எண், ஆகியவற்றை தந்தையின் பெயர் என்ற 3-வது பகுதியில் குறிப்பிடல் வேண்டும்
6. ஒப்புகை/அமைப்பு கடிதம்/மறுப்பு அறிவிப்பு தொடர்பான விபரம் அறிய, சுய விலாசமிடப்பட்ட தற்போதைய விலாசமிடப்பட்ட அஞ்சல் அட்டை/அஞ்சல் உறைகளை அனுப்ப வேண்டும்.
7. ஏற்கனவே மறுக்கப்பட்ட/நிராகரிப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், தகுதிகள் மறுபடியும் உடையவராயின் தகுதியான வயதினராக இருப்பின், விண்ணப்பிக்கலாம்.
8. இராணுவ மருத்துவ மனையில் மருத்துவ ரீதியால் தகுதியில்லையென தீர்மானிக்கப்பட்டவரோ, சம்மந்தப்பட்ட கிளை ஆட்சேர்ப்பு அலுவலகத்தில் அப்பீல் படிவங்களை குறிப்பிட்ட கால வரைக்குள் (21/42 நாட்கள்) பெற்று வராதவர்களோ விண்ணப்பிக்கத் தேவையில்லை.
9. தகுதிகள்:

| நுழைவு | கல்வித்தகுதி | சேருவதற்கு வயது வரம்பு |
|---|---|---|
| 1) ஜெனரல் டியுட்டி மெட்ரிக் என்ட்ரி (என்.இ.ஆர்) | மெட்ரிக் | 16-21 வயது |
| 2) டெக்னிக்கல் என்ட்ரி (எம். இ. ஆர்) | மெட்ரிக்-உடன் ஆங்கிலம், விஞ்ஞானம், கணக்கு. | 16-23 '' |
| 3) கிளர்க் என்ட்ரி (எம் இ ஆர்) | | |
| 4) ஜெனரல் டூட்டி நான் மெட்ரிக் | மெட்ரிக் உடன் ஆங்கிலம் மற்றும் கணக்கு. | 16-23 |

10. நிரந்தர இருப்பிடம்:- விண்ணப்பதாரர் இருப்பிடத்திற்கு மாறான மண்டலத்திற்கு விண்ணப்பிப்பாரேயானால், அவரது நிரந்தர முகவரியை உறுதி செய்யும் ஜெராக்ஸ் சான்றொப்பமிடப்பட்ட உண்மை நகலினை பின்வரும் மாதிரிப் படிவத்தில் அனுப்பி வைத்தல் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்

____________ என்பவரது மகனாகிய ____________
தொடர்ச்சியான 2 வருடங்களில் ____________ ____________ நகரத்தில்,
____________ மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருகிறவர்
என சான்றளிக்கப்படுகிறது.

கையொப்பம்

துணை ஆணையர்/சிவில் ஜட்ஜ் மாஜிஸ்ட்ரேட் வட்டாட்சியர்/ஸ்டேசன் ஹவுஸ்/ஆபிசர் (மேலே குறிப்பிட்ட அலுவலகர் இல்லையென்றால்) தவிர வேறுநபர் போடும் கையொப்பம் செல்லுபடியாகாது.


11. விருப்பு/வெறுப்பு காரணமாக படையில் சேர்க்கப்படாவிட்டால் மண்டல படைச் சேர்ப்பு அலுவலகத்திற்கு அதன் நகலினை கூடுதல் ஆட்சேர்ப்பு இயக்குனர், அட் ஜிடன்ட் ஜெனரல் பிராஞ்ச் இராணுவ தலைமையகம் வெஸ்ட் பிளாக் III ஆர், கே, புரம், புதுடில்லி 66க்கு 30 நாட்களுக்குள் தெரிவிக்கவும்.

**முக்கிய அறிக்கை**

12. எவ்விதமான நபருக்கும்/முகவரிக்கும், மனுதாரரோ அல்லது காப்பாளரோ பணம் எதுவும் கொடுக்கக் கூடாது
13. லஞ்சம்/ஊழிப்பு முதலியவற்றிற்கு முயற்சி செய்யும் நபர்களை ஆட்சேர்ப்பு அலுவலகம் மூலம் போலீசுக்கு தெரிவிக்கலாம்.
14. படைச் சேர்ப்பு அலுவலரோ/உறுப்பினரோ அல்லது பொது மக்களோ மனுதாரிடம் பணம் கேட்டால் மண்டல/கிளை ஆட்சேர்ப்பு அலுவலரிடம் எழுத்து மூலமான புகார் உடனடியாக செய்ய வேண்டும்.
15 ........................நாளுக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**எச்சரிக்கை**

பணம் கொடுத்திடவோ, அல்லது படைச் சேர்ப்பு அலுவலக ஊழியர்களை அணுகிடவோ எடுக்கப்படும் முயற்சி விண்ணப்பதாரர்களை தகுதியற்றவர்களாக்கும் எனவே விண்ணப்பதாரர்கள் மற்றும் அவரது காப்பாளர்கள் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்



# அலுவலர் அனைவர்க்கும் அன்னையாய் விளங்கும் அரசு

"எங்களுடைய நீண்ட நாள் ஆசையோ இல்லையோ, இந்த அரசைப் பொறுத்தவரை உங்களுடைய நீண்ட நாள் ஆசை நிறைவேறி இருக்கிறது என்பதை எண்ணும்போது உங்களுக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இதுபோன்ற வரவேற்புகளில் அமைச்சர்கள் அழைக்கப்படும்போது, முதலமைச்சர் மாத்திரம் அல்ல, அமைச்சரவையிலே உள்ள எல்லா அமைச்சர்களும் அழைக்கப்படும்போது, கோரிக்கைகளுக்குக் குறைவிருக்காது.

ஆனால், இங்கே உரையாற்றிய இந்த சங்கத்தினுடைய நிர்வாகிகள் யாரும் கோரிக்கைகளை வலியுறுத்தாமலே தொட்டுக்காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அவ்வளவு நம்பிக்கை எங்கள் மீது அவர்களுக்கு. நிறைவேற்றித்தாருங்கள் என்று வலியுறுத்தத்தேவையில்லை, சுட்டிக் காட்டினாலே போதும் என்கின்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தினால், கோரிக்கைகளுக்கு முதலிடம் தராமல்குளிர்ந்த அருவியைப் போன்ற தமிழெடுத்து என்னையும் அமைச்சர் பெருமக்களையும் பாராட்டி-வாழ்த்தி மகிழ்ந்திருக்கின்றீர்கள்.

தலைமைச் செயலகத்தினுடைய அலுவலர்களை நீண்ட நெடுநாட்களாக நான் அறிவேன். என்னைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலமானாலும், ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத காலமானாலும் ஏறத்தாழ 1957ஆம் ஆண்டு முதல் இந்தக் கோட்டையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கின்ற அந்த வாய்ப்பைப் பெற்றவன் என்கின்ற முறையில், உங்களுக்கு இருக்கின்ற பல்வேறு நியாயமான கோரிக்கைகளையெல்லாம் நான் மிக நன்றாக அறிவேன்.

எனவே இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அதிலே எங்களையெல்லாம் பாராட்டி, முத்துப்போன்ற தமிழ் எழுத்துக்களையெல்லாம் கோத்து வாழ்த்துப்பாக்களாக அணிவித்து, அதற்குப் பிறகு கோரிக்கைகளை வைத்தால், இவ்வளவு வாழ்த்தும் கோரிக்கைகளுக்காகத்தான் போலும் என்று நாங்கள் எண்ணிக் கொள்வோம் என்பதற்காக, அதனை நீங்கள் விடுத்திருக்கிறீர்கள்.

எனக்கும் சரி, என்னுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் சரி, ஏன்? எங்களிலே யாருக்கும் சரி; பழி வாங்குகிற எண்ணம் என்றைக்கும் இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. 'சேடிஸ்ட்' மனப்பான்மைகூடாது என்பதுதான் நாங்கள் நீண்ட நாட்களாக எடுத்துக்கூறி வருகின்ற ஒரு கருத்து.

'சேடிஸ்ட்' என்கின்ற அந்தச் சொல்லுக்குக்கூட இன்னும் சரியான பொருள்-சரியான சொல் தமிழிலே இல்லை. வடமொழியிலேதான் அதற்கொரு சொல்லைத் தேடிக் கண்டுபிடித்துக் கூற வேண்டியிருக்கிறது. 'குரூர மனப்பான்மை' என்று விளக்கலாம். 'சேடிஸ்ட்' என்றால் என்ன என்று அதனுடைய செயல்பாட்டை விளக்கலாம்.

ஊர்ந்து செல்கின்ற ஒரு கரப்பான் பூச்சியைப் பிடித்து அதை மல்லாக்கப் படுக்க வைத்து அது துடிப்பதைப் பார்ப்பது 'சேடிஸ்ட்'டில் ஒருவகை. துடிப்பதைப்பார்த்

## முதல்வர் கலைஞர் விளக்கம்

தால் மாத்திரம் போதாது என்று எண்ணி, நான்கு கால்களை நறுக்கி விட்டுப் போட்டு மல்லாந்து கிடந்து அது துடிப்பதைப் பார்ப்பது இன்னும் கொஞ்சம் உயர் ரகமான வகை. அதற்குப் பிறகு எல்லாக் கால்களையும் நறுக்கிவிட்டு அது அசைய முடியாமல் கிடப்பதைப் பார்ப்பது இன்னொரு வகை. பிறகு அதனுடைய இறக்கைகளையும் கத்தரித்துவிட்டு அது சாகவும் முடியாமலீ வாழவும் முடியாமல் பதைத்துத் துடிப்பதைப் பார்ப்பது ஒரு வகை. இதற்குப் பெயர்தான் சேடிஸ்ட் மனப்பான்மை என்பதாகும்.

அந்த மனப்பான்மை எங்களில் யாருக்கும் இல்லை. யாருக்கும் வரக்கூடாது. வராமல் நாங்கள் ஒருவருக்கொருவர்பார்த்துக் கொள்வதில் மிகுந்த கண்காணிப்பாக இருந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே, அந்தப் பயமில்லாமல் அரசு அலுவலர்கள் எங்களை அணுகலாம் என்ற தைரியத்தை, நம்பிக்கையை, இந்த நல்லவிழாவில் உங்களுக்கெல்லாம் வழங்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என் நினைவாற்றலைப் பற்றி இந்த சங்கத்தின் செயலாளர் நமச்சிவாயம் சொன்னார். அவர் சொன்ன நினைவாற்றலில் அவருக்கே சற்று நினைவாற்றல் குறைவாக இருந்தது.

1968ஆம் ஆண்டு நான் கையெழுத்திட்ட கோப்பினைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். ஒரு அமைச்சர் மறைந்தது குறித்தும், அவருடைய குடும்பத்தாருக்கு அவருடைய மறைவிற்குப் பிறகும் ஒரு வீடு அரசினர் தோட்டத்திற்குள்ளே வழங்கப்படவேண்டும் என்பது குறித்தும் அந்தக் கோப்பில் நான் என்ன எழுதினேன் என்பது பற்றியும் அவர் இங்கே சொன்னார்.

அந்த அமைச்சர் வேறுயாருமல்ல; எங்கள் தலைவர்களிலே ஒருவரான என்.வி. நடராசன் அவர்கள்தான். அவர் மறைவிற்குபிறகு அவருடைய குடும்பத்தார், அவர் இருந்த அந்தப் பெரிய வீடு தேவையில்லை என்றாலும் கூட, அவர்கள் வாழ்வதற்கு அரசினர் தோட்டத்திலேயே ஒரு சிறிய வீடு தேவை என்றார்கள். 'தருவதற்கு இல்லை' என்று வழக்கம்போலக் கோப்புகளில் குறிப்புகள் எழுதப்பட்டு என்னிடத்திலே வந்தன. அப்போதுதான் அவர்களுக்கு 68ஆம் ஆண்டு நான் எழுதிய கோப்பினை ஞாபகப்படுத்தினேன்.

அது என்ன கோப்பு என்றால் காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெரும் தூண்களில் ஒருவராக விளங்கியவர் வரதராஜுலுநாயுடு. அந்தக் காலத்தில் நாயக்கர், நாயுடு, முதலியார் என்றால், நாயக்கர் என்பது தந்தை பெரியாரையும், முதலியார் என்பது தமிழ்த்தென்றல் திரு.வி.க. வையும், நாயுடு என்பது டாக்டர் வரதராஜுலுவையும் குறிப்பதாகும். அந்த மூவரும்தான் தமிழகத்திலே தேசிய இயக்கத்தை அன்றைக்கு வளர்த்தார்கள். விடுதலை இயக்கத்தின் தானைத் தளபதிகளாக அன்றைக்கு உலவினார்கள்.

அந்த வரதராஜுலு நாயுடு அவர்கள் மறைந்த பிறகு அவருடைய துணைவியார் ருக்மணி அம்மாள் அவர்கள், அரசினர் தோட்டத்திலே அரசுக்குச் சொந்தமான ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். அந்த வீட்டை அவர் காலி செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்ட கோப்பு ஒன்று என்னிடத்திலே வந்தது. நான் அதில் கையெழுத்திட்டிருந்தால், அவர்கள் உடனடியாகக் காலி செய்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும். "ருக்மணி அம்மாள் அவர்களுடைய கணவர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தேசத்தியாகி. அவருடைய மறைவிற்குப் பிறகு அவருடைய துணைவியார் அங்கிருந்து விரட்டப்படுவது முறையல்ல. எனவே அவருடைய ஆயுட்காலம் வரையில் உரிய வாடகையை செலுத்தி அரசினர் தோட்டத்திற்குள் அந்த வீட்டிலேயே அவர்கள் வாழட்டும்'' என்று நான் குறிப்பு எழுதினேன். இதுதான் 1968ல் நான் எழுதிய குறிப்பு. அதில் நமசிவாயம் அவர்கள் அந்தப் பெயர்களை மறந்து விட்டார் என்றாலும் நான் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த அம்மையார் ருக்மணி அவர்கள் அண்மையிலேதான் காலமானார்கள்.

அதே கோப்பின் அடிப்படையில் தான் என்.வி.நடராசன் அவர்கள் மறைந்தபிறகு அவருடைய குடும்பத்தாரும், அவர்களுடைய துணைவியாருடைய வாழ்நாள் பரியந்தம் அந்த வீட்டில் வாழலாம் என்கின்ற குறிப்பினை எழுதினேனேயல்லாமல் வேறல்ல என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

சில கோரிக்கைகளுக்காக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் தலைமைச் செயலகத்திலே உள்ள அலுவலர்கள் பன்னிரண்டுபேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள்தான் இப்போது உங்களுக்கு எல்லாம் மாலை போடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்

பனிரெண்டுபோ

அன்னியில் தோழர் நண்பர் ரகீம்

> **மனிதன், தான் வாழவேண்டும்; தன்னைப்போலவே பிறரும் வாழ வேண்டும். மனிதர் எல்லோரும் மனிதராகவே வாழ்ந்திட வேண்டும் என்ற மனப் பண்பைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், மனித இனம் ஒன்றுபட்டு, நாகரீக வாழ்வு வாழ முடியும்.**
>
> **—பேரறிஞர் அண்ணா**


அவர்களும் தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். அவர்களெல்லாம் பழிவாங்கப்பட்ட அந்த நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பது உங்களுடைய உள்ளத்திலே ஊசலாடிக்கொண்டிருக்கின்ற எண்ணம் என்பதை நான் நன்றாக அறிவேன்

அந்தப் பன்னிரெண்டு பேருக்கு ஊதிய உயர்வு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஓய்வூதிய ஆதாயம் இல்லாமல் நீக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். (சஸ்பென்சன்) என்பதாக ஆக்கப்பட்டு அவர்களுடைய ஊதியத்திலே குந்தகம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும் என்பது நம்முடைய சங்கத்தின் நண்பர்கள் இங்கே பேசிய பேச்சிலிருந்து நான் தெரிந்து கொண்ட தகவல்களாகும்.

நான் இதிலிருந்து உங்களுக்கு விடுதலை அளிக்கிறேன். இந்தச் சங்கடங்கள் தீர்க்கப்படும். இந்த இழப்புக்கள் திரும்பப் பெறப்படும். இதை நானாகச் சொல்லவில்லை. அருகே இருந்த தலைமைச் செயலாளரை அழைத்து அவரிடத்திலே சொல்லிவிட்டுத்தான் இதைச் சொல்கிறேன். ஏனென்றால் தலைமைச் செயலகத்திலே பணிபுரியும்போது, தலைமைச் செயலாளர் எப்போதும் இருப்பவர், நாங்கள் வருவோம். போவோம். எனவே அவரிடத்திலே சொல்லிவிட்டு இதை அறிவிக்கின்றேன்.

யாரோ தவறு செய்துவிட்டார்கள், நாங்கள் அதைத் திருத்துகிறோம் என்று நீங்கள் கருதிக் கொள்ளக்கூடாது. தந்தை கோபத்திலே அடித்தால், தாய் அணைத்துக் கொள்கிறாள். அதுதான் இப்போது நடைபெற்றிருக்கிறது என்பதை எடுத்துக்கூறி உங்களுடைய அன்பார்ந்த, இதயமார்ந்த, இனிய வரவேற்பிற்கு என்னுடைய நெஞ்சில் நிறைந்த நன்றியை என்சார்பிலும், என்னுடைய அமைச்சர் பெருமக்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**— தமிழக அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் 6.2.89 அன்று வரவேற்பளித்தது. வரவேற்புக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசியதில் ஒரு பகுதி.**



# வரலாற்றுச் சிறப்புமிக்க நாள்!

## தலைமைச் செயலகச் சங்க செயலாளர் நமச்சிவாயம் பெருமிதம்

"தலைமைச் செயலக ஊழியர்களைப் பொறுத்த வரையில் இன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். ஏனெனில் 1976-க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு மாண்புமிகு கலைஞர் அவர்களின் நிர்வாகத் திறமையைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு இல்லாதிருந்தது. இப்போது நமக்கெல்லாம் அந்த நல்வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

"இந்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1976-இல் தான் பணிக்கு வந்தேன். இங்குள்ள பாதிக்கு மேற்பட்டோர் அதற்குப் பிறகு வேலைக்கு வந்தவர்கள்தான். 1974-ஆம் ஆண்டு அப்போதிருந்த ஒரு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மரணம் அடைந்து விட்டபின், அவரது துணைவியார் தனக்கு அந்தக் குடியிருப்பில், தங்கியிருக்கத்தொடர்ந்து அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

"கோப்பு பொதுப்பணித்துறைக்கு வந்தது. பொதுப் பணித் துறையிலே சட்ட திட்டங்களையெல்லாம் ஆராய்ந்து,'சட்டத்தில் இடம் இல்லை' என்று கூறிவிட்டார்கள்.

"அப்போது இருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், அக்கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். அக்கோப்பு மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு வந்தபோது- அதில் அவர்கள் இப்படி எழுதியிருந்தார்கள்—'My order in current file No. such and such of 1968 are applicable in this case also.

"துறையிலிருந்தவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. நாம் இருப்பதோ 1974. மாண்புமிகு முதல்வர் குறிப்பிடுவதோ 1968-இல் உள்ள ஒரு கோப்பினைப்பற்றி, என்ன செய்வது என்று உடனடியாக ஆவணக் காப்பகத்திற்குச் சென்று அந்த கோப்பினைப் பெற்று வந்து பார்த்தால், நமது முதலமைச்சர் குறிப்பிட்ட அதே பக்கங்கள் 100-101 நடப்புக் கோப்பிலே அப்போதிருந்த எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் இறந்தபோது, அவருடைய மனைவிக்கு இதைப் போன்ற ஒரு அனுமதி Special case ஆகவழங்கப்பட்டிருந்தது: We all go by precedents. But நமக்கு ஞாபகமே இருப்பதில்லை.

"நேற்று ஒரு ஃபைல் போடுகிறோம். இன்றைக்கு மறந்து விடுகிறோம். 1968-இல் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது, தான் வெளியிட்ட ஒரு ஆணையை நினைவில் கொண்டு 1974-இல் முதலமைச்சராக இருக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர் என்றால், there is no. other proof for his extraordinary administrative ability.

"1977-இல் அந்தக் கோப்பினைச் சந்தர்ப்பவசமாக நான் பார்த்தபோது, இதுபோன்ற ஒரு நிர்வாகத் திறம் படைத்த, திறம்மிக்க ஒரு முதலமைச்சரிடம் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்காதா என்று பல நாட்கள் ஏங்கினேன். அவ்வாறு, இவ்வளவு பெரிய ஒரு நிர்வாகத் திறமைமிக்க ஒரு முதலமைச்சரின் கீழ் பணியாற்றுவதை நாங்கள் அனைவரும் மிகவும் பெருமையாகக் கருதுகிறோம்.

"தலைமைச் செயலகத்திலே பணிபுரிவதைப் பற்றி இப்போது நாங்கள் அனைவருமே பெருமை கொள்கிறோம். காரணம் அவர் அவ்வளவு extraordinary administrative ability உள்ளவர்.

சரி, 1974-'76-இல் அப்படி இருந்திருக்கலாம். தற்போது அப்படி

## அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கு காலியாகும் இடங்களில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு



திராவிட முன்னேற்றக் கழகம் அதன் தேர்தல் அறிக்கையில் 'மகளிர் நலன்' என்ற தலைப்பின் கீழ் பெண்களுக்கான சிறப்புத் திட்டங்களைக் குறிப்பிட்டிருந்தது. அரசு, அரசைச் சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சித் துறை ஆகியவற்றில் உள்ள பணிகளில் 30 சதவீதம் பெண்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

இதையொட்டி, தமிழக அமைச்சரவையின் முதல் கூட்டத்தில், மேற்கூறப்பட்ட பணிகளில் நேரடி நியமனத்திற்கு இனி ஏற்படும் காலியிடங்களில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. இது தவிர, ஆரம்பப்பள்ளிகளில் முதலாவது, இரண்டாவது வகுப்புகளில் இனிவரும் ஆசிரியர் நியமனங்களுக்குப் பெண்களையே தேர்வு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகவல்களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.



---

இருப்பாரா என்ற சந்தேகம் சிலருக்கு எழலாம். 31-ஆம் தேதி, 31st of January 1989, நம் கவர்ன்மெண்ட் சர்வண்ட் ஒருவர் Retire ஆகணும், அவர் மேல் charges pending for several months. உடனே என்ன செய்தார்கள்? 31-ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு, அவரை பதவி நீக்கத்தில் வைக்கலாம். To place him under suspension pending charges என்று துறையில் முடிவாக்கப்பட்டது.

"பிறகு தட்டச்சர், உதவியாளர், பிரிவு அலுவலர், அதிகாரிகள் அனைவரும் wait செய்கிறார்கள், இந்தக் கோப்பு வந்தவுடனேயே issue பண்ணிவிட வேண்டும். அதுபற்றி நமது முதல்வர் அவர்களிடம், அந்தக் கோப்பு சென்றபோது, அவர்கள் அதில் என்ன எழுதியிருக்கிறார்கள் தெரியுமா? இத்தனை நாட்களாக அவர் மீது நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை? அவ்வாறு குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் provisional pension என்ற ஒரு பிரிவின் கீழ் இவரைப் பணியிலிருந்து விடுவிக்கலாம். He may be allowed to retire and he may be sanctioned provisional pension subject to the adjustment of the finalisation of disciplinary proceedings.

"முதலமைச்சர் அரசாங்க ரகசியங்களை இப்படி நான் வெளியிட்டதற்காக என் மீது நடவடிக்கை எடுத்துவிடக் கூடாது என்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

31-ந் தேதி, all of us are very sure, நம்முடைய எதிர்காலம் மிகச் சிறந்த மனிதாபிமானம் மிக்க ஒரு தலைவரிடம் இன்று இருக்கிறது.

"நமது சங்கத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். 1985-இல் ஆசிரியர்களுக்கு ஆதரவாகவும் ஊதிய உயர்வு கோரியும் அறவழியில் போராட்டம் நடத்தியபோது, இந்தச் சங்க அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது.

"35 உறுப்பினர்கள் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டார்கள். அதில் 5 மகளிரும் அடங்குவர். அப்போதிருந்த தலைவர் ரஹீம் அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கவில்லை. எனினும் இதற்கு முழுப்பொறுப்பு ஏற்று அவர் விடுப்பு அப்ளை செய்தார்—விடுப்பு மறுக்கப்பட்டது. எனவே unauthorised absence-இல் 17 மாதங்கள் இருந்தார்.

'நாங்கள் போராடியதற்கு மன்னிப்பு வேண்டுகிறோம்' என்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

We are always guided by conscience செய்தது சரியென்று தெரிந்ததால் அதற்காக நாங்கள் எந்தக் காலமும் வருத்தம் தெரிவிக்கத் தயாராக இல்லை. அதன் விளைவாக 17 மாத காலங்கள் Suspension நீடிக்கப்பட்டது. 17 மாதக் காலங்களுக்கும் பிறகு 12 நண்பர்களும் ரஹீம் அவர்களும் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்கள். அந்த 17 மாதக் காலத்திற்கான ஊதியங்கள்கூட இன்னும் தரப்படவில்லை. Because it has been treated as substantive punishment.

31 மாதக் கால இடைவெளிக்குப் பிறகுதான் நமது சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அதுவரை உங்களுக்கெல்லாம் தெரியும் சிண்டிகேட் வங்கி மரத்தடியில் நாம் சங்கம் நடத்திக் கொண்டிருந்தோம். இந்த உறுதி-இந்தத்தெளிவு இதையெல்லாம் தமிழகத்தின் தனிப்பெரும் தலைவரான உங்களிடம்தான் நாங்கள் கற்றிருக்கிறோம்

இறுதியாக—We are sure that the Hon'ble Chief Minister with your extraordinary administrative abilities, untiring hardwork and extreme sincerity you will lead our State

From darkness to light

From chaos to order

From ignorance to knowledge


From Starvation to plenty

From retardation to progress and we are sure, sir, you will lead us

From victimisation to relief; stagnation to promotion

Disparity to parity; revenge to love and humiliation to self respect, "

**—6.2.89 அன்று, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவில், தலைமைச் செயலக ஊழியர் சங்கச் செயலாளர் திரு நமசிவாயம் பேசியது.**



# உயர்ந்த குறிக்கோளுடன் பேரவை செயல்பட உறுதுணையான தலைமை

தமிழக சட்டப்பேரவைக் கூட்டம் தற்காலிகத் தலைவர் கே. ரமணி அவர்கள் தலைமையில் 8.2.89 அன்று துவங்கியது.

முன்னதாகப் பதவி பிரமாணம் எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்களை அவையில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுமாறு திரு கே. ரமணி அவர்கள் அழைத்தார்.

இதைத் தொடர்ந்து ''சட்டப் பேரவைத் தலைவர் பொறுப்பிற்கு ஒரே ஒரு வேட்பு மனு மட்டுமே தாக்கலாகியுள்ளது. அந்த மனுவை எம்.சாத்தையா என்கிற தமிழ்க்குடி மகன் தாக்கல் செய்துள்ளார். அந்த வேட்பு மனுவை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன் மொழிந்து உள்ளார். அவை முன்னவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து உள்ளார்'' என்று தற்காலிகத் தலைவர் திரு கே. ரமணி அவர்கள் தெரிவித்தார்.

''புதிய தலைவர் திரு தமிழ்க்குடி மகன் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று திரு கே.ரமணி அவர்கள் மேலும் கூறினார்.

புதிய தலைவர் தமிழ்க்குடி மகனை அவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்களும் அவைத் தலைவரின் இருக்கைக்கு அழைத்து வந்து அமர்த்துமாறு கூறினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் செல்வி ஜெயலலிதா அவர்களும் மாண்புமிகு அவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்களை அழைத்து வந்து தலைவர் பீடத்தில் அமர்த்தினர்.

திரு கே.ரமணி அவர்கள் புதிய அவைத்தலைவர் திரு தமிழ்க்குடி மகன் அவர்களிடம் கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்துவிட்டு உறுப்பினர்கள் வரிசையில் சென்று அமர்ந்தார்.

பின்னர், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்கள், துணைத்தலைவர் பொறுப்பிற்கு நாமக்கல் திரு.பி. துரைசாமி மட்டுமே மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும், அவருடைய வேட்பு மனுவை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஆர்க்காடு வீராசாமி அவர்கள் முன்மொழிய, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் வழிமொழிந்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

எனவே சட்டப்பேரவை துணைத் தலைவராக திரு.பி. துரைசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவித்தார்.

''துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாமக்கல் திரு. பி.துரைசாமி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மாண்புமிகு பேரவை தலைவர் திரு தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

பேரவைத்தலைவரையும், துணைத் தலைவரையும் வாழ்த்தியும் பாராட்டியும் அவை முன்னவர் கல்விஅமைச்சர்பேராசிரியர் க. அன்பழகன்,எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா, தேசிய காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு ஜி.கருப்பையா மூப்பனார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் (மார்க்)

# அண்ணா நினைவு நாளில் கைதிகளின் தண்டனை குறைப்பு

தமிழ்நாட்டில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு பதவி ஏற்றதையொட்டியும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 20ஆவது நினைவுநாளையொட்டியும், தமிழ்நாட்டுச்சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைப்பது என்று தமிழ்நாடு அரசு சிறப்பு ஆணை ஒன்று பிறப்பித்தது.

இதன்படி, ஆயுள்சிறைதண்டனை அனுபவித்து வரும் எல்லாக் கைதிகளின் தண்டனை காலத்திலும் ஓராண்டு குறைக்கப்பட்டது.

மற்ற எல்லாவிதமான கைதிகளுக்கும் தண்டனைக் காலத்தில் ஆறு மாதம் குறைக்கப்பட்டது.

கொலை, கள்ளக்கடத்தல் ஆகிய குற்றம் சாட்டப்பட்டு, சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பெண் கைதிகள் தவிர மற்ற எல்லாப்பெண் கைதிகளுக்கும், மீதமுள்ள தண்டனைக் காலம் ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த ஆணைகள், தமிழ்நாட்டு நீதிமன்றங்களில் தண்டனைக் காலத் தீர்ப்பு பெற்று மற்ற மாநிலங்களிலோ அல்லது யூனியன் பிரதேசங்களிலோ சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கும் பொருந்தும்.

பாஸ்போர்ட் சட்டம், வெளிநாட்டினர் சட்டம் குற்றச் சட்ட திருத்தச் சட்டம் (1961) அரசு ரகசியக் காப்புச் சட்டம் (1923), சிவில் பிரிவு தடுப்புக்காவல் சட்டப்பிரிவு ஆகியவற்றின்கீழ் சிறையில்அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இந்த ஆணை பொருந்தாது.

**அரசின் இந்த ஆணை பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான 3.2.89 முதல் நடைமுறை வந்துள்ளது.**



தலைவர் திரு கே. ரமணி, முன்னாள் பேரவைத்தலைவர் திரு பி.எச். பாண்டியன், ஜனதா தளம் தலைவர் திரு வெங்கடேச தீட்சிதர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு அழகர்சாமி, முஸ்லிம் லீக் தலைவர் திரு அப்துல் லத்தீப், ஜனதா கட்சித் தலைவர் திரு பொன். விஜயராகவன், தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு பி.என். வல்லரசு ஆகியோர் பேசினார்கள்.

முடிவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேரவைத் தலைவரையும் துணைத் தலைவரையும் வாழ்த்தி உரையாற்றினார்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு தமிழ்க்குடிமகன் இறுதியில் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களையும் துணைத்தலைவர் அவர்களையும் பாராட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரையாவது:

''தங்களை ஒருமனதாக இந்த அவை தேர்ந்தெடுத்துப் பாராட்டுகிற நல்ல வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்க் குடிமகன் என்றபெயரோடு புகழ்பெற்ற ஒரு கல்லூரியின் முதல்வர் என்ற தகுதியும், திறமையும் பெற்றுள்ள நீங்கள் இந்த அவையில் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற எல்லாத் தகுதியும் பெற்றிருக்கிறீர்கள்.

''தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுக்க ஆளுங்கட்சி மாத்திரமல்ல; எதிர்க்கட்சிகளும் ஒரு நல்ல சூழல் ஏற்பட உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். தமிழக சட்டப் பேரவை ஒரு வரலாறு படைத்த பேரவை என்பது நாடறிந்த ஒன்றாகும். தமிழ் நாட்டில் வாழ்கிற ஏறத்தாழ ஐந்து கோடி மக்களின் உள்ளத்தின் பிரதிபலிப்பாக, எண்ணங்களை வெளிப்படுத்தும் வாயிலாக அவர்களுடைய எதிர்கால நல்வாழ்விற்கு வழி தேட வேண்டிய ஜனநாயகத்தினுடைய கட்டுக்கோப்பாக -ஒரு வகையில் அதனுடைய கோபுரமாக விளங்குகின்ற இந்த சட்டப்பேரவை மிகப் பெரிய உயர்ந்த குறிக்கோள் கொண்டதாகச் செயல்படுவதற்குத் தங்களுடைய தலைமை உறுதுணையாக விளங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

''சான்றாண்மை என்பதுதான் வள்ளுவர் வகுத்த அந்த வாழ்க்கை நெறியினுடைய உச்சத்தகுதியாகும். தனிமனிதனுடைய வாழ்க்கையிலே காணப்பட வேண்டிய உச்சத்தகுதியாகும். அந்தத் தனிமனிதனுடைய வாழக்கையிலே காணப்பட வேண்டிய சான்றாண்மை எந்தத் துறையில் எந்தப் பதவியில் எந்த நிலையில் இருந்தாலும் இடம்பெற வேண்டிய ஒன்று. அந்த சான்றாண்மைக்கு அடித்தட்டாக அமைவது நடுவண் நிலைமை. அந்த நடுவண நிலைமையைக் காப்பாற்றுகின்ற தகுதி தங்களுக்கு உண்டு.

''எண்ணிக்கை அடிப்படையிலே மட்டும் ஆளுங்கட்சி பெரிய கட்சி என்று கருதுவதைவிட, மக்களுக்கு ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணிகளை ஏற்று இருக்கிற பொறுப்புள்ள கட்சி என்ற முறையில் மதிக்கப்பட வேண்டியது என்பதும், எண்ணிக்கை குறைவாய் இருந்தாலும் மாற்றுக் கட்சிகள் தங்களுடைய கருத்துகளை வெளியிட வாய்ப்புப் பெற வேண்டும் என்பது ஜனநாயகத்திலே மிக முக்கியமானது என்றாலும் அனைத்திற்கும் ஒரு அளவு உண்டு என்பதைத் தாங்கள் எண்ணிப்பார்த்து, அளவோடு அவைகள் நடைபெறுகிறபோது அதுதான் அவைக்கு அழகு என்பதை உள்ளத்திலே கொண்டு இந்த அவையினுடைய அழகும் தகுதியும் மேம்படுவதற்கு, அறிவும், திறனும் வளர்வதற்கு இந்த அவையிலே இடம் பெற்று ஆட்சி மொழியாகத் திகழ்கிற தமிழ்மொழியினுடைய நலன் ஓங்குவதற்கு தமிழ்க்குடிமகன் என்ற பெயர் கொண்ட தாங்கள் தங்களுடைய பெயருக்கு ஏற்ப இதனுடைய தகுதியைச் சிறப்புச் செய்ய உறுதுணையாக இருக்க வேண்டும்.

''இந்த மன்றத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாமக்கல் துரைசாமி பத்து ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணியாற்றியவர். அவருக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் உளமாரத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

# முதல்வர் கலைஞர் பத்திரிகையாளர் சந்திப்புகளில்



**செய்தியாளர்களின் கூட்டங்களில் பங்கு பெற்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த சில பதில்கள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.**

போது தி.மு.கழக ஆட்சியில் மிக முக்கியமாக ஒன்றிரண்டு அமைப்புகள் தவிர மற்ற எல்லாவற்றிலும் அதிகாரிகளே தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**செய்தியாளர்:**

விடுதலைப்புலிகள் வன்முறையில் ஈடுபடுவதைக் கைவிடவேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அமிர்தலிங்கம் உங்களிடம் கூறியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருக்கிறாரே!

**முதல்வர் கலைஞர்:**

அமிர்தலிங்கம் அவர்கள் என்னை வந்து நேற்று சந்தித்தது மரியாதை சந்திப்புத்தான். தமிழீழப் பிரச்னை குறித்து விவாதிப்பதற்காக நேரம் ஒதுக்கி என்னை வந்து அவர் பார்க்கவில்லை. விடுதலைப்புலிகள் வன்முறையில் ஈடுபடுவதாகச் சொன்னது தவறு. இந்திய ராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்படுகின்ற மோதல் நிற்கவேண்டும் என்பதுதான் தி.மு.கழகத்தின் கருத்து. வன்முறை என்று விடுதலைப் புலிகளை மாத்திரம் குற்றஞ்சாட்டுவது முறையல்ல. விடுதலைப் புலிகளின் அமைப்புடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு நிரந்தரமான அமைதியைத் தமிழீழத்தில் உருவாக்க வேண்டும் என்பது தான் தி.மு.கழகத்தின் கருத்து. நான் டெல்லி செல்லும் போது பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும் என்று நம்புகிறேன். அப்படிச் சந்திக்கும்போது இந்தக் கருத்தின் அடிப்படையில் அவரிடத்தில் பேசுவேன்.

**செய்தியாளர்:**

வன்னியர் பிரச்னை சம்பந்தமாக என்ன செய்யப் போகிறீர்கள்?

**முதல்வர் கலைஞர்:**

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடுகள் குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்

**செய்தியாளர்**

கடந்த கால ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான வாரியங்கள் கழக ஆட்சியிலும் தொடருமா?

**முதல்வர் கலைஞர்:**

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், தி.மு.கழக ஆட்சிக் காலத்திலும் 17 அல்லது 18 வாரியங்கள் தான் இருந்தன. அதிலே நான்கைந்து வாரியங்களுக்குத்தான் அதிகாரப் பற்றற்றவர்கள் தலைவர்களாக இருந்தார்கள். ஆனால் கடந்த பத்தாண்டுகளில் அந்த வாரியங்களின் எண்ணிக்கை நாற்பதாகப் பெருகியதோடு அநேகமாக எல்லா வாரியங்களிலுமே அதிகாரப் பற்றற்றவர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். இப்

டிருக்கின்றது. அந்தப் பிரச்னை குறித்து ஏற்கெனவே அமைக்கப்பட்ட வெங்கடகிருஷ்ணன் குழு தன் பணியினைச் செய்துகொண்டு இருக்கின்றது. அந்த முடிவுகளையும் நாங்கள் பரிசீலிப்போம்.

**செய்தியாளர்:**

மாநகராட்சி தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் 18-வயது என்று ஆக்கப்படுமா அல்லது 21 வயது என்று இருக்குமா?

**முதல்வர் கலைஞர்:**

1980ஆம் ஆண்டில் 21வயது என்பதை 18வயதாக ஆக்குவதென்பது சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்த 18-வயது வாக்காளர் பட்டியல் நகர் மன்றங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும்தான் எடுக்கப்பட்டதே தவிர, மேலே சொன்ன மூன்று மாநகராட்சிகளுக்கும் 18-வயது வாக்காளர் பட்டியல் இதுவரை தயாராகவில்லை. எனவே இனிமேல் 18-வயது வாக்காளர் பட்டியல் தயாரிப்பதென்றால் கிட்டத்தட்ட ஓராண்டு ஆகும். அதுவரையில் இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் அந்தந்த இடங்களில் உள்ள மக்கள் பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகள் முன்னின்று கவனிக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதைக் கருத்தில் கொண்டு இப்போதுள்ள 21-வயது என்கிற வாக்காளர் பட்டியலை வைத்து மாநகராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(சென்னை 5.2.1989)

**செய்தியாளர்:**

இலங்கைப் பிரச்னை குறித்துப் பல விவரங்களை எதிர்க்கட்சியில் இருந்ததால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்று சொல்லியிருந்தீர்களே, அது என்ன வாயிற்று?

**முதல்வர் கலைஞர்:**

நேற்றுப் பிரதமருடன் பேசிய போது இதைப்பற்றி அவரிடம் சொன்னேன். அதற்காக இன்று (10.2.89) அவர் மத்திய அமைச்சர் நட்வர்சிங் அவர்களை தமிழ்நாடு இல்லத்திற்கு அனுப்பிவைத்திருந்தார். காலை 7.30 மணி முதல் 9 மணி வரையில் இலங்கைப் பிரச்சனை சம்பந்தமான விவரங்களை அவரும் அவருடன் வந்த அதிகாரிகளும் என்னிடம் விளக்கிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு அதையொட்டி இன்று மாலை 5.15 மணி முதல் சுமார் 6 மணி வரையில் பிரதமரை மீண்டும் சந்தித்துப் பேசினேன். என்னுடன் நாடாளுமன்றத் தி.மு.கழகக் குழுத் தலைவர் முரசொலி மாறனும் வந்திருந்தார். மாலையில் நடந்த பேச்சு வார்த்தையின்போது மத்திய அமைச்சர் நட்வர்சிங் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். அவர்கள் கலந்து கொள்வதற்கு முன்பு நானும் பிரதமரும் மட்டும் இலங்கைப் பிரச்னை குறித்து தனியாகப் பேசினோம்.

**செய்தியாளர்:**

பிரதமர் திறந்த மனதோடு பேசினார் என்று சொல்லலாமா? உங்கள் முடிவிற்கு அவர் வருவதைப் போலத் தெரிந்ததா?

**முதல்வர் கலைஞர்:**

மீண்டும் பேச்சுவார்த்தை வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அது குறித்துத்தான் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பேசலாம் என்று கூறியிருக்கிறார்.

**செய்தியாளர்:**

இருநூறு கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்குக் கேட்டீர்களா?

**முதல்வர் கலைஞர்:**

அதுபற்றி நிதி அமைச்சரையும் சந்தித்துப் பேசியிருக்கிறோம். கவர்னர் அவர்களே அதற்காக ஆகஸ்ட் மாதத்தில் ஒரு கடிதமும், ஜனவரியில் ஒரு கடிதமும் நூற்று ஐம்பது கோடி ரூபாய் கேட்டு எழுதியிருக்கிறார். நாங்கள் இருநூறு கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த ஓராண்டுக் காலத்தில் நிதியாதாரத்தில் ஏற்பட்ட பெரிய தொய்வை ஈடு செய்ய மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்தியிருக்கிறேன்.

மேலும், அரிசி மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் இதுவரை எண்பதாயிரம் டன் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டு வந்தது. அது பிப்ரவரி மாதத்திலிருந்து நாற்பதாயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டுவிட்டது. அதுகுறித்தும் பிரதமரிடத்திலே வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். முன்புபோல எண்பதாயிரம் டன் மாதந்தோறும் அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

**செய்தியாளர்:**

உங்களுடைய கோரிக்கைகளுக்குப் பிரதமரின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது?

**முதல்வர் கலைஞர்:**

அவருடைய அணுகுமுறையைக் கவனிக்கும்போது நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதைத் தவிர தமிழகத்தின் பல்வேறு தேவைகள், திட்டங்கள் குறித்து ஒரு விளக்க அறிக்கை தமிழக அரசின் சார்பில் பிரதமரிடம் தரப்பட்டிருக்கின்றது.

**செய்தியாளர்:**

அந்த விளக்க அறிக்கையிலே என்னென்ன திட்டங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன என்று சுருக்கமாகக் கூறமுடியுமா?

**முதல்வர் கலைஞர்:**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைத் தொகை.

யார் எந்தக் கருத்தினைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சியடைய மாட்டான். அதனால் யார் சொல்வதையும் நீங்கள் கேளுங்கள். பின் உங்கள் அறிவைக் கொண்டு சிந்தியுங்கள். உங்கள் அறிவிற்குச் சரி என்று பட்டதை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்க முயற்சி செய்யுங்கள்.

—தந்தை பெரியார்

இது 1956ஆம் ஆண்டிலிருந்து நமக்குத் தரப்பட வேண்டும். ஆனால் 1976ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இலாபம் வர ஆரம்பித்தது. அதில் அவர்கள் நம்முடைய பங்கைத் தரவில்லை. அதைத்தான் இப்போது 'ராயல்டி' என்ற பெயரில் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**செய்தியாளர்:**

அந்தத் தொகை எவ்வளவு இருக்கும்?

**முதல்வர் கலைஞர்:**

நூறுகோடி ரூபாய்க்கு மேல் வரலாம்.

**செய்தியாளர்:**

வேறு என்னென்ன திட்டங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள்?

**முதல்வர் கலைஞர்:**

அரிசி, சர்க்கரை, கோதுமை, கூடுதலாக ஒதுக்கீடு செய்தல்.

தமிழ்நாட்டில் மத்திய அரசுத்துறை முதலீடு.

இடம் தெரிந்தெடுப்பது குறித்த கொள்கை.

உதகமண்டலத்தில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் வண்ணத் திரைப்படச் சுருள் தயாரிப்பதற்கான திட்டம்.

நீலகிரியில் ஆப்டோ ஆப்டிகல் மின்னணுவியல் பார்வைக் கூடங்களை அமைக்கும் திட்டம்

கோயம்புத்தூரில் பம்புகள், மோட்டார், டீசல் எந்திரப் பொறிகளுக்குச் செய்முறை-பொருள் உற்பத்தி மையம், சென்னையில், தானியங்கி மோட்டார் பாகங்கள் உற்பத்தி மையமும், கோயம்புத்தூரில் நவீன கருவிகள் கூடம்-பயிற்சி நிலையமும் அமைத்தல்.

ஆவடி டாங்கித் தொழிற்சாலையில் கூடுதலாக முதலீடு செய்தல்.

இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் மின்னணுவியல் தொலைபேசி; தொடர்பகம் அமைப்பது தொடர்பான திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியைச் செயல்படுத்துதல்.

இம்மாநிலத்தில் வீடியோ காசெட் பிளேயர்கள், வீடியோ காசெட் ரிக்கார்டர்கள் தயாரிக்கும் பிரிவை அமைக்கும்படி வேண்டுதல்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தனது மூன்றாவது சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கும் பழுப்பு நிலக்கரியை வாங்கி அதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்தி செய்ய அனல் மின்நிலையத்தை ஏற்படுத்துதல்.

196 வாயு சுழல் முறையிலான அனல் மின் நிலையத்தைக் கடலூரில் அமைத்தல், எண்ணெய் இயற்கை எரிவாயுக் கமிஷன், வாயு வழங்குவதாக ஒப்புக் கொண்டது.

கடலூரில் (3×210 மெ.வா.) வட சென்னையில் (2×120 மெ.வா.) புதிதாக நிறுவக் கருதியுள்ள அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி வழங்குதல்.

சிங்கரேணியிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து ரயில் மூலம் நிலக்கரி கொண்டு வருவது நிறுத்தப்பட்டு விட்டதால் தமிழ்நாடு மின்வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்.

## சோப்பு நிறுவன ஊழியர் ஊதியம்:

## அரசு உத்தரவு

தமிழகத்தில் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதை சனவரித் திங்கள் 25ஆம் நாளிலிருந்து கணக்கிட்டு வழங்கவேண்டும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

திருத்தி அமைக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விகிதப்படி தினச் சம்பளக்காரர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 11 முதல் ரூ. 18 வரை வழங்க வேண்டும். இது தவிர, நுகர்வோர் விலை குறியீட்டெண்ணின் அடிப்படையில் கிராக்கிப்படி தரவேண்டும்.

மாதச் சம்பளக்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 375 முதல் ரூ. 450 வரை தரவேண்டும். இது தவிர, அவர்களுக்கு கிராக்கிப்படியும் அளிக்கவேண்டும்.

சோப்பு நிறுவனங்களில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களுக்குப் பிற ஊழியர்களுக்கு அளிக்கும் ஊதியத்தில் 75 சதம் தரவேண்டும்.

காவிரி கழிமுகப் பகுதியை நவீன மயமாக்கும் திட்டம்-நிலை-1

கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையிலான சாலையை மேம்படுத்துதல்

விரைவுப் போக்குவரத்துத் திட்டம்

இவைகளைப் பற்றியெல்லாம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம்.

**செய்தியாளர்:**

தெலுங்கு கங்கைத் திட்டம் என்னவாயிற்று?

**முதல்வர் கலைஞர்:**

ஆந்திர முதலமைச்சர் என்.டி.ராமாராவ் அவர்களுடன் அது குறித்துப் பேசியிருக்கிறேன். விரைவில் நானும் அவரும் இரு அரசுகளின் அதிகாரிகளும் சந்தித்துப் பேசுவதாக இருக்கிறோம்.

அதைப்போலவே கர்நாடக முதலமைச்சர் பொம்மை அவர்களுடனும் காவேரி பற்றிப் பேசியிருக்கிறேன். அதுகுறித்தும் விரைவில் நான், கர்நாடக முதல்வரும், பாண்டிச்சேரி, கேரள முதல்வர்கள் ஆகிய நால்வரும் சந்தித்துப் பேசுவது என்றும் பிறகு மத்திய அரசின் அமைச்சர் முன்னிலையில் பேசுவது என்றும் முடிவெடுத்திருக்கிறேன்.

**செய்தியாளர்:**

நான்கு முதலமைச்சர்கள் சந்தித்துப் பேசுவது எப்போது?

**முதல்வர் கலைஞர்:**

கவர்னர் உரை விவாதங்கள் முடிந்த பிறகு அவர்களுடன் தொடர்பு கொண்டு தேதி நிச்சயம் செய்துகொண்டு பேச வேண்டும். பெரும்பாலும் அந்தக் கூட்டம் பெங்களூரில் இருக்கும்.

(சென்னை 10.2.1989)

# படமும் செய்தியும்




ஆர்மேனியா நிலநடுக்க நிவாரணப் பணிக்கென்று, இந்தியப் பிரதமர் நிவாரண நிதிக்காக 12,500 ரூபாய்க்கான காசோலை, சென்னை இராணிமேரிக் கல்லூரி ஆசிரியைகள் - மாணவிகள் சார்பில், மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடம், இராணிமேரிக் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி நிர்மலா தியாகராசன் அவர்களால் வழங்கப்பட்டது இந்த நிவாரண நிதிக்கு, அரசுக் கல்லூரிகள் சார்பில், இக்கல்லூரியே முதன்முதலாக நிதி அளித்துள்ளது.




தமிழகச் சட்டப்பேரவைக்குத் தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்ட திரு. ரமணி அவர்களுக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 1-2-89 அன்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார்.




தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அமைச்சரவையின் முதலாவது கூட்டம். (1-2-89)



மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னையில் உள்ள சில சத்துணவுக் கூடங்களுக்கு (2-2-89) நேரில் சென்று சோதனை செய்தார். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் உடன்சென்றார்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், எம்.ஜி.ஆர். சமாதிக்குச் சென்று, கட்டப்படவிருக்கும் நினைவிட மாதிரியைப் பார்வையிட்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு தலைமைச் செயலாளரும் உடன் சென்றனர். (27-1-89)



மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை, அமெரிக்கத் தூதரகத்தின் அமைச்சர் கௌன்சலர் ரூபல் கிராண்ட் ஸ்மித் அவர்கள் 8-2-89 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



அறிஞர் அண்ணா நினைவு நாளான 3-2-89 அன்று, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடந்த பொது விருந்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி.மனோகரன் அவர்கள் பங்கேற்றார்.



அறிஞர் அண்ணா நினைவு நாளன்று தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்தில், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு கே. பி. கந்தசாமி அவர்கள் கலந்துகொண்டார்.




மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன்.முத்துராமலிங்கம் அவர்கள், கிண்டி பொறியியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட நிறைவுநாள் விழாவில், அத்திட்டத்தில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார். (12-2-89)

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், 31-1-89 அன்று சென்னை - கொத்தவால் சாவடியைத் தூய்மையாக்கும் பணியை நேரில் சென்று விரைவு படுத்தினார்.





மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் அவர்கள் 8-2-89 அன்று சென்னையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வார விழாவில் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.





மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் மாதவரம் பண்ணையைப் பார்வையிட்டார். (4-2-89)



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள். 13-2-89 அன்று எழும்பூர் கண் மருத்துவ மனைக்குச் சென்று பார்வையிட்டார்; நோயாளிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்.




# அரசுக்குத் துணைபுரிவீர்!

## நிருபர்கள் சங்க வரவேற்பில்

## முதல்வர் கலைஞர்

**சென்னையில் உள்ள நிருபர்கள் சங்கம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் 5.2.89 அன்று வரவேற்பளித்தது. சங்கத் தலைவர் திரு ஜெகந்நாதன், செயலாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் - மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்குச் சங்கத்தின் சார்பில் மாலைகள் அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது :**

பத்திரிகையாளர்களுடைய விமர்சனங்கள், அவர்கள் எழுதுகின்ற தலையங்கங்கள், செய்திக் குறிப்புகள் இவைகளையெல்லாம் நான் காலையில் எழுந்ததும் படிப்பேன்; அதைப்போல மாலையில் வாய்ப்புக் கிடைத்ததும் படித்துப் பார்ப்பேன். இது எனக்கு வாடிக்கை.

அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி ஏடுகள் என்ன சொல்லுகின்றன என்பதைத்தான் பார்ப்பேன். பிறகு நடுநிலை ஏடுகள் என்ன சொல்லுகின்றன என்பதைப் பார்ப்பேன். உடனடியாக அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இதைப்பற்றி விசாரித்து எனக்குத் தகவல் தெரிவியுங்கள் என்று கேட்பது என்னுடைய வாடிக்கை!

நான் கடந்த 76-ஆம் ஆண்டு வரையிலேகூட காலையில் வெளிவரும் அன்றைய எதிர்க்கட்சிகள் ஏடுகள் எதுவாயினும் அவைகளை புரட்டிப் பார்த்து அவைகளிலே அரசுக்கு விரோதமான செய்திகள் என்னென்னவெளிவந்திருக்கின்றன- அல்லது நாட்டில் நடைபெறுகின்ற செய்திகளை அரசுக்கு எதிராக எப்படி வெளியிட்டிருக்கிறார்கள் என்பதையும் கவனிப்பேன். உண்மையிலேயே அந்தச் செய்தி நடைபெற்றிருக்குமேயானால் அதற்கு யார் பொறுப்பு, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுபோன்றவைகளையெல்லாம் அந்தப் பத்திரிகைகளைத் துணையாகக் கொண்டு, நான் உடனடியாக அவைகளை நிவர்த்தி செய்யவும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அந்தக் காலத்திலேயே-அந்தப் பயிற்சியை நான் பெற்றிருக்கிறேன்.

எனவே, இப்பொழுதும் நீங்கள் பத்திரிகை மூலமாகவும் சொல்லலாம்; என்னைச் சந்திக்கும்பொழுதும் சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால் ஒரு தொலைபேசி மூலம் கூட நீங்கள் அறிகின்ற தகவல்களைப் பற்றித் தெரிவிக்க வேண்டுமேயானால் என்னோடு சுலபமாக எப்போதும் தொடர்பு கொள்ளலாம். முன்பெல்லாம் நீங்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ள விரும்பினால் நான்கு பேரைத் தாண்டி ஐந்தாவதாகநான் பேசுவதாக இருக்கும். இப்போது அந்தக் கவலையே உங்களுக்குத் தேவையில்லை. மணி அடித்ததும் எடுத்து 'கருணாநிதி பேசுகிறேன்' என்று சொல்லுகிறவன்தான் உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

எனவே நீங்கள் இந்த அரசை எங்களோடு சேர்ந்து நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நடத்தினால்தான் நாட்டிற்கு லாபம், மக்களுக்கு நன்மை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில கோரிக்கைகள் இங்கேவைக்கப் பட்டுள்ளன. இன்றைக்கு வரவேற்போடு முடித்துவிட்டு இன்னொரு நாள் உங்கள் பிரதிநிதிகள்நாலைந்து

பேர் என்னிடம் வந்து இந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசியிருக்கக் கூடாதா என்றுகூட நான் எண்ணினேன். ஏனென்றால் வரவேற்போடு இருந்திருந்தால் உங்களுக்கும் மகிழ்ச்சி. எனக்கும் மகிழ்ச்சி.

அரசினர் தோட்டத்திலே கட்டடத்திற்கு இட ஒதுக்கீடு தேர்வு செய்வது என்று ஒரு முறையீடு வைத்திருக்கின்றீர்கள். என்னைவிட என்னுடைய சக அமைச்சர்கள் இன்னும் துடிப்புடன் இருக்கிறார்கள். நம்முடைய கே.பி.கே. அவர்கள் என்ன இருந்தாலும் இந்த ஜாதி அல்லவா? அதாவது பத்திரிகையாளர் ஜாதி! அவர் நெருங்கி என்னிடத்திலே வந்து இந்த இடத்தைக் கொடுக்கலாம். நல்ல இடமாகப் பார்த்தே கொடுக்கலாமென்று என்னிடத்திலே கூறிவிட்டார். அது அரசினர் தோட்டத்திலா அல்லது வேறு இடத்திலா என்பதைப் பரிசீலித்து நிச்சயமாக உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப்பணித் துறையின் கருத்தும் இது குறித்துப் பெற வேண்டியிருக்கிறது.

'நியூஸ் மென்' என்று நிருபர்கள் சங்கம் வெளியிடும் இதழுக்கு விளம்பரம் போதாது என்பது பற்றியும் ஒரு கோரிக்கை இங்கே வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பத்திரிகையினுடைய எண்ணிக்கை எவ்வளவு, அதைப் படிப்பவர்கள் எவ்வளவு பேர் என்பதைப் பார்த்தால் இவ்வளவுதான் விளம்பரம் கொடுக்க முடியும் என்று தோன்றும், அந்தப் பத்திரிகை வளரவேண்டுமா வேண்டாமா என்று பார்த்தால் அதற்கு எவ்வளவு விளம்பரம் தரவேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க முடியும். ஏனென்றால் பத்திரிகையினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தல்லாமல் 'நியூஸ் மென்' பத்திரிகையைப் பொறுத்தவரையில் அது தொடர்ந்து வளரவேண்டும் என்று விரும்புகிறேன். அதை வாழவைப்பதற்கு விளம்பரங்கள் டானிக் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். 'நியூஸ் மென்' பத்திரிகைக்கு மாத்திரமல்ல; நான் நம்முடைய செய்தித் துறை அமைச்சர் பொன். முத்துராமலிங்கத்திடமே, பத்திரிகைகளுக்குப் பாரபட்சமில்லாமல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். அது தொடர்ந்து நடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே 'நியூஸ் மென்' பத்திரிகைக்கு விளம்பரம் தருவதில் எந்தவிதத் தங்குதடையும் இருக்காது.

இன்னொன்று, ஒய்வு ஊதியத் தொகைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னென்ன நிபந்தனைகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, என்னென்ன நிபந்தனைகளை ரத்து செய்யலாம் என்பதையும் பரிசீலித்து ரத்து செய்ய முயற்சி எடுக்கின்றேன். ஒய்வு ஊதியத் தொகையை ரூபாய் இருநூற்று ஐம்பதிலிருந்து ஐநூறாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள். இதில் சங்கடம் என்னவென்றால் இருநூற்றி ஐம்பதை ஐநூறாக உயர்த்திக் கொடுத்துவிட்டால் கவலைப்படுவீர்கள். கேட்டதுதான் கேட்டோம் அறுநூறாகக் கேட்டிருக்கக் கூடாதா என்று யோசிப்பீர்கள். 'ஐநூறு கேட்டோம், உடனே தருவதாகச் சொல்லிவிட்டாரே' என்று சொல்வீர்கள். எனவே, இருநூற்றி ஐம்பது என்பது, நானூறாக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகளில் பயணம் செய்வது குறித்து; அனுமதிச் சீட்டுகள் ஏற்கெனவே இதே கழக ஆட்சிக் காலத்தில் என்ன இருந்தது என்பதையும் அதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள இடையூறுகளையும், தங்கு தடைகளையும் எண்ணிப் பார்த்து, அது குறித்த உங்கள் கோரிக்கையும் நிறைவேறத்தக்க வகையிலே அந்த ஏற்பாடுகளும்— செய்யப்படும் என்று எடுத்துக்கூறி நீங்கள் வழங்கியுள்ள இந்த இனிய வரவேற்பிற்கு என் சார்பிலும் அமைச்சர்கள் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்."



**மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.**

— தந்தை பெரியார்

# பார்த்தோம்-படித்தோம்

16.1.89 இதழ் அட்டையில் இடம் பெற்றுள்ள திருவள்ளுவர் திருவுருவப்படம் அற்புதம்.

டி.ரமேஷ்குமார்
பரங்கிப்பேட்டை.

(இதே போன்று பாராட்டி எழுதி இருப்பவர்கள் நா.அருணாசலன், கண்டவராயன்பட்டி, ப. முருகேசபாண்டியன், கரப்பாடி; எம்.சரவணன், வளவனூர்; எல். முத்து, எல்.பழனி, ஊத்தங்கரை; ஆர்.ஜி. துரைராஜி, கீழப்பழுவூர்; வித்தியாசேகர், விக்கிரபாண்டியம்)

இந்த இதழில் (16.1.89) வெளிவந்த கவிதைகள் யாவும் அருமை.

எஸ்.பிரபாகர்,
மேல்பாலானந்தல்.

(இதே போன்று பாராட்டி எழுதி இருப்பவர்கள் வெ. சங்கரநாராயணன், திருவண்ணாமலை-1; அ. ராஜப்பன், கருமத்தம்பட்டி; சு.முரளிகுமார், கரிக்கிலி;)

'தமிழரசு' ஒவ்வொரு இதழும் அருமை.

ரஹ்மானியா,
திட்டச்சேரி.

'தமிழ் நாகரிகம்' என்னுந் தலைப்பில் சுகி சிவம் எழுதிய கட்டுரையும், ஐம்பெரும் செல்வங்கள் என்னும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. கட்டுரையும் பயனுள்ளதாக இருந்தன.

அ.கந்தசுவாமி,
திருப்பூர்.

'இதயத்தை வென்றவர்' கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

மா.பழனி,
வில்வாரணி, மோட்டூர்.

பி.வி.கிரி எழுதிய 'ஆசை' என்ற கதை மிகமிக அருமை.

எம்.சிவகுமார்.
இராமஞ்சேரி.

(இதேபோன்று பாராட்டி எழுதி இருப்பவர்கள் பி. டி. இராமன், பெண்ணைவலம்; ஆர். முருகையா, இடைகால், வி. கே. வீரசேகரன், விக்கிரபாண்டியம், அருள்சேகர், பைங்காநாடு; பவள்தீன், திருநெல்விக்காவல்.)




## வழக்குகள் விரைவில் முடிவடைய...

தமிழ்நாட்டின் நீதிமன்றங்களில் 6 இலட்சத்து 41 ஆயிரம் மதுவிலக்கு வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. இவ்வழக்குகளை துரிதமாக முடிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. பல ஆண்டுகளாகத் தேங்கிக்கிடக்கும் வழக்குகள் பற்றி ஆராய்ந்து விரைவில் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போது 25 நீதிபதி பதவிகள் உள்ளன. இதனை 32 ஆக உயர்த்த தமிழக அரசு தீவிர பரிசீலனை செய்து வருகிறது. இத்தகவல்களை மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ஜே.சாதிக்பாட்சா அவர்கள் 3.2.1989 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அட்டையில்...

முதல்வர் பொறுப்பேற்ற பின்பு புதுடில்லிக்குச் சென்றிருந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த 9-2-89 அன்று மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்த காட்சி

வண்ணப்படம் உதவி : 'இந்து'



## பேருந்துக் கட்டணம் உயராது!


தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் 4 போக்குவரத்துக் கழகங்கள் மட்டுமே இலாபத்தில் இயங்கி வருகின்றன. மற்றவை நஷ்டத்தில் இயங்குகின்றன. 1988-89ஆம் ஆண்டில் மட்டும் ரூபாய் எட்டே முக்கால் கோடி நஷ்டம். இயந்திரக்கோளாறும் நிர்வாகச் சீர்கேடுமே இதற்குக் காரணம். இனி இவை சிறந்த நிர்வாகம் மூலம் சரிசெய்யப்படும். எனினும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தும் திட்டம் அரசுக்கு இல்லை'' என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.மு.கண்ணப்பன் அவர்கள் 5.2.89 அன்று கோவையில் தெரிவித்தார்.

## மின் உற்பத்தி நிலையங்கள்

தென்னார்க்காடு மாவட்டம் புவனகிரியில் ரூ. 9.83 கோடி செலவில் இயற்கை எரிவாயுவைக்கொண்டு, 5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளது.

இதேபோலத் தஞ்சை மாவட்டம் மன்னார்குடி வட்டத்தில் உள்ள 'கோவில்களப்பால்' என்ற இடத்திலும் 5 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை ரூ. 9.91 கோடி செலவில் அமைக்க மின்வாரியம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் தயாரித்துள்ள வரைவுத் திட்டப்படி புவனகிரியில் அமைக்கப்படும் நிலையம் ஆண்டுக்கு 37.39 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்தையும், 'கோவில்களப்பாலில்' அமைக்கப்படும் நிலையம் ஆண்டுக்கு 32.85 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்தையும் உற்பத்தி செய்யும்.



## போலி குடும்ப அட்டைகள்!

சென்னையில் 5 நாட்கள் நடைபெற்ற சோதனையில் 80 ஆயிரம் போலி நுகர்பொருள் குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை 1982 முதலே புழக்கத்தில் இருந்து வந்துள்ளன. இந்த அட்டைகளுக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் செய்வது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன. போலி அட்டைகள் வைத்திருப்பவர்மீதும் அட்டைகளை அடமானம் பெறுபவர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோல தமிழ்நாடு முழுவதும் போலி அட்டைகளைக் கண்டுபிடிக்க தனி அதிகாரிகள் அனுப்பப்பட உள்ளனர் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் 31.1.89 அன்று சென்னையில் தெரிவித்தார்.

# நல்ல காலம் பிறந்தாச்சு...!

மாமூலன்

ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு நாள்-

விடியற்காலைப் பொழுது; வீட்டு வாசலில் கேட்ட அந்தப் பாட்டு அருந்ததிக்கு ஒரு புதிய நம்பிக்கையைத் தந்தது.

''குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் வருகுது! நல்ல காலம் வருகுது!
தரித்திரம் போகுது! செல்வம் வருகுது!
படிப்பு வளருது! பாவம் தொலையுது!
தொழில் பெருகுது! தொழிலாளி வாழ்வான்!
சாத்திரம் வளருது! சூத்திரம் தெரியுது!
யந்திரம் பெருகுது! தந்திரம் வளருது!
குடுகுடு குடுகுடு நல்ல காலம் வருகுது!''-

ஒரு கோணங்கி உருவத்தில், ஊனமுற்ற காலுடன் ஒருவர் பாடிக்கொண்டு சென்றார்.

பாரதியார் எழுதிய புதிய கோணங்கிப் பாடல்தான். அதைப் பாடியவர் மாற்றி மாற்றிப் பாடியதும், அவரது உச்சரிப்பும், அவர் ஓர் உண்மையான குடுகுடுப்பைக்காரர் அல்லர் என்பதைத் தெரியப்படுத்தின.

அவரும் வேறு இசையில் ''உங்களுக்கு உழைக்க, எங்களுக்கு உத்தரவு தாருங்கள்'' என்று பாடிக்கொண்டு போன பிறகுதான் அருந்ததிக்குப் புரிந்தது.

அந்த ஊனமுற்றவர் உண்மையான குடுகுடுப்பைக்காரர் அல்ல என்றும், தேர்தல் பிரச்சாரத்துக்காக ஒரு ''யுக்தி''யைக் கடைப்பிடித்து இப்படிப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார் என்பதும் அருந்ததிக்குப் புரிந்தது.

கால் ஊனமுற்ற ஒருவர் தடியூன்றிக் கொண்டு, பிரச்சாரம் செய்வதைப் பார்க்கும் எவருக்கும் அவரின் இலட்சிய வெறி விளங்கும். இது எலெக்ட்ரானிக் யுகம். தேர்தல் களத்தில் 'வீடியோ' பிரச்சாரம் வேகமாக நடைபெறுகிறது என்று பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டாலும் நமக்கு பழகிய முறைகளில் பிரச்சாரம் செய்வதிலும் தனியான 'ஒரு ஈடுபாடு' இருப்பதை அந்தத் தேர்தல் பிரச்சாரக் குடுகுடுப்பைக்காரர் உணர்த்திச் சென்றார்.

அந்தத் தெருக் கோடியிலிருந்து குடுகுடுப்பைக்காரன் குரல் மெதுவாகக் கேட்டது. அந்தக் குரல் ஓசை.... சே.... வயதாகிவிட்டால் இப்படித் தடுமாற்றம் ஏற்படுமா? அருந்ததியின் நினைவு எங்கேயோ இழுத்துச் சென்றது. அதற்கு மேலும் வாசலில் நிற்கப் பிடிக்காதவளாக வீட்டின் உள்ளே சென்றுவிட்டாள் அருந்ததி.

இருபத்தைந்து ஆண்டுகளாகி விட்டன.

தமிழ்நாட்டில் 'மொழிப்போர்' உச்சக் கட்டத்தை எட்டியிருந்த வேளை, அடக்கு முறைகள் ஏவப்பட்டு, அதில் இராணுவமும் பங்கேற்ற நாட்கள், பச்சை இரத்தம் பரிமாற்றம், ஊருக்கு ஊர் நடைபெற்ற கெட்ட கனவான காலம்.

அருந்ததியின் கணவன் மாசிலாமணி துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானவன். அந்த ஊரில் உருக்குலைந்துபோன ஏழு சடலங்களைக் குவியலாக வைத்து இடுகாட்டில் கொளுத்தினார்கள். அதில் ஒன்று மாசிலாமணியின் உடல் என்று சொல்லப்பட்டது.

பொன்மணி—அருந்ததி, மாசிலாமணி தம்பதிகளின் மூத்த பெண் குழந்தை; வயது இரண்டு; அருந்ததி மீண்டும் கருவுற்றிருந்தாள். அப்பொழுது அவளது இரண்டாவது பெண் கண்மணி வயிற்றில் ஆறு மாதம்.

தலைமைக் கொத்தனார் வேலை பார்த்து வந்த மாசிலாமணிக்கும்,



அவன் மனைவி அருந்ததிக்கும் நெருக்கமான சொந்தம் என்று சொல்லும் அளவுக்கு யாரும் கிடையாது. கணவனும் இறந்துவிட்டான். இரண்டு வயதுக் குழந்தையோடு, வயிற்றில் வேறு. வாழ்க்கை கோரமாகவும் வறுமையோடு போராடுவதாகவும் அமைந்திருந்தது.

பக்கத்து வீட்டிலிருந்த டீச்சரம்மாவுக்கு சொந்தக்கார அம்மாவான தேவகியம்மா ஊரிலேயிருந்து வந்திருந்தாங்க....! தேவகியம்மா அருந்ததியின் பரிதாப நிலையை உணர்ந்து முந்நூறு மைல் தாண்டி அழைத்து வந்தாங்க... அந்த ஊரிலே இருந்த பெண்கள் விடுதியிலே அருந்ததிக்கு வேலை... வேலையில் சேர்ந்த இரண்டு, மூணு மாதத்துக்கு எல்லாம் கண்மணி பிறந்துவிட்டாள்.

பொன்மணிக்கு ஐந்து வயது, கண்மணிக்கு மூன்று வயது. இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றி ஆளாக்கிவிடவே உயிர்வாழ்ந்த அருந்ததியின் மீது அந்த விடுதியின் தலைவிக்கு ஓர் அனுதாபம் உண்டு. அரசின் சமூக நலத்துறையின் அதிகாரிகளிடம் அருந்ததியின் நிலையை எடுத்துச் சொல்லி, தையல் பயிற்சி வகுப்பில் சேர்த்துவிட்டார்.

அப்பொழுது அமைந்திருந்த அரசும் ஆதரவற்ற பெண்களுக்கு உதவிகளை வழங்கியது. பயிற்சி முடித்த அருந்ததிக்கு இலவசமாகத் தையல் இயந்திரத்தை அரசு வழங்கியது.

அப்பொழுதிலிருந்து அருந்ததி தையல் தொழிலில் ஈடுபட்டாள். அதுவே அவளுக்கு வாழ்வு அளித்து வருகிறது. சுமார் இருபது வருஷங்களாக அருந்ததி ஈடுபட்டுள்ள தையல் தொழில்தான் அவள் குடும்பத்தைக் காப்பாற்றியது.

பொன்மணியும், கண்மணியும் கல்லூரிப் படிப்பையும் முடித்துவிட்டார்கள். பொன்மணிக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி அலுவலகத்தின் மூலமாகச் சத்துணவுக் கூடத்தில் வேலை கிடைத்துவிட்டது. கண்மணி ஆசிரியைப் பயிற்சி முடித்துவிட்டாள். ஆனால் வேலை கிடைக்கவில்லை. ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதுதான் அவள் வேலை.

பொன்மணியின் திருமணத்திற்கு அருந்ததி முயற்சி செய்தாள். அவள் கல்லூரிப் படிப்புப் படித்ததாலோ என்னவோ வருகின்ற மாப்பிள்ளைகள் சாதாரண வேலையில் இருந்தாலும் கைநிறைய எதிர்பார்த்தார்கள். வேறு சிலரோ பொன்மணியின் வேலை நிரந்தரமாக இல்லையே... நிரந்தர அரசு வேலையாக இருந்தாலும் பரவாயில்லை என்றார்கள்.



நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அருந்ததி நினைத்தவைதான் நடக்கவில்லை. அருந்ததிக்கு அவள் எண்ணியது நடக்கும் என்றார் அழகுவேலு.

அழகுவேலு அந்த ஊரிலே இருந்த பொதுநல உள்ளம் படைத்தவர்களில் தலைசிறந்தவர். சாமானியர்தான். தமிழ்ப் பற்று மிகுந்தவர். எளியவர்களுக்காகப் பாடுபடுபவர். அவர்தான் அருந்ததியிடம் சொல்லியிருந்தார் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று, அப்பொழுது அருந்ததி வெறும் பழமொழியைத் தான் சொல்கிறார் என்று நினைத்திருந்தாள். தேர்தலின்போது அவர் வந்து சொன்னபோது அது கொஞ்சம் புரிந்தது.

தேர்தல் முடிந்த பிறகு ஒருநாள்...!

வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க வந்துகொண்டிருந்த வெற்றி பெற்ற வேட்பாளருடன் வந்த அழகுவேலு அருந்ததியிடம் சொன்னார். ''நாங்கள் சொன்னதைச் செய்வோம்... உங்களுக்கு வழி பிறக்கும்'' என்று.

''நீங்கள் பாடுபட்டதற்கு நல்ல பலன் கிடைச்சிடுச்சு''

''என்னோட அதிகமா இங்கே பாடுபட்டு உழைச்சவர் ஒருத்தர்... நொண்டிக் காலோட எப்படி அலைஞ்சாரு....''

''குடுகுடுப்பைக்காரன் மாதிரிப் பாடிக் கொண்டு பிரச்சாரம் செய்தாரே...''

''அவரேதான்... மாசிலாமணிக்கு உடம்பு சரியில்லே; பக்கத்து ஊரு பெரிய மருத்துவமனையிலே இருக்காரு! காலையிலேதான் பார்த்துட்டு வந்தோம்.''

''அவரு பேரு என்ன சொன்னீங்க''

''மாசிலாமணி 1965லே நடந்துதே அந்த மொழிப் போராட்டத்திலே காலை இழந்தவர். அடிபட்டவரை எங்கேயே தூக்கிப் போட்டுட்டாங்க. யாரோ பச்சிலை வைத்தியம் பண்ணினாங்களாம்.... ஆனால் தலையிலே அடிபட்ட காயம் இவர் நினைவைப் பாதிக்க மனநோய் மருத்துவ மனையிலே இருந்திருக்கிறார். பதினைந்து வருஷத்துக்குப் பிறகு பழைய நினைவுக்கு ஆளாகியவர் ஊருக்குப் போயிருக்கிறார். இவர் 65 லேயே இறந்துவிட்டார் என்று முடிவு கட்டிவிட்டார்கள். யாருக்குமே தெரியலே. இவர் குடும்பமும் அப்பவே ஊரைவிட்டு போயிடுச்சாம். அக்கம்பக்கத்திலே அப்போது இருந்தவர்களும் .. இல்லையாம்.... ! அதுமுதல் ஊரைச் சுற்றிக் கொண்டு பொது வேலைகள் செய்து வருகிறார். நல்ல தொண்டர்! இப்ப நெஞ்சு வலியின்னு...''

அருந்ததியின் தலை சுழல்வது போல இருந்தது. ''அவர் எங்கே இருக்கிறார்...? அவரைப் பார்க்கலாம் வாரீங்களா? எனக்கு ஒரு சந்தேகம்... அவர்....''

அருந்ததியின் அவசரம் அழகுவேலுக்குப் புரிந்தது.

மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு மாசிலாமணியை அழைத்துக் கொண்டுவர அருந்ததி தனது பெண்களோடு போயிருந்தாள்.

அதற்கு முன் அங்கே வந்திருந்த அழகுவேலு... ''நல்ல காலம் பிறந்தாச்சு அருந்ததி... எவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு பிரிஞ்சவுங்க சந்திச்சுட்டிங்க... இந்தா, பத்திரிகையிலே செய்தி பார்த்தியா? சத்துணவுக் கூடத்திலே வேலை செய்தவுங்க எல்லாரையும் அரசு அலுவலராக்கிட்டாங்க... அதோட எல்லா வேலையிலும் முப்பது சதவீதம் பெண்களுக்குத் தரப்போறாங்க... இரண்டாம் வகுப்பு வரை பெண்கள்தான் ஆசிரியையாக இருப்பாங்களாம்...! இதிலிருந்து என்ன தெரியுது!''

மாசிலாமணி மகிழ்ச்சியோடு சொன்னார். ''சொன்னதைச் செய்வோம்!''

.: கட்சிக் கண்ணோட்டமின்றித் தூய நிர்வாகம் அளிக்கப்படும்

.: உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்கள் குறித்த நேரத்தில் நடைபெறவேண்டும்.

.: அதிகாரங்கள் மத்தியிலிருந்து பரவலாக்கப்பட வேண்டும்.

# உள்ளாட்சி மன்றக் கருத்தரங்கில் முதல்வர்

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கருத்தரங்கம் 7.2.89 அன்று சென்னை-கலைவாணர் அரங்கத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்தார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் டாக்டர் எஸ். நாராயண் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

## அமைச்சரின் தலைமையுரை

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''இந்தத். துறை, மக்களோடு நெருங்கிய துறை ஆகும். இதன் மூலமே பல்வேறு சமுதாய நலத் திட்டப்பணிகள் செயல்படுத்தப் படுகின்றன. கட்சிக் கண்ணோட்டமில்லாமல், நாட்டு மக்களுக்குத் தூய்மையான நிர்வாகத்தை அளிக்கும் வழிவகைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் நோக்கத்துடனேயே இந்தக் கருத்தரங்கம் அரசினால் கூட்டப்பட்டிருக்கிறது.

''தமிழ்நாட்டில் 12,616 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. 646 பேரூராட்சி மன்றங்கள் உள்ளன: ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் 384 இருக்கின்றன. 18 ஊராட்சி ஒன்றிய நகரியங்கள் இருக்கின்றன. இவைகளில் எல்லாம் உள்ள நிதி ஆதாரங்கள் பரிசீலிக்கப்படும்.

''1958ஆம் ஆண்டில், பஞ்சாயத்துச் சட்டம் அமலான காலத்திலேயே ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவன் நான். 1976-க்குப் பின்னால், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படும் நிலை இருந்தது. அந்த நிலையெல்லாம் நீங்க வழிவகை காணவேண்டிய நாள்தான் இந்தநாள்.

இத்துறையைச் சேர்ந்த அனைவரும் தலைநிமிர்ந்து நடக்கும் வகையில் மிக நல்ல முடிவுகள் தமிழக அரசால் விரைவில் அறிவிக்கப்படும்''-இவ்வாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசினார்.

பல்வேறு ஊராட்சிகளைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட இந்தக் கருத்தரங்கில் - மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோ.சி.மணி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் இராமகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கே.என்.நேரு, மாண்புமிகு கால்நடைபராமரிப்புத்துறைஅமைச்சர் டாக்டர் சந்திரசேகரன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ்.தங்கவேலு மற்றும் மாண்புமிகு முதல்வரின் ஆலோசகர் திரு.குகன், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.ராஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

**இப்போது வேலையதிகம் எங்களுக்கு, வீணர்களாய்த் திரிவதற்கல்ல; வாய்ச் சொல் வீரர்களாய் விளங்கவுமல்ல; வன்மையுண்டு வகையான திட்டங்களை வகுத்துக்காட்ட; முயற்சியுண்டு முக்கிய இலட்சியங்களைத் தீர்த்துக் கொள்ள; கிளர்ச்சியுண்டு கடமையை நிறைவேற்ற; எழுச்சியுண்டு இனத்தைக் காப்பாற்ற.**

**—பேரறிஞர் அண்ணா**

## முதல்வரின் துவக்க உரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசியதாவது:

'இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, அதன் தொடர்பாக உங்களுடைய அரிய ஆலோசனைகளையெல்லாம் அமைச்சரும், துறையினரும் பெற்று, அந்த அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்கள் மக்களோடு தொடர்பு கொண்டு பணியாற்றுவதற்கு இன்னும் என்னென்ன உரிமைகளைத் தந்திட வேண்டும், அரசு எந்தெந்த உரிமைகள்ள தரவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்கின்ற நல்ல வாய்ப்பு இன்றைக்குக் கிட்டி இருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

இந்த நேரத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் உள்ளாட்சி மன்றங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதிலே பொறிக்கப்பட்டுள்ள சில வாசகங்களை அரசியல் கருத்துகளுக்கு-மாச்சரியங்களுக்கு இடம் இல்லாத வகையில் எல்லா கட்சிகளையும் சார்ந்த ஒன்றியத்தின் தலைவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள் என்பதை எண்ணி அரசியல் பண்பாட்டோடு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அந்த அறிக்கையிலேயே நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம் - கடந்த சில காலமாகவே மாவட்ட அளவில் திட்டமிடல் என்ற பெயரில் மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் நிலைமை டெல்லியில் உருவாகிக் கொண்டிருக்கிறது.




அதற்கு முதற்படியாக மாநில அரசுகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, மாவட்ட கலெக்டர்களைப் பிரதமர் கூட்டிப் பேசுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தொடங்கி, அதிலே மேலும் சொல்லும்போது, மாவட்ட நிர்வாகத்தையும் நேரடியாக டெல்லியே மேற்கொள்ளும் விதத்தில் தமிழ் நாட்டில் அப்படி ஒரு பரீட்சையை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

அரசியல் சட்டத்திற்கும் கூட்டாட்சி முறைக்கும் ஜனநாயகத்திற்கும் இது விரோதமானது, என்று தேர்தல் அறிக்கையிலேயே நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்.

அதை இன்றைய தினம் தினமணி பத்திரிகை தன்னுடைய தலையங்கத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறது.

'உள்ளாட்சித் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமென்பது கொள்கையளவில் போற்றி வரவேற்கத்தக்கதே என்றாலும், பல மாநிலங்களின் கூட்டு அமைப்பாக இருக்கும் ஜனநாயக சமஷ்டி அமைப்பை மத்திய அரசின் தனியாட்சி அமைப்பாக மாற்றிவிடும் அபாயம் இருக்கிறது. ஏற்கெனவே மாநிலங்களின் அதிகாரங்களை மத்திய அரசு பறித்துத் தன்னிடமே குவித்துக் கொள்ளும் போக்கு அதிகமாகக் காணப்படுகின்றது.

பஞ்சாயத்து ராஜ்யம் பற்றித் தீவிரமாக ஆலோசித்துச் சிபாரிசுகளைத் தருவதற்காக, பிரதமர் மத்திய அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்திருக்கிறார். இந்தக் குழு தற்போது மத்தியில் ஆளும் கட்சியின் நலனை மட்டும் கருத்தில் கொள்ளாமல் இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள ஜனநாயக அமைப்பின் மரபுகளையும் உரிமைகளையும் பாதுகாப்பதாகவும் இருக்கவேண்டும்'

-என்று தினமணி ஏடு தன்னுடைய தலையங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறது.

ஏறத்தாழ நாங்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டிய அதே உணர்வின் அடிப்படையில் இந்தத் தலையங்கம் தீட்டப்பட்டிருக்கிறது.

### பரவலான அதிகாரம்

உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்கள், அது நகராட்சிகளானாலும், ஊராட்சி அல்லது ஒன்றியங்களானாலும் பேரூராட்சியானாலும் குறித்த நேரத்திலே நடைபெறவேண்டும். அதற்கான முறைகளை வகுக்க மாநில அரசுகள் அதிகாரத்தைப் பெற்றிட வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன்.

ஏற்கெனவே மாநில அரசுகளுடைய அதிகாரங்கள் மத்தியிலே இருந்து பகிர்ந்து அளிக்க வேண்டும், ஓரிடத்திலே குவிந்து கிடக்கக் கூடாது என்ற ஒரு கருத்து வேகமாக - வலுவாகப் பரவிக் கொண்டிருக்கும்போது உள்ளாட்சி மன்றங்களின் அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களையும் டெல்லியிலே 'குவித்துக் கொள்வதால், உள்ளாட்சி மன்றங்கள் மக்கள் பணியினை மேலும் நெருங்கி அருகிருந்து நிறைவேற்றிட இயலாது என்று அந்த வருத்தத்தை நானிங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், அவர்களைப் போன்றவர்கள் ஊராட்சிகளில், ஒன்றியங்களில், நகராட்சிகளில் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்திலிருந்து பல்வேறு அதிகாரங்கள் பல கட்டங்களிலே கொஞ்சங் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு இன்றைக்குச் செயலற்ற ஒரு நிலைமையிலேதான் உள்ளாட்சி மன்றங்கள் இருக்கின்றன. இந்த அரசு நீங்கள் மகிழத்தக்க வகையிலே - பறிக்கப்பட்ட அதிகாரங்களையெல்லாம் வழங்கவும் பல நல்ல தேவையான உரிய அதிகாரங்களை வழங்கவும் பல நல்ல முடிவுகளை விரைவிலேயே அறிவிக்க இருக்கிறது என்பதை இங்கே நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைத்தான் தேர்தல் அறிக்கையிலேகூட குறிப்பிட்டு இருக்கின்றோம். கடந்த காலத்தில் நகராட்சிகளிடமிருந்தும், ஒன்றியங்களிடமிருந்தும், பஞ்சாயத்துக்களிடமிருந்தும் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று; மேலும் மக்களுக்குப் பணியாற்றும் விதத்தில் அதிக அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் வழங்கப்படும்.

மாநில சுயாட்சி கோருகிற எங்களால்தான் உள்ளாட்சிகளுக்குச் சுயாட்சி தரமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த காலத்தில் நகராட்சி, ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களின் ஐந்தாண்டுப் பதவிக்காலம்மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. பெரும்பாலானோர் வெற்றி பெற்றுவிட்ட காரணத்தால்கிடைத்த தண்டனை அது.

ஜனநாயகத்திற்கு நேர்ந்த இந்த விபத்தை மாற்றி அவர்களது பதவிக்காலம் முன்புள்ளதுபோல அமைய, மேலும் இரண்டாண்டுக் காலம் நீட்டிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். நீட்டிக்கப்படும் என்று இப்போது நான் சொல்ல இயலாது. ஏனென்றால் கவர்னர் உரை வர இருக்கிறது. எனவே இந்த உறுதிமொழி என்ன ஆகும் என்பதை கவர்னர் உரையிலே நீங்கள் காண்க.

ஏற்கெனவே இந்த அறிக்கையிலே நாங்கள் அறிவித்தபடி சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஏப்ரல் திங்களிலே நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

### மக்கள் பிரதிநிதிகள்

நான் ஒன்றியத் தலைவர்களுடைய கருத்தரங்கத்திலே மாநகராட்சி மன்றங்களைப் பற்றி பேசுவது பொருத்தமுடையதா என்ற வினா எழுந்தாலும் கூட ஆங்காங்கே சிறுசிறு பகுதிகளாக, வட்டங்களாக அல்லது வார்டுகளாக டிவிஷன்களாக இப்படி பல்வேறு இடங்களில் இருக்கிற மக்கள் தங்கள் குறைகளை ஒரு பரந்த அமைப்பிலே எடுத்துச் சொல் வதற்குப் பதிலாக, குறுகிய வட்டங்களில் எடுத்துச் சொல்லுவது எளிது. அவரவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்க ஒரு ஐந்தாறு தெருக்கள், ஒரு பத்துப் பதினைந்து தெருக்கள் அடங்கிய வட்டங்களில் உள்ள மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து குழாயில் தண்ணீர் வரவில்லை, மருத்துவமனை சரியாக இயங்கவில்லை, சாக்கடை சுத்தம் செய்யப்படவில்லை, கழிவுநீர் அகற்றப்படவில்லை, தூய்மை காக்கப்படவில்லை என்பன போன்ற இத்தகைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, முறையீடுகள் பெறுவதற்கு ஆங்காங்கே குறுகிய பகுதிகளில் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தாக வேண்டும்.

அவர்கள் மூலமாகத்தான் பல காரியங்களை நாம் செய்திட முடியும். என்னதான் அரசு பல திட்டங்களை நிறைவேற்றினாலும்கூட அந்தத் திட்டங்கள் கீழ்மட்டத்திலே இருக்கின்ற மக்களைப் போய் தொட வேண்டுமேயானால், அதனைச் செவ்வனே செய்யக்கூடிய அமைப்புகளாக ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் இவைகள்தான் இருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது.

அப்படி மறந்து விடாத நிலையில்தான் மாநகராட்சியின் பொறுப்பை ஏற்றிருக்கின்ற நாங்கள் எதிர்காலத்திலே அரசு தீட்டுகின்ற எந்தத் திட்டங்களானாலும், மக்களைப் போய் அதன் பயன் எட்ட வேண்டுமென்ற குறிப்போடு அதை யார் செய்வது என்று திட்டமிட்டுஅதைச் செய்யத் தகுதி படைத்தவர்களும் அந்தந்தப்பகுதி மக்களுக்கு மிக அருகாமையில் இருப்பவர்களும் ஊராட்சி மன்றம், உள்ளாட்சி மன்றம், நகராட்சி மன்றம் எனப் பொறுப்பு ஏற்றிருப்பவர்தான் என்கின்ற முடிவிற்கு வந்து, அந்த அதிகாரங்கள் மேலும் பரவலாக்கப்படும் என்கின்ற உறுதிமொழியினை மீண்டும் மீண்டும் இந்த அவையிலே-தொடக்க விழா ஆற்றுகிற நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல இந்தத் திட்டங்களுடைய பயனை மக்கள் துய்த்து உணர, அதனை அடைந்து மகிழ நல்வாழ்வு எய்திட அரசு திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது. எந்த வழியாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நடைமுறைப்படுத்தினால் மட்டும் போதாது. தூய்மையான எண்ணத்தோடு, துல்லியமான நோக்கத்தோடு, நம்மை மக்கள் பொதுப்பணி ஆற்றத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய முறையில் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்கின்ற அந்த உணர்வோடும் பிரதிநிதிகள் பணியாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். இல்லாவிட்டால் பெரிய திட்டம் மக்களிடம் போய்ச் சேருகிறநேரத்தில் கரைந்துவிடக்கூடும்.

### அண்ணா சொன்ன கதை

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக சட்டமன்றத்திலே பேசும்போது குறிப்பிட்ட ஒன்று இங்கே நினைவுகூரத்தக்கது. புதிய புதிய திட்டங்களை உருவாக்குகிறோம். ஆனால் அந்தத் திட்டங்கள் மக்களைப் போய்ச் சேரவில்லை. என்ன காரணம் என்கின்ற கேள்வி எழும் போது ஒரு உவமைக் கதையை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஒரு மன்னன் இப்படிப்பட்ட ஒரு வியப்பிற்குரிய வினாவை அமைச்சர்களிடத்திலே எழுப்பினான். உடனே அந்த கெட்டிக்கார அமைச்சர் ஒரு ஐஸ் கட்டியைக் கொண்டு வரச் சொன்னார். அந்த ஐஸ்கட்டியை மன்னர் கையில் தந்து, தன் கையில் பிறகு பெற்று, பிறகு அங்கு இருந்த அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொருவரின் கையிலே மாற்றிமாற்றிக் கொடுத்து, பிறகு அதிகாரிகளின் கைகளுக்கு அந்த ஐஸ் கட்டி சென்று கடைசியிலே இருந்தவரின் கையில் ஒரு துளி தண்ணீர்தான் மிச்சமாகப்போய்ச் சேர்ந்தது என்று அண்ணா ஒரு உவமைக் கதை சொன்னார்.

அதைப்போல, பல பேருடைய கை மாறுகிற நேரத்தில் ஐஸ் கட்டி தண்ணீராக மாறி, ஏழைகளின் விழிகளில் கண்ணீரை வரவழைக்கிற நிலை இருந்திடலாகாது.

எனவே, எந்தத் திட்டமானாலும் அந்தத் திட்டம் ஐஸ் கட்டித் திட்டமாக மாறாமல், உரியவர்களின் கைக்குப் போய்ச் சேருகிற திட்டமாக அவைகள் அமைந்திட வேண்டும். அதைப் பயன்படுத்துகின்றவர்களும், அதைச் செயல்படுத்துகின்றவர்களும் அந்த உணர்வோடு செயல்படுத்த வேண்டும்.

---

### சட்ட மன்றத்தில் ஆங்கிலோ - இந்திய மக்களின் சார்பில் திரு ஆஸ்கார் சீ. நிக்லி

234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழகச் சட்டமன்றத்தில் ஒவ்வொரு தேர்தல் முடிவின் போதும் ஆங்கிலோ இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை நியமன உறுப்பினராக மேதகு ஆளுநர் நியமிப்பது வழக்கம். அந்த வகையில் தமிழகச் சட்டமன்றத்திற்கு ஆங்கிலோ இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்த திரு ஆஸ்கார் சீ. நிக்லியை உறுப்பினராக மேதகு ஆளுநர் அவர்கள் நியமித்துள்ளார்.

சென்னை லயோலா கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரியும் திரு. ஆஸ்கார் சீ. நிக்லியின் வயது 33. தமிழ்நாடு ஆங்கிலோ-இந்தியப் பேரவைத் தலைவர் இவர்.

அதிகாரங்களை வழங்கினால் மாத்திரம் போதாது. அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துகின்றவர்களும் அதற்கேற்ற வகையில் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கின்ற என் பணிவன்பான வேண்டுகோளை ஒன்றியங்களுடைய பெருந்தலைவர்களாக இருக்கின்ற உங்கள் முன் நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே நீங்கள் இந்தக் கருத்தரங்கில் உங்களுக்குள்ள குறைகளையெல்லாம் தாராளமாக எடுத்துச் சொல்லுங்கள். என்னென்ன குறைகள் எந்தெந்தத் தடைகளால் மக்கள் பணி ஆற்றிட முடியாமல் இன்னலுறுகிறீர்கள் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள். இங்கே பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் வந்திருக்கின்றீர்கள். அவரவர்களும் தங்களது கருத்துக்களை எடுத்துக்கூற இந்த மேடையிலே வாய்ப்பு உண்டு. அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள்.

பிறகு அமைச்சர்களும், அதிகாரிகளும் வகுக்குள்ள திட்டப்படி அவரவர்கள் அமர்ந்து பேசி தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தொகுத்துத் தாருங்கள்.

அவைகளையெல்லாம் வைத்து உரிய சட்டங்களை விதிமுறைகளை, நீங்கள் மக்களுக்குப் பணியாற்றக்கூடிய வசதி வாய்ப்புகளை இந்த அரசு நிச்சயமாக உருவாக்கித் தரும் என்கின்ற உறுதிமொழியை மீண்டும் ஒரு முறை தெரிவித்து, இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து விடை பெறுகிறேன்.'' இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

# — நகர்மன்றத் தலைவர்கள் மாநாடு —

அதே நாளில் (7.2.89) நகர்மன்றத் தலைவர்கள் மாநாடு சென்னை - ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், மாலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த இம்மாநாட்டிற்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

98 நகராட்சித் தலைவர்களும், 8 நகர்ப்புற நகரியங்களின் தலைவர்களும் இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார்கள்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு ஆகியோரும் -அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். இராஜேந்திரன், ஊராட்சித் துறைச் செயலாளர் திரு. பாண்டே, மின்வாரியத் தலைவர் திரு டி.வி. அந்தோணி முதலானோரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

ஊராட்சித் துறைச் செயலாளராக இருந்த திரு.சீதாராமதாஸ் வரவேற்புரையுடன் மாநாடு தொடங்கியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளை ஏற்று, ஐம்பதாண்டுக்காலப் பொது வாழ்வில் புகழ்பெற்றவர் நமது முதல்வர் அவர்கள்.

''நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த உள்ளாட்சித்துறையின்மூலம் நாட்டு மக்களுக்குக் கட்சி மாச்சரியமின்றி என்னென்ன செய்வோம் என்று, தேர்தல் பிரகடனம் செய்த போதே அறிவித்தார்கள். 1975ல், அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்த போது இதுபோன்ற நகர்மன்றத் தலைவர்கள் மாநாடு கூட்டப்பட்டது; அதற்குப் பிறகு இப்போது தான் இப்படி நாமெல்லாம் ஒன்று கூடிப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நீங்களெல்லாம் இந்த மாநாட்டின் மூலம் வழங்கும் ஆலோசனைகளை அரசு நிச்சயம் கவனத்தோடு பரிசீலிக்கும். நகர்மன்றத் தலைவர்களாகிய நீங்களெல்லாம் சுதந்திரமாகச் செயல்படத்தக்க அறிவுரைகளை நமது முதல்வர் தலைவர் அவர்கள் வழங்குவார்கள்." இவ்வாறு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

''இம்மாநாட்டில் பாளையங்கோட்டை நகராட்சி மன்றத்தலைவர் திரு சுப.சீதாராமன், திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தலைவர் திரு.முருகையன், திருப்பூர் நகராட்சிமன்றத் தலைவர் திரு. கந்தசாமி, ராஜபாளையம் நகராட்சி மன்றத் தலைவர் திரு. சுப்புராஜா, நெல்லிக்குப்பம் நகராட்சி மன்றத் தலைவர் திரு கோவிந்தராசன், சேலம் நகராட்சி மன்றத் தலைவர் டாக்டர் சூடாமணி ஆகியோரும் பேசினார்கள்.

> **எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்குத் தேவையானது தானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும், பொருத்தமில்லாமலும் பின்பற்றக்கூடாது.**
>
> **—பேரறிஞர் அண்ணா**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நகர்மன்றத்தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

நேரம் அதிகமில்லை நான் விரிவாகப் பேசுவதற்கு. ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு, சரியாக ஆறு மணிக்கெல்லாம் நான் செல்லவேண்டியவனாக இருக்கிறேன். அதனால்தான் இன்னும் சிலர் இங்கே உரையாற்ற வேண்டி இருந்தும்கூட அந்த வாய்ப்பை அவர்கள் பெற முடியவில்லை. இந்த அதிகாரமே இல்லை; பிறகு என்ன அதிகாரத்தைக் கொடுக்கப் போகிறார் என்று அவர்கள் நினைக்கக் கூடும். தயவுசெய்து அப்படி நினைக்க வேண்டாம் என்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மாறாக - இதற்குப் பதிலாக அதிக அதிகாரங்கள் உங்களுக்கு அளிக்கப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு மாநில அரசுகளுடைய அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொண்டிருப்பது போதாது என்று, உள்ளாட்சி மன்றங்களுடைய அதிகாரங்களையும் தானே எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு சங்கடத்தை ஒரு சுமையை வலிய வந்துஏற்றுக்கொள்வது தேவையில்லை.

இதே கருத்தை உள்ளடக்கி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் மாவட்ட நிர்வாகங்களை நேரடியாக மத்திய அரசே கவனிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்றும், இதற்கு அடுத்து உள்ளாட்சி மன்ற நிர்வாகங்களையும் நேரடியாக எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடிய அபாயம் முகிழ்த்து இருப்பதும் ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

அதையேதான் நடுநிலை ஏடு என்று கருதப்படுகிற 'தினமணி'' ஏடும் இன்று காலையிலே தலையங்கமாகத் தீட்டியிருக்கிறது.

எங்கள் அதிகாரங்களை எடுத்துக் கொள்ள நீங்கள் யார் என்று மத்திய சர்க்காரைப் பார்த்து நான் அதிகாரத்தோடு கேட்கவில்லை. நமக்கு இருப்பதெல்லாம் அவர்கள் மீது அனுதாபம்தான். இன்னும் எவ்வளவு சுமையை நீங்கள்தாங்கப் போகிறீர்கள்? ஏன் வீணாக நீங்களே உங்கள் முதுகில் பளுவை ஏற்றிக்கொள்கிறீர்கள்? வேண்டாம்; அந்தப் பளுவை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்.

மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களின் சுமைகளைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கும்பொழுது, இல்லை இல்லை நானே எல்லாப் பளுவையும் சுமக்கிறோம் என்று சொன்னால், கழுத்து ஒடியும், அல்லது முதுகெலும்பு முறியும், அந்த சங்கடம் உங்களுக்கு வேண்டாம் என்கிற அந்த அன்பு உள்ளத்தோடு நான் அதிகச் சுமையை ஏற்றுக் கொள்ளாதீர்கள் என்று மத்திய அரசைப் பார்த்து நாம் பணிவன்போடு எடுத்துக் கூறுகிறோம்.

பணிவன்பு என்பது, அன்பிற்குத்தான் பணிவே தவிர நாம் கொண்டிருக்கிற கொள்கையிலே பணிவு கிடையாது என்பதை இங்கே எடுத்துக்கூற நான் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதிகாரங்கள் பறிக்கப்பட்டதாக இங்கே பேசிய நகர்மன்றத் தலைவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். அதிகாரம் பறிக்கப்பட்டதுகூட அவ்வளவு பெரியதல்ல. நகர்மன்றத் தலைவர்களுடைய கௌரவமே பறிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் மிக முக்கியம்.

நான் முதலில் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். பறிக்கப்பட்ட கௌரவம் உங்களுக்கு மீண்டும் வழங்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்து பக்கத்திலே அமர்ந்து கொள்ளலாமா என்ற கேள்வியை இங்கே எழுப்பினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென்று தனி உரிமைகள் தனிப்பணி அவர்களுடைய தொகுதிகளைப் பொறுத்து இருக்கின்றன. அவர்கள் நகர்மன்றத் தலைவர்களையோ, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையோ, ஊராட்சித் தலைவர்களையோ, பேரூராட்சித் தலைவர்களையோ அல்லது நகரியத் தலைவர்களையோ அணுகி, அவர்களும் துணை நின்று நகரை வளப்படுத்த, ஊரை வளப்படுத்த, ஒத்துழைப்பதில் எந்த விதமான மறுப்பும்

## அடுத்த இதழிலிருந்து
## வட்டாரச் சிறுகதைகள்

**அந்தந்த வட்டார மண்ணின் மணத்தையும், பழக்க வழக்கங்களையும், மக்களின் வாழ்க்கை நிலையையும், வழக்கியலில் உள்ள பேச்சு மொழிகளைப் பயன்படுத்தியும் அமைந்த சிறந்த வட்டாரச் சிறுகதைகள் 'தமிழரசு' அடுத்த இதழ் முதல், தொடர்ந்து இடம் பெறும்.**

கிடையாது. அதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. ஆனால் அவர்களுக்குப் பக்கத்திலே நாற்காலி போட வேண்டும். அப்படிப் போட்டால்தான் ஏற்றுக் கொள்ளப்படும் என்றெல்லாம் விதிகளோ அல்லது சட்டங்களோ செய்வது அவர்களுடைய மதிப்பைக் குறைக்கின்ற ஒன்றாகும்.

நான்-நகர்மன்றத் தலைவர்களும் ஒன்றியத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, திருச்சியில் என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களை மாத்திரம் அழைத்து அறிவுரைகளைக் கூறியபொழுது சொன்னேன். ''என்னையோ கட்சியினுடைய தலைவர்களையோ அடிக்கடி வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கு அழைக்காதீர்கள். மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்யுங்கள். நேரத்தை வரவேற்பு விழாக்களுக்கு செலவழிக்காதீர்கள்'' என்று கேட்டுக் கொண்டேன். அதையும் மீறிச் சில இடங்களில் ஒன்றிரண்டு அழைப்புக்கள் தவிர்க்க முடியாதவைகளாக ஆனபொழுது சில படத்திறப்பு நிகழ்ச்சிகள்-'தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அம்பேத்கார், காயிதே மில்லத் ஆகியோரது படங்களைத் திறந்து வைக்கிற நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்பட்டபொழுது, நான் மேடைக்குச் செல்லும்பொழுது எனக்கு என்று ஒரு தனி நாற்காலி அங்கே போடப்பட்டிருக்கும். நான் அந்த நாற்காலியில் நகராட்சித் தலைவரை அமர வைத்துவிட்டு ஒரு சாதாரண நாற்காலியில் பக்கத்திற்கும் பக்கத்தில் போய் உட்கார்ந்து அவர்களுக்குத் தரவேண்டிய கௌரவத்தை எதிர்க்கட்சித் தலைவனாக இருந்து எப்படித் தர முடியுமோ அப்படித்தந்திருக்கிறேன்.

எனவே எதிர்க்கட்சியிலிருந்தே அந்தக் கௌரவத்தை அவர்களுக்கு வழங்க முடிந்தது என்றால், உங்கள் தயவால் தமிழ்நாட்டு மக்கள் தயவால், ஆளுகின்ற பொறுப்பை ஏற்று இருக்கின்ற நேரத்தில் நிச்சயமாக அந்தக் கௌரவம் உங்களுக்கு வழங்கப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று ஒரு பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, நான் உங்களை எல்லாம் சந்தித்து இதே இராஜாஜி மண்டபத்தில் பேசினேன். காலையில் உங்களைச் சந்தித்துப் பேசினேன். மாலையிலே ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. மீண்டும் இப்பொழுது நாம்சந்தித்து இருக்கிறோம். ஆனால் நிச்சயமாக ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வராது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆனால் எனக்குள்ள கவலையெல்லாம் இந்த இடைப்பட்ட 13 ஆண்டுக் காலத்தில் நகராட்சி மன்றத் தலைவர்களையோ ஒன்றியத் தலைவர்களையோ சந்திக்கின்ற வாய்ப்பைத் தேர்தல்கள் நடக்காத காரணத்தால்அரசும் பெறவில்லை. நகராட்சி மன்ற ஊராட்சிஒன்றியத் தலைவர்களும் பெறவில்லை. இப்பொழுதும் தேர்தல் முடிந்து ஒரு மூன்றாண்டுக்காலம் ஆகிவிட்ட இந்தச் சூழ்நிலையில் இந்த மூன்றாண்டுக் காலத்திலே நகராட்சி மன்றத் தலைவர்களும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தங்களுடைய உரிமைகளைப் பெற, தங்களுடைய கௌரவத்தைப் பெற, அதிகாரங்களைப் பரவலாக ஆக்க மனுக்களைத் தூக்கிக் கொண்டு சென்னை வீதிகளிலே நடந்துசென்று கவர்னர் மாளிகையிலேகவர்னரைச் சந்திக்க நேரம் கேட்டு, மனுக்களை அளிக்க வேண்டிய நிலை ஒன்று இருந்ததையும்-இன்றைக்கு நீங்கள் நடந்துவந்து மனுக்களைத் தராமல் நானே உங்களை அழைத்து, வேண்டியதைக் கேளுங்கள், முடிந்ததைச் செய்கிறோம் என்று கூறுகிற நிலை ஏற்பட்டுள்ளதையும் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். ஒரு மூன்றாண்டுக்காலம் தான் உங்களுடைய பதவிக்காலம் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அநேகமாக இன்னும் இரண்டு மாதத்தில் உங்களுடைய பதவிக்காலம் முடிவடைய இருக்கிறது. பயந்து விடாதீர்கள்.

இப்படி ஒன்றரை மாதக் காலம் மிச்சமிருக்கிறநேரத்திலே உங்களை

அழைத்து என்னென்ன அதிகாரம் வேண்டும் என்று கேட்பதிலே பயன் என்ன இருக்க முடியும்? இதிலிருந்து புரிந்து கொண்டிருப்பீர்கள். இடையிலே இருப்பது ஒன்றரை மாதக் காலம் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

புரிந்து கொள்ளக்கூடிய மனப் பக்குவம் உள்ளவர்கள் நீங்கள் என்ற காரணத்தினால் இந்த அளவோடு அதை நான் முடித்துக்கொள்கின்றேன்.

ஒரு நகராட்சியோ, ஊராட்சியோ இவற்றின் மூலமாகத்தான், எவ்வளவு திறமைமிக்க அரசாக மாநில அரசாக இருந்தாலும் எவ்வளவு திறமை வாய்ந்த அமைச்சர்களை மாநில அரசு பெற்றிருந்தாலும், எவ்வளவு திறமை வாய்ந்த அதிகாரிகளை மாநில அரசு பெற்றிருந்தாலும், திட்டங்கள் பயனடைய வேண்டிய மக்கள் அளவுக்குச் சென்று, அந்தப் பயனை அந்த மக்கள் உரிய முறையில் அடைய வேண்டுமேயானால், அதற்கு நல்ல வாய்ப்பும் வசதியும் உள்ள கருவிகளாகப் பயன் படக்கூடிய உள்ளாட்சி மன்றங்கள்தான் என்பது என்னுடைய முடிவு.

இந்த மாநிலத்தினுடைய நலவாழ்வுக்கு, மாநில மக்கள் தழைத்து வாழ்வதற்கு, மாநிலம் எல்லாத் துறையிலும் முன்னேறுவதற்குப் பயன் படுகின்ற வேர்களாகத்தான் நகராட்சி மன்றங்களையும் ஊராட்சி மன்றங்களையும் நான் கருதுகின்றேன்.

அப்படி கருதுகின்ற காரணத்தாலேதான் ஆட்சி அமைந்தவுடன் கூட்டப்பட்ட முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் வேறு எது குறித்தும் விவாதிக்காமல், நகராட்சிகள் ஊராட்சிகள், ஒன்றியங்கள் இவை குறித்து அவைகளுக்கு மீண்டும் என்னென்ன அதிகாரங்களை வழங்கலாம் என்பது பற்றி யோசித்துப் பல முடிவுகளை எடுத்திருக்கிறோம்.

அந்த முடிவுகள் எல்லாம் கவர்னர் உரையிலும், அந்த உரையைத் தொடர்ந்து நடைபெறுகின்ற விவாதங்களிலும், அதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலும் அறிவிக்கப்பட இருக்கின்றன. அவைகளெல்லாம் நீங்கள் மகிழ்ச்சி அடையத்தக்க வண்ணம் அமையக்கூடிய முடிவுகளாக இருக்கும்.

அதுவும் உங்களுக்கு நிறைவைத் தராவிட்டால் மீண்டும் எங்களைச் சந்திக்கலாம். உங்கள் குறைகளைச் சொல்லலாம். முறையீடுகளைத் தரலாம். ஆவன செய்யப்படும் என்கிற உறுதிமொழியை மீண்டும் உங்களுக்கு அளிக்கிறேன்.”

# அரசு அறிவிப்புகள்

## சிவில் சர்ஜன்களுக்கு ரூ. 150 சிறப்பு ஊதியம்.

மருத்துவத்துறையில் பணியாற்றும் 'சிவில் சர்ஜன்களுக்கு' மாதம் ரூ.150 சிறப்பு ஊதியம் வழங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாணையின்படி தமிழ்நாட்டில், மருத்துவக்கல்வி, மருத்துவச் சேவை, குடும்ப நலம், ஆரம்பச் சுகாதார மையங்கள், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிவில் சர்ஜன்கள் இதனால் பயனடைவர்.

## கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு.

பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ள விகிதப்படி தமிழ்நாடு பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் பிப்ரவரி முதல் வழங்கப்படும். புதிய விகிதம் மார்ச் முதல் தேதி வழங்கப்படும். அதற்கு முற்பட்ட காலத்தில் உள்ள ஊதிய நிலுவை பின்னர் அவர்களுக்கு வழங்கப்படும்.

(1.2.89 அன்று செய்தியாளர் கூட்டத்தில் மாண்புமிகு பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் அறிவித்தார்கள்.)

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் தலைமையிடம் சென்னைக்கு மாற்றம்

தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரத்தில் உள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னைக்கு மாற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு வீட்டுவசதி அளிப்பது, ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மாணவரில்லங்கள், பள்ளிகள் கட்டுதல், ஆதிதிராவிடருக்குப் பயனளிக்கும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இக்கழகம் 15.2.1974 அன்று சென்னையில் செயல்படத் தொடங்கியது. இதன் தலைமையிடத்தை விழுப்புரத்திற்கு மாற்றும்படி 1978 ஜூலைத் திங்களில் அரசு ஆணையிட்டது. அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து திறம்படச் செயலாற்றவும், அரசுடமை வங்கிகளின் நிதி உதவியுடன் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தவும் கழகத்தின் தலைமையிடத்தை சென்னைக்கு மாற்றும்படி கோரி ஏராளமான முறையீடுகள் வந்தன. இக்கழகத்தின் தலைமையிடத்தை சென்னைக்கு மாற்றி அரசு தற்போது ஆணை பிறப்பித்துள்ளதால் இக்கழகம் மேலும் சிறந்த முறையில் திறம்பட செயலாற்றக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகத்தின் நேரிடப்பணி அமைப்பை மூன்று அல்லது நான்கு மண்டல அலுவலகங்களின் பொறுப்பில் கொண்டு வருவதன் மூலம் செம்மைப்படுத்தப்படலாம் எனவும் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டல அலுவலகங்களில் ஒன்று விழுப்புரத்தில் ஏற்கெனவே உள்ள இக்கழகத்தின் கட்டடத்தில் அமைக்கப்படும். ஏனைய மண்டல அலுவலகங்களை அமைக்கும் இடங்கள் பற்றி விரைவில் முடிவு செய்யப்படும்.

## நீதிபதி சதாசிவம் விசாரணைக் குழு கலைக்கப்பட்டது.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி எஸ்.கே.ரே தலைமையிலான விசாரணைக்குழு 24.11.88 முதல் கலைக்கப்பட்டு விட்டது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி சதாசிவம் விசாரணைக் குழு இனியும் நீடிக்கத் தேவையில்லை எனக்கருதி இக்குழுவை 2.2.1989 முதல் கலைத்துவிட தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## அரசு கொறடா, துணைக் கொறடா தேர்வு:

தமிழக சட்டமன்றக் கொறடாவாக திரு. கா. மு. கதிரவன் (கடையநல்லூர்) அவர்களும் துணைக் கொறடாவாக திரு. வி. கே. இராஜு (அரக்கோணம்) அவர்களும் 12.2.89 அன்று நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

# கரும்பில் நீர் நீர்வாகம்



**இரா. துரை, உதவிப்பேராசிரியர் (உழவியல்)**
**ச. இராஜசேகரன், பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்-1.**

கரும்பு அதிக நீரை ஏற்று வளரக்கூடிய ஒரு பயிர். ஒரு பருவச் சாகுபடிக்கு சுமார் 2000 முதல் 2500மி.மீ. வரை நீர் தேவைப்படும். ஆயினும் இந்த அளவு, இடத்துக்கு இடம் பல்வேறு சூழ்நிலைகளைப் பொறுத்து மாறுபடும். நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள இடத்தில் சாகுபடி செய்தால் எக்டேருக்கு 20-30 டன் வரை கரும்பு மகசூல் அதிகரிக்கிறது. கரும்புப் பயிரில் மொத்த பருவத்தை முளைப்புப் பருவம் (1 முதல் 35 நாள்வரை) கிளைப்புப் பருவ்ம் (36 முதல் 100 நாட்கள் வரை) வளர்ச்சிப் பருவம் (101 முதல் 270 நாட்கள் வரை), மற்றும் முதிர்ச்சிப் பருவம் (271 முதல் அறுவடைநாள் வரை) என நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பருவத்திற்கும் நீர் தேவை மாறுபடுகிறது. கடலூரி லுள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள் ளப்பட்ட பரிசோதனைகளிலிருந்து பின்வரும் பரிந்துரை செய்யப்படுகிறது:

| பயிரின் பருவம் | நீர்ப்பாசன இடைவெளி | மொத்த நீர்ப் பாசனம் |
|---|---|---|
| முளைப்புப் பருவம் (1-35) | 9 நாட்களுக்கொரு முறை | 4 |
| கிளைப்புப் பருவம் (36-100) | 8 ,, | 7 |
| வளர்ச்சிப் பருவம் (101-270) | 8 ,, | 21 |
| முதிர்ச்சிப் பருவம் (271அறுவடை) | 13 ,, | 7 |
| | மொத்தம் | 39 |

ஒரு டன் கரும்பு விளைச்சலுக்குச் சுமார் 250 டன் நீர் தேவைப்படுகிறது.

**நீர்ப்பாசன முறைகள்:**

கரும்புக்கு நீர்ப்பாசன முறைகளை (அ) மேற் பரப்பு நீர்ப்பாசனம், (ஆ) மேல்நிலை நீர்ப்பாசனம் என இருவகையாகப் பிரிக்கலாம். இதில் கரும்புசால்களில் நீர்விட்டுப்பாசனம் செய்யும் முறையே பெரும்பாலும் பழக்கத்தில் உள்ளது. மேல்நிலை நீர்ப்பாசனம் சிக்கன மாக நீரைப் பயன்படுத்த பாசனத் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் பயன்படுத்தக் கூடியதாகும்.

**தட்ப, வெப்பப் பருவ நிலைகளைக் கொண்டு நீர்ப் பாசனம்:**

பொதுவாக, இத்தனை நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும் என்று பரிந்துரை செய்கிறோம். இதில் பருவ நிலைகளைப் பெரிதும் கணக்கில் கொள் வதில்லை. நீர்ப்பாசனத் தேவையையும், நீர் ஆவியாகிச் செல்லக் கூடிய தன்மையையும் கணக்கில் கொண்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சுமார் 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சப்பட்ட வயலில் 104.8 டன்-எக். கரும்பு மகசூலும், இந்த இடை வெளி அதிகமாகும்போது குறைந்த மகசூலும் கிடைத் துள்ளது. இந்த முறையை விவசாயிகள் வெகு எளிதாகப் பின்பற்றலாம். சாதாரணமாகக் கிடைக்கும் 2 கிலோ பாமாயில் டின் ஒன்றை எடுத்துக் கொண்டு அதன் ஒரு புறத்தை வெட்டிவிட்டு, டின்னின் மேலிருந்து சுமார் 10 செ.மீ. விட்டு நீரால் நிரப்ப வேண்டும். நீர் நிற்கும் இடத்தைக் குறித்துக் கொண்டு, பின் இந்த டின்னை வயலில் சமமானதொரு பகுதியில் வைத்துவிட, தினசரி நீர் இதிலிருந்து ஆவியாகி வெளியேறும். ஒரு அழுத்தும் பிளாஸ்டிக் பாட்டிலில் 60 மி.லி நீரைஎடுத்துக் கொண்டு பாமாயில் டின்னில் குறைகிற நீரை நிரப்பிக் கொண்டு வரும்போது பாட்டிலில் என்றைக்கு நீர் முழுதும் இல் லையோ அன்றைக்கு நீர்ப்பாசனம் கொடுக்க வேண்டும்.

**வறட்சிக் காலத்தில் நீர்ப்பாசனம்:**

நீர்த் தட்டுப்பாடுகள் உள்ள பகுதிகளிலும் வறட்சிக் காலங்களிலும் நீர்ப் பராமரிப்பு மிகவும் முக்கியத்துவம் அடைகிறது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) கரும்பு சால்மேடுகளில் சோலை பரப்புதல்

சோலை பரப்புவதால், (10 செ.மீ. உயரம்) நீர் மண்ணிலிருந்து ஆவியாகி வீணாவது தடுக்கப்படுகிறது. இளங்குருத்துப் புழுவின் தாக்குதல் குறைகிறது. களை கள் குறைகின்றன. அனைத்திற்கும் மேலாக 3-4 நீர்ப் பாசனம் குறைகிறது. களிமண் பாங்கான பகுதியில் கரும்பு நட்ட 21வது நாளும் மணற் பகுதிகளில் 3வது நாளும் சோலை பரப்ப வேண்டும்.

ஆ) ஒரு கால் விட்டு ஒரு கால் நீர்ப்பாசனம்:

கரும்புக்கு நீர் பாய்ச்சும்போது ஒருகால் விட்டு ஒருகால் நீர் பாய்ச்சலாம். அடுத்த முறை பாய்ச்சும் போது விடுபட்ட காலில் பாய்ச்சி முன்பு பாய்ச்சிய காலை விட்டு விட வேண்டும். இதனால் கரும்பு மகசூல் மாறுபாடு இல்லையாயினும், நீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க உதவும்.

இ) வெள்ளைக் களிமண் தெளிப்பு:

முன் பருவத்தில் நடவு செய்யப்பட்ட கரும்பு சுமார் 90-100 நாட்கள் வயதுள்ளபோது 6 சத வெள்ளைக் களிமண் கரைசலை இலைகளின் மேல் தெளிக்க வேண்டும். இதனால் கரும்பு மகசூல் குறையாததோடு இரண்டு வாரத்திற்கு ஒருமுறை நீர் பாய்ச்சினாலும் பயிர் பாதிப்பதில்லை.

ஈ) மூரியேட் ஆப் பொட்டாஷ் மேலுரம்:

வழக்கமாக அளிக்கப்படும் மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தைவிட அதிகமாக 250 கிலோ-எக்.கரும்பு நட்ட 120வது நாள் அளிக்க வேண்டும். இது பயிருக்கு வறட்சியைத் தாங்கும் சக்தியை அளிக்கிறது.

நன்செய் நிலங்களில் வறட்சி நிலை பராமரிப்பு:

ஆற்றுப் பாசனப்பகுதிகளில் முன்பே சொல்லியது போல சோலை பரப்பும் முறையைப் பின்பற்றி வறட்சியைச் சமாளிக்கலாம். ஒரு எக்டேருக்கு சுமார் 10 டன் காந்தக் கரும்புச்சோகை தேவைப்படும். நிகர இலாபம் எக்டேருக்கு ரூ. 1665- கிடைக்கிறது.

ஆழ நடவு செய்தல்:

இந்த முறையில் 30 செ.மீ. ஆழத்திற்குச் சாலைகளில் கரும்புக் கரணைகள் நடவு செய்யப்படுகிறது. இதனால் பயிரின் வேர் பூமியின் ஆழத்திற்குச் சென்று அடிமட்டத்திலுள்ள நீரை உறிஞ்ச ஏதுவாகிறது. இதனால் அதிகப்படியான செலவு ஏதுமில்லை.

நீர்த்தேங்கும் பகுதியில் பராமரிப்பு

இம்மாதிரியான பகுதிகளில் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும். வயல் ஓரங்களில் ஆழக் கிடங்கு வெட்டி நீர்த் தேங்கும் காலத்தில் அதன் வழியாக நீரை வடிக்க ஏற்பாடு செய்தல் நன்று.

வடிகால்:

நீர்ப் பராமரிப்பில் இது மிகவும் முக்கியம். கரும்புக்குத் தேவையான நீரை அளிப்பதுபோல அதிகப்படியாக வயலில் தேங்கும் நீரை வடிக்காவிட்டால் பயிர் பாதிக்கப்படும்.

சொட்டு நீர்ப்பாசனம்:

இது மிகச் சிக்கன முறை. சுமார் 50 சதம் நீர் மீதப்படுகிறது. ஆரம்பத்தில் செலவு சற்று அதிகமாயினும், நீண்ட கால நடைமுறையில் இலாபகரமானது.

நீர்ப்பாசனம் என்பது கரும்பு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. சிக்கன முறைகளுக்கு சோலைப்பரப்புதல், ஒரு கால் விட்டு ஒரு கால் நீர்ப்பாசனம், ஆழக் கரும்பு நடுதல், வெள்ளைக் களிமண் தெளிப்பு, அதிகப்படியாக மூரியேட் ஆப் பொட்டாஷ் அளித்தல், ஆகிய முறைகள் சிறந்தவை ஆகும். சொட்டு நீர்ப்பாசன முறை நீண்ட கால கட்டத்திற்குப் பயன் அளிப்பதாகும்.

# தமிழில் அறிவியல் நூல்கள்




சென்னையை அடுத்த சேலையூரில் உள்ள ''பாரத் என்ஜினீயரிங்'' கல்லூரியில் 5.2.89 அன்று 'தமிழில் அறிவியல்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கைத் தொடங்கி வைத்த அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது :

''எந்த ஒரு தொழில் நுட்பமும் அந்தந்த சமுதாயத்தின் தாய் மொழியில் இருந்தால்தான் அது அந்தச் சமுதாயத்திற்குச் சொந்தம் ஆகிறது. நம் தாய் மொழியான தமிழில் இல்லாத தொழில் நுட்பமோ, உயர் கல்வியோ நம் தமிழ்ச் சமுதாயத்திற்குச் சொந்தம் ஆகாது. இதனால் அன்னிய மொழி (ஆங்கிலம்) மேற்படிப்பு 98 சதவீத மக்களைப் போய்ச் சேராது.

ஆகவே, தொழில் நுட்பத்துறை (என்ஜினீயரிங்), மருத்துவத் துறை, வேளாண்மைத் துறைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், தங்களால் முடிந்த அளவுக்கு அவரவர் துறையின் புத்தகங்களைத் தமிழில் எழுத வேண்டும். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழில் புத்தகங்கள் வெளிவந்தால் சாதாரண மக்களும் படித்து அறிவை வளர்க்க முடியும். எனவே, இந்தப் பணியை மாணவர்கள் இப்போதே செய்யத் தொடங்க வேண்டும்.

உலக அரங்கில் வெளி வருகின்ற பல்வேறு மொழிகளில் உள்ள புத்தகங்களை நம் தமிழ்மொழிப் புத்தகங்களோடு ஒப்பிடும் போது, தரத்திலும் சரி-எண்ணிக்கையிலும் சரி எட்ட முடியாத நிலையில் உள்ளோம். ஆகவே, இந்த நிலைமையை மாற்ற இளைஞர் சமுதாயம் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டும்.

''அறிவியலை'' தமிழில் எழுத விரும்புபவர்கள் அவரவருக்குத் தெரிந்த நடையில் எழுதினால் போதும். காலப்போக்கில் அவை செம்மைப் படுத்தப்படும்.''



## மனமே நீவா

ஆசிரியர்: பெரியவர் இராமமூர்த்தி
வெளியீடு; கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன் சாலை,
தியாகராயநகர்,
சென்னை-17

விலை ரூ.15 பக்கம்:192

'நெஞ்சொடு கிளத்தல்' என்று ஒரு துறை நமது இலக்கியங்களில் உண்டு. அதன் அடிப்படையில் இந் நூல் எழுந்துள்ளது. மனம் தெளிவடைவதற்குரிய வகையில் இதனை உருவாக்கியிருக்கிறார் பெரியவர் இராமமூர்த்தி.

அலைபாயும் மனத்தை ஒருநிலையில் நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள நூலாசிரியர், அதற்குரிய வழி முறைகளைச் சான்றுகள் காட்டியும், சிறுகதைகள் வாயிலாக எடுத்துக்காட்டியும், தெளிவுபடுத்தியுள்ளார்.

மன அமைதியும் மகிழ்ச்சியும் மனத்திற்குள்ளேயே மண்டிக்கிடக்க அதை உணராத மனிதன் அவற்றை வேறெங்கேயோ போய்த் தேடி நேரத்தை வீணாக்குவதுடன் ஏமாற்றத்தையும் பரிசாகப் பெறுகிறான் என்னும் கருத்தை, சந்நியாசி ஒருவர், வீட்டுக்குள்ளே தொலைத்த ஊசியை வீதிக்குவந்து தேடுகின்ற கதையைச் சொல்லி எளிதில் புரிய வைக்கிறார்.

ஆன்மிக வாழ்க்கை மன அமைதியைத் தரும் என்பதை விவரிக்கும் ஆசிரியர், அவ்வாழ்க்கை நலமுற அமைவதற்கு, குருநாதர் ஒருவரின் வழிகாட்டுதல் தேவை என்பதைத் தக்கவிதத்தில் நிறுவியுள்ளார்.

வாழும்போது எவ்வளவு செல்வம் சேர்த்தாலும், மறையும்போது மனிதன் எதையும் கொண்டுபோக முடிவதில்லை என்னும் உண்மை ஒரு வங்கிக் காசாளருக்கு வங்கியின் பணம் உரிமையில்லாதிருக்கும் நிலையுடன் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருப்பது மிகப் பொருத்தம்!

மனிதனுக்கு எதிரி, அவனிடம் குடிகொண்டிருக்கும் அகங்காரமே என்பதை எடுத்துரைக்கும் ஆசிரியர் அவ் அகங்காரம் எவ்வளவு பெரிய தடையாக உள்ளது என்பதை ஒரு சிறுகதையின் வாயிலாக, விளக்கி, ''அகங்காரமற்ற அற்புத மனிதனுக்கே ஆன்ம வாசல் திறக்கப்படுகிறது'' என்பதை நிரூபிக்கிறார்.

'பக்தி' என்னும் பண்புக்குத் தந்திருக்கும் விளக்கம் அருமை.

பிரார்த்தனைக்கும் பக்திக்கும் உள்ள தொடர்பு எளிதில் புரியும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது.

நூலின் இறுதியில்''மனமே உறங்கியது போதும், உய்வதற்கு வா!'' என அழைத்து, மனத்துக்கு அறிவுரை கூறுவது இதமளிக்கிறது.

எளிய, இனிய, கவிதை நடை, சான்று காட்டி வலியுறுத்தும் பாங்கு, வாதத்திறன், தெளிவான சிந்தனை ஆகியவை நூலாசிரியருக்குக் கைவந்த கலை என்பதை இந் நூல் நன்கு உணர்த்துகிறது.

—தமிழ்ப்பித்தன்

## வயலும் வாழ்வும்

ஆசிரியர்: சௌபாக்கிய ராமானுஜம்
வெளியீடு: சௌபாக்கியா பதிப்பகம்
687, வீட்டு வசதி வாரியம்,
வேலூர்-632 009.

விலை: ரூ. 15 பக்: 130.

வயல் வளத்தின் வாயிலாக வாழ்க்கையை எப்படிச் செம்மைப் படுத்திக் கொள்ள முடியும் என்பதை மிகவும் நயமாக, சுவைபடக் கூறுகின்றார் ஆசிரியர்.

# நூல் நயம்

அறிவியல் யுகமாக விளங்கும் இன்றைய நாளில் அறிவியல் முறைப்படி பயிர் வளர்க்கும் முறை சொல்லப்பட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாடு மக்களுக்கு மட்டும் அல்லாது பயிர்களுக்கும்தான் தேவை என்று சொல்லும் ஆசிரியர், அதற்கான வழி முறைகளையும் குறிக்கின்றார்.




வாழை, தென்னை போன்ற பல்வேறு மரங்களின் செழிப்புக்கும், நீடித்த வாழ்க்கைக்கும் சிறந்த தரமான பயன்பாட்டிற்கும் பலவிதமான கருத்துரைகளும் வழி வகைகளும் இந்நூலுள் நயம்படக் கூறப்பட்டுள்ளன.

'கென்யாவில் பயிராகும் சிறந்த கரும்பு வகை, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உருவானதே; தாய்லாந்து நாட்டில் தேங்காய் பறிக்கக்குரங்குகள் வாடகைக்கு விடப்படுகின்றன; ஒரு குரங்கு நாளொன்றுக்கு 1000 தேங்காய்களைப் பறிக்கின்றது போன்ற வியப்பிற்குரிய செய்திகளும் இதனுள் இடம் பெற்றிருக்கின்றன.

கறிவேப்பிலை, வெங்காயம், கீரைவகைகள் முதலியவற்றின் சிறப்புகளும், பயன்களும் சொல்லப்பட்டுள்ளன.

வேளாண்மை குறித்த பயனுடைய பல்வேறு செய்திகள், கருத்துரைகள் இந்நூலில் தெளிவாகவும், விளக்கமாகவும் குறிக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உறுதுணையாக அமையும் சிறப்பான நூல் இது.

—மா. ரா. சி.

## ஜனநாயகம் உண்மையும் போலியும்

ஆசிரியர்: மகாத்மா காந்தி.

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம், காந்தி மியூசிய வளாகம்,
மதுரை-625020

விலை : ரூ. 6. பக்: 90.

''மக்களே வேர்கள், அரசாங்கம் பழமாகும். வேர்கள் இனித்தால், பழங்களும் இனிக்கவே செய்யும்''

இது, அண்ணல் காந்தியடிகள் ஜனநாயகத்திற்கு வகுத்த இலக்கணம். 'ஜனநாயகம் என்றால் என்ன?' என்ற வினாவுக்குப் பெரும்பாலோருக்குச் சரியான பொருள் தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்குச் சரியான, விளக்கமான, உண்மையான கருத்துக்களைக் கூறுகிறது இந்நூல்.

''ஒவ்வொருவரும் உரிமைகளை வற்புறுத்தாமல், தம் கடமையை மட்டும் செய்வார்களானால், மாந்

தர் அனைவருக்கும் ஒழுங்கும், கட்டுபாடும் உடனே அமைந்துவிடும்.''

'அகிம்சை முறையில் நாம் சுதந்திரம் பெறுவதற்கு உள்ள ஒரே வழி, பொருளாதாரச் சமத்துவம் எய்துவதுதான்.''

'உண்மையான ஜனநாயகம் என்பது அகிம்சையின் விளைவாகத் தான் உருவாக முடியும் என்று நான் நம்புகிறேன்.''

இப்படி, பலப்பல கருத்துக்கள், ஜனநாயகத்தைப் பற்றி அறிந்து கொள்வார்க்கு, புரிந்து கொள்வார்க்கு அறிவுரையாக - விளக்கவுரையாக உள்ளன.

ஜனநாயகத்தில் தனி மனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஜனநாயகத்தில் உரிமைகளும் கடமைகளும், ஜனநாயகத்தில் வேலை நிறுத்தங்கள் முதலான 25 தலைப்புகளில், ஜனநாயகத்தின் உண்மையும் போலியும் கோடிட்டுக் காட்டப் பெறுகின்றன. சிந்தனை கிளறும் செறிவான நூல்.

– பி.வி.ஜி.

## போதையை ஒழித்திடும் பாதை

ஆசிரியர்: வாசன்
வெளியிட்டோர்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-98

பக்கம்: 83 விலை ரூ.8

இந்த நாகரிக உலகில் போதை மருந்துகளை மாணவர் முதல் பலரும் பயன்படுத்துவது மெள்ள மெள்ளப் பரவிவருவதை அறிகிறோம். இந்தக் கொடிய பழக்கம் மனித உடலை எப்படி ஆட்கொள்ளுகிறது, எவ்வாறு சீரழிக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் எவர்மனமும் அதை நாடாது.

நம் நாட்டிலும், உயிர்கொல்லி நோய்போலப் பரவலாகத் தோன்றிவிட்ட இத் தீய பழக்கம் ஒழிவதுதான் எப்படி என்பதை விளக்கும் புத்தகம் இது. பல்வேறு வகைப் போதைப் பொருட்கள், அவற்றால் உடலுக்கு நேரும் உபாதைகள், அப்பொருள் பயன்படுத்தியோரை இனம்கண்டு கொள்ளும் விதம், அப்பழக்கத்தை அடியோடு கைவிடுவதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை இந்நூல் விளக்குகிறது.

போதை, மருந்துகளால் ஏற்படும் தீங்குகள் பற்றிய முக்கியமான சிலரின் கருத்துரைகளும் இதில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. படித்துப் பயன்பெறலாம்.

—இந்திரன்.

நூல்நயம் பகுதிக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

## காற்றாலை

ஆசிரியர்: டாக்டர் ஆவைவாரி ஆனந்தன்,
வெளியிட்டோர்: பூரம் பப்ளிகேஷன் 59, ராஜூ தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33.

பக்கம்: 63 விலை: ரூ. 5

இந்த இயந்திரயுகத்தில் கூட, ஆற்றலுக்குள்ள மரியாதை அலாதியானதாகவே இருக்கிறது. ஆற்றல் இல்லாமல் எந்த உயிரும் இயங்க முடியாது. அதேபோல இயந்திரங்களுக்கெல்லாம் நிலக்கரி, எண்ணெய் போன்ற ஆற்றல் மூலகங்கள் தேவைப்படுகின்றன.

இந்த இருவிஷயங்களையும் தெளிவாக விளக்கி, காற்றின் ஆற்றலைப் பெற உள்ள அறிவியல் வளர்ச்சி பற்றி விவரிப்பதே இந்த நூல். சிறிய நூலாயினும், எழுத எடுத்துக் கொண்டுள்ள செய்தி பெரியது.

இந்தியாவிலும் தமிழகத்திலும் உள்ள காற்றாலைகள் பற்றியும், நவீன காற்றாலைகளின் பயன்கள் பற்றியும் தக்கபடங்களோடு இந்தக் 'காற்றாலை' நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அறிவியல் ஆர்வமுடையோர் இந்நூல் மூலம் அரிய பல செய்திகளை அறிந்துகொள்ள முடியும்.

—சோழராஜா

## தானியங்களின் மருத்துவக் குணங்கள்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராஜன்
வெளியிட்டோர்; தமிழ்ச்செல்வி நிலையம், 43, சித்திரைக்குளம் வடக்கு தெரு, மயிலாப்பூர், சென்னை-600004.

பக்கம்: 52 விலை: 5

புழுங்கல் அரிசி, பச்சை அரிசி, உளுந்து, கோதுமை முதலாக-வரகு, மக்காச்சோளம், துவரை, கொண்டைக்கடலை, கடலைப் பருப்பு ஈறாக உள்ள 19 வகைத் தானியங்கள் பெற்றிருக்கிற மருத்துவக் குணங்கள் இந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புரதம், கொழுப்பு, தாதுஉப்புகள், சுண்ணாம்பு போன்ற பல சத்துப்பொருட்கள் தானியங்கள் ஒவ்வொன்றிலும் எந்த அளவிற்கு இருக்கின்றன? ஒவ்வொரு தானியத்திலும் எத்தனை வகை உண்டு? அதில் எந்த வகை நல்லது? ஒவ்வொரு வகைத் தானியத்தாலும் எந்தெந்த நோய்கள், உடல் குறைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன? நீக்கப்படுகின்றன? என்ற வினாக்களுக்கான விடைத்தொகுப்பு போல இந்த நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மருந்து, மாத்திரைகள் இல்லாமல் வெறும் உணவு தானியம் மூலமே உடல் நலத்தைக் காக்க முடியும் என்பதை விளக்கும் இந்நூல் படிப்போர்க்குப் பயன்தருவதாக இருக்கும்.

—முடிகொண்டான்.

## 'முப்படை வீரர்களுக்கான சட்டம்'

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர்குழு

வெளியீடு: மணிமேகலைப்பிரசுரம் 4, தணிகாசலம் சாலை தியாகராயநகர் சென்னை-600 017.

விலை ரூ. 14.00 பக்: 177

தரைப்படை, கப்பற்படை, ஆகாயப்படை ஆகிய முப்படை வீரர்களுக்கான சட்டங்களை விளக்குகிறது இந்நூல்.

இச்சட்டங்கள் 1950-ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, அவ்வாண்டிலேயே அமலுக்கு வந்ததிலிருந்துதொடங்கி, படைவீரர்களுக்கான அடிப்படை உரிமைகள், பணி நிபந்தனைகள், இந்தியாவிற்கு வெளியே பணியில் இருக்கும்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள், இறப்புரிமைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், முன்னுரிமை, குற்றங்களும் தண்டனைகளும், கோர்ட் மார்ஷல்- அவற்றின் அதிகாரம் என்று அனைத்துப் பிரிவுகள் பற்றியும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது இந்நூலில். முப்படையில் பணியாற்றுவோருக்கும், பணியாற்ற விரும்புவோருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கலைச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களும் குறிப்பிடப்பட்டிருப்பது இந்நூலை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவியாய் இருக்கும்.

– என். குமாரசாமி

□ *அறிவும், நல்லெண்ணமும் மற்றவர்களை மதிக்கும் மனப் பண்புமே ஒரு ஜனநாயகத்தின் பெருமையினை நிர்ணயிக்கும் அளவுகோல்களாகும்.*

— மில் லெட்ஜ் வீக்

# பலசரக்கு

தற்போது நரிமணம் எண்ணெய் வயலில் இருந்து நாள்தோறும் 320 டன் எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 8 கிணறுகள் தோண்டப்பட்டு எண்ணெய் எடுக்கும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. எண்ணெய் உற்பத்தி அளவு ஆண்டுக்கு 4 இலட்சம் டன்னாக உயரும் என எண்ணெய் மற்றும் நிலவாயுக் கமிஷன் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு தொலைத்தொடர்புத்துறை இந்தியாவிலேயே மிக நவீன 'டெலக்ஸ்' பிரிவைச் சென்னையில் தொடங்கி உள்ளது. இதன் மூலம் கடலில் 10 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவு வரை உள்ள கப்பல்களிடம் கூடத் தொடர்பு கொள்ளலாம். கப்பல்களுக்கு இடையே 'டெலக்ஸ்' செய்திகள் பரிமாறிக் கொள்ளலாம்.

கங்கைகொண்ட சோழபுரம் அருகே மகாதேவ நல்லூர் என்ற இடத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய துர்க்கை சிற்பம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது சோழர் காலத்திய சிற்பம் எனத் தெரியவருகிறது.

இந்த அழகிய சிற்பத்தின் முகம் சேதமடைந்து காணப்படுகிறது. நான்கு கரங்களுடனும், இரண்டு முன் கரங்கள் அபய ஹஸ்தத்துடனும் விளங்கும் இந்தச் சிற்பம் 72 செ.மீ. உயரம் உள்ளது.

இந்திய சுவிட்சர்லாந்து கூட்டுத்தொழில் நுட்பத் திட்டத்தின் கீழ் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகத் தொழில்நுட்ப மையத்திற்குச் சுவிட்சர்லாந்து ரூ. 62 இலட்சம் நிதி உதவி வழங்குகிறது.

இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக மக்கள் தொகையில் பாதிப்பேர் இதய நோயால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது என அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவப் பேராசிரியர் டாக்டர் மோதி எல் ஃகஷ்யாப் தெரிவித்துள்ளார்.

இரத்தத்தில் சேரும் கொழுப்பைக் குறைப்பதன் மூலம் இதய நோய்வராமல் தடுக்க முடியும். இதற்காக பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு நவீன சிகிச்சை முறைகள் தற்போது கையாளப்படுகின்றன. குடிப்பழக்கம், புகைப் பிடித்தல், கட்டுப்படுத்தாத நீரிழிவு நோய், உடல் பெருத்தல், சிறுநீரகக் கோளாறு, உயர் இரத்த அழுத்தம் போன்ற காரணங்களாலும் மாரடைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தாலியிலுள்ள உலகப்புகழ் பெற்ற பைசா கோபுரம் ஆண்டுதோறும் 1.26 மி.மீ. சாய்ந்து வருகிறது. இத்தாலியில் கோடைக்காலத்தில் நிலவும் வறட்சி காரணமாக பைசா கோபுரம் தொடர்ந்து சாய்ந்து வருகிறது என கட்டடக் கலைஞர்கள் எச்சரித்துள்ளனர்.

14ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இந்தக் கோபுரம் 55 மீட்டர் உயரமுடையது. நிலத்தடி நீர் தொடர்ந்து குறைந்து வருவதால் அது சாய்ந்து வருகிறது என அந்நகரைச்சேர்ந்த கட்டடக் கலைஞர் பியூரோ பியூரோட்டி தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு அரசு வழங்கும் புதுச்சலுகைகள்!

வேளாண்மைக்குரிய மின் கட்டணத்தைக் காலம் தாழ்த்திக் கட்டினால் அதன்மீது விதிக்கப்படும் அபராதத் தொகை சம்பந்தமாகச் சில சலுகைகளைத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. கடந்த 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ந்தேதி முதல் மின் கட்டணத்தைச் செலுத்தும் ஒவ்வொரு மாதமும், அதற்கு இணையான நிலுவைத் தொகையும் சேர்த்து வசூலிக்க வழியமைக்கும் ஒரு திட்டத்தை (ஒன் பிளஸ் ஒன் ஃபார்முலா) அரசு அறிவித்திருக்கிறது.

இந்த நிலுவைத் தொகை முழுவதையும் ஏற்கெனவே செலுத்தி விட்ட விவசாயிகளுக்கு மேற்கண்ட அபராதத்தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

இதே போல மாதக் கட்டணம், மாதக் கட்டணத்துக்கு இணையான நிலுவைத்தொகையை வரும் மார்ச் 31-ஆம் தேதிக்குள் செலுத்தினால் அவர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும்.

மின்கட்டணத்தைக் காலம் தாழ்த்தி (தவணை கடந்து) கட்டும்போது அதன்மீது விதிக்கப்படும் அபராதச் சுமை அதிகமாக இருக்கிறது என்று பலதரப்பட்ட விவசாயிகளிடமிருந்து முறையீடுகள் வந்ததையடுத்து இந்தச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

காலம் கடந்த மின்கட்டணத்துக்கான அபராதம் வசூலிப்பதை, வரும் மார்ச் 31ஆம் தேதி வரை தள்ளி வைப்பதாக கடந்த ஆண்டு நவம்பரில் அரசு அறிவித்திருந்தது. பல தரப்பட்ட விவசாயிகளிடமிருந்து வந்த முறையீடுகளையடுத்து மேற்கண்ட சலுகைகளை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் அறிவித்துள்ளார்.

இவை தவிர, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட சிறுவிவசாயிகளுக்கான இலவச மின்சார விநியோகம் தொடர்ந்து நீடிக்கிறது.

இவர்களுடைய நிலங்களுக்கான சான்றிதழ் விஷயத்தில் அதிகாரிகள் அதிக அளவுக்கு வலியுறுத்த வேண்டாம் என்றும் முறையீடுகள் வந்துள்ளன.

சிறு விவசாயிகள், தங்களது நிலம் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பெற்றால் போதும் என்றும் அரசு அறிவித்துள்ளது. முன்பு ஆண்டுக்கு ஒருமுறை சான்றிதழ் பெற்றாக வேண்டும்.



மாணவர் பக்கம்



# அணிலே அணிலே!

அணில், அழகும், ஒயிலும் நிறைந்த ஒரு சிறு பிராணி. இது கொறிக்கும் பிராணிகளின்' வகையைச் சேர்ந்தது. விலை மதிப்புள்ள மென் மயிர்த்தோல் தரும் கொறிக்கும் பிராணிகளில் அணில் முதலிடம் வகிக்கிறது. இதனுடைய நீண்ட வால், மயிர் அடைந்து தினைக்கதிர் போல் காணப்படும். இதற்குக் காதுகள் நீளமாக அமைந்திருக்கும். காதுகளின் நுனியில் மயிர்க் குச்சங்கள் காணப்படும்.

கோடை காலத்தில் இப்பிராணி தான் வழக்கமாக வசிக்கும் ஊசியிலை மரங்களின் அடிக்கட்டை போன்ற செம்பழுப்பு நிறம் கொண்டிருக்கும். இலையுதிர் காலத்தில் இது மயிர் உதிர்க்கும். குளிர் காலத்தில் பல்வேறு சாம்பல் நிறச்சாயல்கள் கொண்ட இன்னும் அடர்த்தியான மயிரால் மூடப்பட்டு விடும். அணிலின் குளிர்காலத் தோலிலிருந்து கதகதப்பும் மென்மையும் எழிலும் உள்ள மென்மயிர்த் தோல் கிடைக்கிறது.

அணிலின் பற்கள் குழிமுயலின் பற்களை ஒத்தவை. இதற்கு நீண்ட கூரிய வெட்டுப்பற்கள் உண்டு. இவற்றால் அணில் கொட்டைகளை சுலபமாக உடைத்து விடும். கடைவாய்ப் பற்களால் இது உணவை மெல்லும். மற்ற கொறிக்கும் பிராணிகள் போலவே, அணிலுக்கும் கோரைப்பற்கள் கிடையாது. வெட்டுப் பற்களுக்கும் கடைவாய்ப் பற்களுக்கும் நடுவே பற்கள் அற்ற இடைவெளி இருக்கும்.

இப்பிராணி காடுகளில்தான் பெரும்பாலும் வசிக்கிறது. மரவாழ்க்கைக்கு இது நல்ல தகவமைப்பைப் பெற்றிருக்கிறது. அணிலின் பின் கால்கள் முன் கால்களை விட நீளமானவை. இது, தாவித் தாவிச் செல்லும். கிளைக்குக் கிளை-

சில சமயங்களில் மரத்துக்கு மரம் கூட அணில் அசாதாரணமானலாவகத்துடன் தாவும்.

மயிர் அடர்ந்த அதனுடைய வால் அப்போது சுக்கானாகவும் ஓரளவு காற்றில் உடலைத் தாங்கிக் கொள்ளும் பாரசூட்டாகவும் பயன்படுகிறது. கூரிய உகிர்கள் கொண்ட இதனுடைய விரல்கள் அடிமரங்களோடு ஒட்டிக் கொள்ளவும் மெல்லிய கிளைகளைப் பிடித்துக்கொள்ளவும் துணை செய்கின்றன.

பீர், பைன் ஆகியவற்றின் விதைகளும், தேவதாருக் கொட்டைகள், கருவாலிக் காய்கள் மற்றும் காளான்களும் அணிலின் உணவு ஆகும். அணில் காளான்களைக் கோடைகாலத்தில் மரங்கள் மேல் தொங்கவிட்டு உலர்த்திக் குளிர் காலத்திற்காகப் பதப்படுத்திக் கொள்ளுமாம்.

பின்கால்களில் இரையைப் பிடித்து அணில் கொறிக்கும் போது பார்க்க மிக அழகாக இருக்கும். மரங்களின் உச்சியிலோ அல்லது அவற்றின் பொந்துகளிலோ இலைகளையும், சுள்ளிகளையும் கொண்டு அணில் கூடு கட்டிக் கொள்கிறது. வீட்டின் சுவரிலும் கூடுகட்டும். குட்டிகளை வளர்ப்பதற்காகவும் பருவநிலை மோசமாக இருக்கையில் காப்புக்காகவும் கூடு பயன்படுகிறது.

—கிருஷ்ணமுத்துராமலிங்கம்

# நல்வழி சென்றிடு

—மோத்தி மு. பாஞ்ச்பீர்


அன்னையும் தந்தையும்
முன்னறி தெய்வம்
ஆசானும் தெய்வமும்
நன்னெறி வடிவம்!

உன்மனம் நல்வழி
சென்றிடும் பருவம்
உனக்கென்றும் ஆகாது
தான் என்ற கர்வம்!

காலையில் எழுந்ததும்
கடவுளை வணங்கு
கடமைகள் செய்ததும்
படித்திடத் துவங்கு!

சீலமும் ஒழுக்கமும்
சிறந்திட நடந்திடு
சீற்றத்தை அடையாதே
பொறுமையைக் காட்டு!





## மிக உயரமான துரப்பண மேடை

உலகின் உயரமான 'பெட்ரோலிய எண்ணெய் துரப்பண மேடை' இது. இதன் மொத்த எடை 50 ஆயிரம் டன்கள். இதன் நீளம் சுமார் 411 மீட்டர்கள். ஆழ்கடலில் இந்தத் துரப்பண மேடையைப் பொருத்தினால், கடல் மட்டத்திலிருந்து இதன் உயரம் 492 மீட்டர்கள் இருக்கும். அதாவது உலகிலேயே மிக உயர்ந்த கட்டடமான 'சியர்ஸ் டவர்' கட்டடத்தைக் காட்டிலும் உயரமானதாக இருக்கும். (இந்தக் கட்டடம் அமெரிக்காவில் சிகாகோ நகரில் உள்ளது.)

இதற்குப் 'புல்விங்கிள்' 'என்று பெயரிடப்பட்டுள்து. (புல்விங்கிள் என்பது அமெரிக்கக் கார்ட்டூன் கதாபாத்திரம் ஒன்றின் பெயராகும்.)

லூசியானா மாநிலம் நியூ ஆர்லியன்ஸ் நகர் அருகே, மெக்சிகோ வளைகுடா பகுதியில், பெட்ரோல் துரப்பணப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக, இந்தத் துரப்பண மேடையைக் கப்பல்கள் இழுத்துச் செல்லும் காட்சியைத்தான் படத்தில் காண்கிறீர்கள். விரைவில் இந்தத் துரப்பணப் பணிகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## இது உங்கள் பக்கம்!

மாணவ மணிகளே!
இது உங்கள் பக்கம்

உங்கள் திறமையை வெளிப்படுத்த இது உதவும். குட்டிக்கதைகள், துணுக்குகள், பாடல்கள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். ஆனால், அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். துணுக்குகள் ஆதாரத்துடன் எழுதப்படல் வேண்டும்.

கல்வியோடு, பிறதுறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர்கள், தங்கள் பாஸ்போர்ட் அளவுப் படத்துடன் தங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். அத்துடன் பள்ளித்தலைமையாசிரியர் அல்லது வகுப்பாசிரியர் கையெழுத்துடன் அனுப்பி வைக்கவேண்டும்.

---

நலமாக வாழ்வதற்குரிய விதிகள் வருமாறு :—

உணவைக் குறை; அதிகமாகக் கடித்துண்
சவாரியைக் குறை; அதிகமாக நட
உடையைக் குறை; அதிகமாகக் குளி
கவலையைக் குறை; அதிகமாக வேலை செய்
சோம்பலைக் குறை; அதிகமாக விளையாடு
பேசுவதைக் குறை; அதிகமாகச் சிந்தி
திரிவதைக் குறை; அதிகமாகத் தூங்கு
வீண் செலவைக் குறை; அதிகமாகத் தானம் செய்
திட்டுவதைக் குறை; அதிகமாகச் சிரி
உபதேசத்தைக் குறை; செயலை அதிகரி.

# மேற்கில் பாயும் மிகை நீரை கிழக்கில் திருப்ப வழிவகுப்போம்

டெல்லியில் தேசிய நீர்வள அமைப்புச் சங்கத்தின் 7-வது ஆண்டுக் கூட்டம் நடந்தது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு (2..2.89) ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:

''நீரைத்தேக்கி வைக்கத் தகுந்த இடங்கள், நதிகளை இணைப்பது பற்றிய பூர்வாங்க அளவைப் பணி போன்ற முக்கியப்பணிகளை இந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது பாராட்டுக்குரிய ஒன்றாகும். எனினும் இந்த வேலைகளின் முன்னேற்றம் எதிர்பார்த்த அளவுக்கு ஏற்படவில்லை. எனவே, இதில் உள்ள குறைகள் மற்றும் இடர்ப்பாடுகளைக் கண்டுபிடித்து அவற்றைக் களைய வேண்டும்.




தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். பல பகுதிகளில் குடிப்பதற்குக்கூட நீர் கிடைக்காமல் மிகுந்த வறட்சியால் பாதிக்கப்பட்டு பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளது. இச்சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 1987-ஆம் ஆண்டிலேயே மேற்கு நோக்கிப் பாயும் நதிகளில் உள்ள உபரி நீரைக் கிழக்கே திருப்புவதற்கான ஆய்வுப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளவும், இந்த ஆய்வுப் பணிகளை ஏழாவது திட்ட காலம் முடிவதற்குள் எடுத்து முடிக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் ஏற்கெனவே விடுக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்திலுள்ள மேற்கு நோக்கிப் பாயும் நதிகளிலுள்ள 28 படுகைகளில் மட்டுமே இந்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளில் கிடைக்கப்பெறும் உபரி நீரைக் கண்டறிந்து மதிப்பிடவும், மேலும் இந்த உபரி நீரைக் கிழக்கே திருப்புவதற்கான செயற்குறிப்புகளைத் தயாரிப்பதற்கும், எஞ்சியுள்ள 24 படுகைகள் சம்பந்தப்பட்ட ஆய்வுப் பணிகளைத் துரிதமாக முடிக்கப்பட வேண்டியதும் மிக அவசியமாகிறது.

இதுகுறித்து ஆய்வுப் பணிகளைத் துரிதப்படுத்தி, குறைந்த பட்சம் 1989ஆம் ஆண்டு மத்தியிலேயே இப்பணிகளை முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இச்சங்கத்தின் தலைவரையும், தேசிய நீர்வள அமைப்பின் பொது இயக்குநரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதன்மூலம், மேற்கு நோக்கிப் பாயும் சித்தார், வைகை நதிகளை இணைப்பதற்கும், வேறு எந்த நதியின் நீரைக் கிழக்கு நோக்கித்திருப்புவதற்குமான, பயன்படக்கூடிய திட்டங்களை உருவாக்க முடியும்.''

தமிழரசு

அடுத்த இதழுடன் (1-3-1989)
இலவச இணைப்பு

தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையின்
மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து
மாண்புமிகு முதல்வர் கலைஞர்
ஆற்றிய உரை (முழு விவரம்)

# நல்வாழ்வு மலர நல்ல நல்ல திட்டங்கள்

பிப்ரவரி 1,2,3 ஆகிய நாட்களில் டில்லியில் நடைபெற்ற மாநில குடும்பநல அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் கலந்து கொண்டார். அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

''தமிழகத்தில் செயல் வேகம் நிறைந்த எங்கள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் புதிய அமைச்சரவை இப்போது தான் 27-1-'89 அன்று பதவி ஏற்றுள்ளது. நாங்கள் பதவியில் இருந்தபோதும் சரி, வெளியில் இருந்தபோதும் சரி, மக்களின்— அதிலும் குறிப்பாக ஏழை எளியவர்களின் நல்வாழ்விற்காகப் பாடுபடுவதே எங்கள் இடையறாக் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

''பதவி ஏற்று சில தினங்களே ஆகியிருப்பதால் இந்தக் குறுகிய காலத்துக்குள் எங்களுடைய அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கப் போதிய அவகாசம் இல்லாமல் போய்விட்டது. கடந்த காலத்தில் புகுந்துவிட்டுள்ள பல குறைபாடுகளைச் சரி செய்து, மக்களை எதிர்நோக்கியுள்ள பல அவசரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது.

''முன்னேற்றம் கண்டுள்ள மாநிலமான தமிழகத்திலேயேகூட கிராமப் புறங்களில் குழந்தைகள் சாவு ஆயிரத்துக்கு 93என்ற விகிதத்தில் இருந்து வருவது வேதனைக்குரியதாகும். இந்தச் சிசு மரண விகிதத்துடன் ஒப்பிடுகையில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 23.6 என்ற விகிதத்தில் உள்ளது. கொள்கையை வகுக்கும்போது இதனால் பல கடுமையான விளைவுகள் ஏற்படக்கூடும்.

''மகப்பேறு காலத்தில் தாய்-சேய் மரணங்களைக் குறைப்பதற்கு நாங்கள் தலையாய முன்னுரிமை அளிக்க விழைகிறோம்.

''வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மகளிருக்கு மகப்பேறுகாலத்தில் மாதம் ரூ. 50 உதவித்தொகை அளிப்போம் என்று எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தத் திட்டத்துக்கு



நாங்கள் செயல் வடிவம் அளிக்க இருக்கிறோம். இது ஒரு புதிய முயற்சியாக அங்கீகரிக்கப்பட்டு, தேசிய குடும்ப நலத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறோம்.

''சுதந்திரமடைந்து 40ஆண்டுகள் ஆகியும்கூட,கிராமப்புறங்களில் ஏற்படும் சிக்கலான பிரசவ கேஸ்களை நகர்ப்புற மருந்துவமனைகளுக்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எதுவும் இல்லாதது கவலைக்குரியதாகும். ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போதுமான ஆய்வுக்கூட சோதனைச் சாலைகள் இல்லை. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் குறைந்த பட்சம் ஒரு வாகனமாவது இருந்தாக வேண்டும்.

இந்தச் சுகாதார நிலையங்களுக்கு அடிப்படையான கட்டட வசதிகளுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். கிட்டத்தட்ட 3,300 துணைச் சுகாதார நிலையங்களை அமைத்தாக வேண்டியுள்ளது. இதெல்லாம் மாநிலத்தில் சொந்த நிதிவசதியைக் கொண்டு செய்து முடிக்கக்கூடிய காரியமல்ல.

''மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொள்கை வழுப்பட்டு, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை எங்கள் அரசு முழு அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. தலைசிறந்த சமூகச்சீர்திருத்தவாதியான தந்தை பெரியார், மாபெரும் இலட்சியவாதியான அறிஞர் அண்ணா, செயல்வேகம் நிறைந்த நமது முதல்வர் கலைஞர் ஆகியோர் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை எப்போதும் ஆதரித்து வந்திருக்கின்றனர்.

''கடந்த இருபது ஆண்டுகளில் தமிழகத்தில் பிறப்பு விகிதம் வேகமாகக் குறைந்து வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அதே சமயத்தில் சிசு மரண விகிதம் அதிகமாக இருந்து வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

''இந்தச் சூழ்நிலையில் குடும்பநலத் திட்டத்துக்காக, தமிழகத்துக்கு அளிக்கப்படும் மானிய உதவிபற்றி சில அம்சங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மானியத்தை ஒட்டுமொத்தமாக (பிளாக் கிரேண்டாக) வழங்க வேண்டும். இதைப் பயன்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் ஒரு விசாலமான வரம்புக்கு உட்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளில் நீக்குபோக்குடன் செலவிட வாய்ப்புகள் இருக்கும் வகையில் நெகிழ்ச்சி காட்டவேண்டும்.

அதேபோல குடும்பநலத் திட்டத்திற்குக் குறிக்கோள்களை நிர்ணயிக்கும் விஷயத்திலும் நீக்கு போக்குடன் நடந்து கொள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

''குடும்பநலத் திட்டங்களின் கீழ், பல்வேறு மாநிலங்களுக்குக் கிடைத்துள்ள மானியங்களை ஆராய்ந்து பார்க்கையில் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. தமிழகத்துக்குச் சராசரி நபர்வரை மானிய அளவு மிகக் குறைவாக உள்ளது. எனவே, கடந்த காலச் சாதனைகளை அடிப்படையாகக்கொண்டு மானிய உதவி அளிக்கப்பட வேண்டும்.

''மத்திய அரசின் 8-வது திட்டத்தில் குடும்ப நலத் திட்டத்துக்கு தலையாய முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். குடும்ப நலத் திட்டத்தின் செலவுக்கான பொறுப்புகளை மாநிலங்களின் தலையில் கட்டாமல், அதில் நிதி ஒதுக்க வேண்டும்.

''உள்ளாட்சி அமைப்புகள் அமைக்கும் துணைச் சுகாதார நிலையங்

வேலை கிடைக்காததால் வேலை செய்யாது இருப்பவர்களுக்குக் கிடைத்திருப்பது 'ஓய்வு' அல்ல-திகைப்பு. வேலை செய்யும் மனப்பான்மையற்றவர்கள் காலத்தைக் கொலை செய்வது 'ஓய்வு' அல்ல — அது சோம்பல். ஆக, யாராவது ஒரு வேலையும் செய்யாது இருக்கும் போது அவர் ஓய்வாக இருக்கிறார் என்று கூறி விடுவது கூடாது.

—பேரறிஞர் அண்ணா

# பல்லவர் கால துர்க்கைச்சிற்பம் கண்டுபிடிப்பு

செங்கற்பட்டு மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம், அழகூர் என்னும் சிற்றூரில் அழகிய துர்க்கைச் சிற்பம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நான்கு கரங்களைக்கொண்டு வலது மேற்கரத்தில் சக்கரமும், இடது மேற்கரத்தில் சங்கும், வலது கீழ்க்கரம் அபய முத்திரை காட்டியும் இடது கீழ்க்கரம் இடுப்பில் வைத்தும் நிற்கின்ற நிலையில் காணப்படும் இச்சிற்பம் பல்லவர் காலத்தைச்சார்ந்ததாகும். பல்லவர் காலத் தலை அம்சங்களாகக் காணப்படும் ஆடை அணிகலன்கள் மற்றும் மார்புக் கச்சை ஆகியவை சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

பல்லவர் காலக் கலைக்கே உரிய தடித்த கை வளையல்கள், தோள் வளை ஆகியவையும் சிறப்பாகக் காணப்படுகின்றன. இத்துர்க்கைச் சிற்பத்தின் பாதப்பகுதி சிதைந்துள்ளது. அருகில் இரு வீரர்கள் துர்க்கைக்குப் பலியிடும் வகையில் தலையை அரிகின்ற காட்சி இடம் பெற்றுள்ளது அவர்களுடைய தலைமுடி அலங்காரமும், துர்க்கையில் கிரீட மகுடமும் பல்லவர் காலக் கலைப் பாணியின் சிறந்த அம்சங்களாகும்.

சிற்பம் இருக்கும் இடத்தில் இருந்து 20 மீட்டர் தொலைவில் விஜயநகரக்காலக் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகிறது. இக்கல்வெட்டு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து சந்திரகிரி ராஜ்யத்தில் செங்கல்பட்டு கோட்டத்தில் திருப்பெரும்புதூரில் உள்ள குலசேகர ஆழ்வாருக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றி குறிப்பிடுகிறது.

அழகூருக்கு அருகில் உள்ள மணிமங்கலம், பல்லவர் காலம் தொட்டு சிறந்த இடமாகத் திகழ்ந்து வந்துள்ளது என்பது கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. அது மட்டுமல்லாமல் அவ்விடத்தில் பல்லவ மன்னன் நரசிம்ம வர்மனுக்கும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கும் போர் நடைபெற்றது என்பதும் யாவரும் அறிந்த ஒன்று. ஆதலால் பல்லவர் காலத்தைச் சார்ந்த இத்துர்க்கைச் சிற்பத்தை மணிமங்கலத்தில் இருந்து இங்கு கொண்டு வந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

களுக்குக்கூட என். ஆர். இ. பி. திட்டத்தின்கீழ் உதவி கிடைப்பதில்லை. இந்த நிலைமை மாற வேண்டும். மத்திய அரசின் பல்வேறு துறைகளிடமிருந்தும் குடும்ப நலத் திட்டத்துக்கு உதவி கிடைக்கும் நிலை ஏற்படவேண்டும்.

"யானைக்கால் ஒழிப்பு திட்டத்துக்காக தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலின் உதவி கிடைக்கச் செய்ய வேண்டும். தொழுநோய் ஒழிப்புத் துறையில் வெற்றி கண்டுள்ள போதிலும் காசநோய் ஒழிப்பிலும் தேக்க நிலை காணப்படுகிறது.

"கண்பார்வை இழப்பை ஒழிப்பதற்காகத் தேசியத் திட்டம் ஒன்று வருவதற்கு முன்பேகூட, 1970-ஆம் ஆண்டு வாக்கில் எங்களது முதலமைச்சர் கண்ணொளி வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்து அமல் நடத்தினார். இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த உறுதி பூண்டுள்ளோம்.

தேசியத் தொழுநோய் ஒழிப்புத் திட்டம் தொடர்பாக ஒரு அம்சத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்தில் தொழுநோய்ப் பிரச்சினை கடுமையாக உள்ளது. குறைந்த பட்சம் 5 ஆண்டுக் காலத்துக்கான திட்டமாகும் இது. எனவே, ஏழாவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட தொழுநோய் ஒழிப்புத் திட்டங்கள் அனைத்துக்கும் எட்டாவது திட்டத்திலும் தொடர்ந்து நூறு சதவிகித உதவி உறுதி செய்யப்படவேண்டும். இல்லையேல், இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றமேகூட பாதிக்கப்படும்.

'எயிட்ஸ்' நோயைப் பொறுத்தவரை சென்னை நகரிலுள்ள எல்லா இரத்த வங்கிகளிலிருந்தும் மாதிரி இரத்தம் பெற்று, சோதனைசெய்து பார்ப்பதற்குப் பொது மருத்துவமனையில் ஏற்பாடு செய்துள்ளோம். இதை எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவ மனைகளிலும் நீடிப்பது பற்றி பரிசீலித்து வருகிறோம்.

"நவீன மருத்துவமுறைகளில் கவனம் செலுத்தும்போது இந்திய மருத்துவ முறைகளை நாம் மறந்துவிடக் கூடாது. எங்கள் தமிழகத்தில்-குறிப்பாக கிராமப்புறங்களில சித்த வைத்திய முறை பிரபலமாக இருந்து வருகிறது. இந்த மருத்துவ முறைகளின் துரித வளர்ச்சிக்காக நாங்கள் பாடுபடுவோம்.

"மருத்துவக் கல்வித்துறையில் சில கவலையூட்டும் போக்குகளைக் காண்கிறோம். மருத்துவப் பட்டப் படிப்பிலும், மேற்படிப்பிலும் அனைத்திந்தியத் தேர்வுகள் அடிப்படையிலும் இத்தனைச் சதவிகிதம் இடம் ஒதுக்கிட வேண்டும் என்று ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது. ஒரு மாநிலம் தனது சொந்த வசதிகளைக் கொண்டு ஏற்படுத்தும் மருத்துவக் கல்லூரிகளில் மொத்த இடங்களையும் எப்படி ஒதுக்க வேண்டுமென்பதில் அதற்கு முழு உரிமை கிடையாது என்ற நிலைமை முரண்பாடானதாகும்.

"எம்.பி.பி.எஸ்., இடங்களை நிரப்புவதில் அண்மையில் நேரிட்ட தாமதங்களும், மேல்படிப்புக்கான நுழைவுத் தேர்வுகளுக்கு ஹால் டிக்கட்டுகள் அனுப்பும் விஷயத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் பார்க்கும்போது, இந்த விஷயம் பூராவையுமே மறுபரிசீலனைசெய்து பழைய ஏற்பாட்டுக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தைத்தான் அவை எடுத்துக் காட்டுகின்றன.

"தமிழகம் மருத்துவப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு இதனிடம் காட்டும் பாராமுகப் போக்கு கவலையளிப்பதாக உள்ளது. பல்கலைக் கழகக் குழு மூலமாகவோ, அல்லது புதிதாக ஒரு குழு அமைத்தோ அந்த மருத்துவப் பல்கலைக் கழகக் குழுவுக்கு உதவ முன்வரவேண்டும்.

"உலகச் சுகாதார அமைப்பின் உதவியுடன், சென்னையில் வெப்ப சீதோஷ்ண நாடுகளின் நோய்கள் பற்றிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சியை சென்னைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டிருக்கிறது. இதற்கும் மத்திய அரசு உதவ வேண்டும்."

## விதை நெல்லுக்கு அளிக்கப்படும் மானியம் உயர்வு

**விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல்லுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் மானியத் தொகை கிலோ ஒன்றுக்கு ரூ. 1-00லிருந்து ரூ. 1.50 ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கோ. சி. மணி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும் 8 மாவட்டங்களில் (செங்கல்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன்) மானிய உயர்வு நடைமுறைப்படுத்தப்படும்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பருத்தி / வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி


இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்
டாக்டர் தமிழ்க்குடிமகன்



மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்
திரு பி. துரைசாமி